103/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 4, 2002

தொகுதி 93, எண் 2

V2,11,31 P02
P02-93-2
2:2777

வெளியீடு 30-11-2000 Issued 30-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 4, 2000 – தொகுதி 93 – எண் 2

**Tuesday the 4th April, 2000 – Volume 93 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

V211,31 P00
D
P00-93-2

222779

## 4-4-2000

### உள்ளடக்கம்

பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 131-169

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 170-314
(ஐந்து மற்றும் ஆறாம் பட்டியல்)

2. **வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்**—தொடர்ச்சி 314-379

திரு. சோ. பாலகிருஷ்ணன் 314-339

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 339-379

3. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 380

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 22, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 4, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு".

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 201, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**201—**

**தனியார்களுக்குச் சலுகை**

***27932—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமத்துவபுரம் பகுதியில் தொழில் மற்றும் பள்ளி, கல்லூரிகள் அமைக்க முன்வரும் தனியார்களுக்குச் சலுகை வழங்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2000 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமத்துவபுரம் பகுதியில் தொழில் மற்றும் பள்ளி, கல்லூரிகள் அமைக்க முன்வரும் தனியாருக்குச் சலுகை வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிபேதமற்ற சமுதாயத்தை அமைக்க அல்லும் பகலும் அயராது பாடுபடும் தலைவர் கலைஞர் அவர்களின் கருவில் உருவான சிறந்ததொரு திட்டமாகிய சமத்துவபுரம் திட்டம் இன்று தனது இலக்கை எட்டியுள்ளது என்பதில் இருவேறு கருத்திற்கு இடம் இல்லை. இருந்தபோதிலும் அந்த சமத்துவபுரத்திலே குடியிருக்கின்ற மக்கள் ஒரு குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. சுமார் 10 கி.மீ. சுற்றளவில் இருந்து வந்து அங்கே குடியேறி இருக்கின்றனர். எனவே அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கும் பொருட்டு தனியார்கள் தொழில் அல்லது கல்லூரிகள் தொடங்க முன்வரும்போது அவர்களுக்குச் சிறப்பாக சலுகைகள் வழங்க அரசு முன்வருமா? அல்லது அப்படிப்பட்ட காரியத்தை, வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரத்தினுடைய உயர்ந்த குறிக்கோள், எந்தக் கிராமத்தில் இருந்து வருகிறார்கள் என்பதல்ல. பல்வேறு சமூக நிலையிலே இருந்து வருகிறவர்கள் ஒரே இடத்தில் ஒன்றாகக் குடியிருந்து பழகுகிற அந்த வாய்ப்பை உருவாக்குவது. அதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிற இடத்தினுடைய அளவு, ஒதுக்கக்கூடிய நிதி, இவற்றுக்கிடையில் அதிலேயே ஒரு பெரிய தொழிற்சாலையோ அல்லது ஒரு பெரிய கல்வி நிலையமோ ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் உருவாக்க இயலாது. அப்படி ஒரு நோக்கம் வருமானால் அடிப்படை நோக்கத்தை பல இடங்களில் நிறைவேற்றுவதற்கு இயலாத சூழ்நிலை உருவாகும். ஆனால் தொடக்கப் பள்ளி அளவிலே பள்ளிக்கூடங்கள் அமைத்திட வழிசெய்யப் படுகிறது. அதற்குப் பின்னர் அந்த மாணவர்கள் வேறு இடத்தில் சென்று பயில்வதற்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். அந்த அளவிலே, ஒரு சிறு அளவிலேதான் அந்த முயற்சி நடைபெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரங்களில் தூய்த தமிழ் தொடக்கப் பள்ளிகளை அரசு சார்பாகத் தொடங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிலே ஆர்வம் எடுத்துக்கொண்டு தொடங்க முன்வருவாரேயானால் இடம் ஒதுக்குவதற்கு மாவட்ட ஆட்சியர் இடத்திலே வேண்டுகோள் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரம் திட்டத்தைப் பொறுத்தவரையில் சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற குறிக்கோளுடன் உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்டு இருக்கின்றது. அப்படியானால் கட்சி பாகுபாடு இல்லாமல் அந்த சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் சமத்துவபுர வீடுகளில் கட்சியினுடைய கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. அவை அரசினுடைய கவனத்திற்குத் தெரியுமா? அப்படி அரசினுடைய கவனத்திற்கு வந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வி? நீங்கள் இடம் கொடுத்த பிறகு யாரும் அந்த வீட்டில் கொடி ஏற்றக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போட முடியுமா? அதில் உங்கள் கட்சிக் கொடி கூட ஏற்றலாம். அதை யாரும் தடை செய்ய முடியாது.

இது கேள்வியே அல்ல.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை இதைப் பற்றிப் பேசியபோது அவருடைய கட்சிக் கொடியையும், அந்த அம்மாவுடைய படமும் போட்ட சுவர் இருக்கிறது, வந்தால் காட்டுகிறேன் என்று நான் சொன்னேன். இப்போது அதை உறுதிபடுத்திச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

வினா எண் 202, திரு. கு. மனோகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**202—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***23983—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

தருமபுரி ஒன்றியம், கடகத்தூர், அதகப்பாடி, மிட்டாநூலஅள்ளி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி ஒன்றியத்தைச் சார்ந்த கடகத்தூர், அதகப்பாடி மற்றும் மிட்டாநூலஅள்ளி கிராமங்களில் மக்கள்தொகை முறையே 1912, 2198 மற்றும் 2652 ஆகும். இக்கிராமங்களில் துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் கடகத்தூர் கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் புலிக்கரை ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் தருமபுரி அரசு மருத்துவமனையும், அதகப்பாடி கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் இன்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும், மிட்டாநூலஅள்ளி கிராமத்திற்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் தருமபுரி அரசு மருத்துவமனையும் செயல்படுவதால் மத்திய அரசின் வரையரையின்படி கடகத்தூர், அதகப்பாடி, மிட்டாநூலஅள்ளி கிராமங்களில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன் இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர், அதகப்பாடி, மிட்டாநூலஅள்ளி இவற்றையெல்லாம் மையமாக வைத்து ஏதாவது ஓர் இடத்திலாவது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் இப்போது இயங்கி வருகின்ற மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏதாவது ஒன்றை 24 மணி நேரமும் இயங்குகிற ஆரம்ப சுகாதார நிலையமாக நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியத்தைச் சேர்ந்த கடகத்தூர், அதகப்பாடி, மிட்டாநூலஅள்ளி ஆகிய இடங்களில் 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டருக்கு அருகிலேயே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனை இருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசாங்கத்தினுடைய



2000 ஏப்ரல் 4]

விதிமுறைகளின்படி அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க முடியாது. மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்றார். தற்போது 250 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. நிதிநிலைமை நல்ல முறையில் தமிழகத்தில் இருந்து, மேலும் வாய்ப்பு கிடைக்குமானால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, ஒரு நாள் கேள்வி நேரத்தின்போது, என்னுடைய தொகுதியில், உளுந்தூர்பேட்டை, ஒன்றியத்தில் ஒரே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இயங்குகிறது, அங்கே மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவை என்றும், அதற்குத் தேவையான நிலம் மற்றும் அரசுக்குச் செலுத்த வேண்டிய பணம் முதலியவற்றை எல்லாம் கொடுத்தாகிவிட்டது என்றும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, அமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியிலே ஒரே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பது துரதிருஷ்டவசமானது, எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். அதை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, அதையூர், ஆசனூர், கிளியூர் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கின்ற காரணத்தால், அந்த மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் நிலத்தையும் கொடுத்து, ரூ.10,000 பணத்தையும் செலுத்தி, ஒவ்வொரு இடத்திலேயும் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாகத் தொடங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் நிச்சயமாக இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அவருடைய தொகுதியிலே ஓர் ஒன்றியத்திலே ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற காரணத்தால், அங்கே புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்தோம். சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இருந்தாலும் மத்திய அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு, 5 ஆரம்ப சுகாதார நிலையங்களைத்

[2000 ஏப்ரல் 4

தொடங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி கிடைத்தால் முதலில் மாண்புமிகு உறுப்பினரின் தொகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுவதற்குக்கூட நிதிநிலைமையைப் பொறுத்துத்தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில்கூட சில இடங்களில் மருத்துவர்களே இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இடையில் அரசு, contract அடிப்படையில் டாக்டர்களை நியமிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்து உத்தரவிட்டிருக்கிறது. டாக்டர்களை நியமிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நேர்முகத் தேர்வுகள் எல்லாம் நடைபெற்றன. அதேபோல, மருத்துவர் இல்லாமல் காலியாக உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்களை நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறதா? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறத்தாழ 750 இடங்களில் மருத்துவர்கள் பணியிடங்கள் காலியாக இருந்த சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, முதலமைச்சர் அவர்கள், தேர்வாணையத்தின் மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியல்கள் தருவதற்குக் காலதாமதம் ஆகும் என்ற காரணத்தினால், அவர்களை ஒப்பந்த அடிப்படையிலே நியமித்துக் கொள்ளலாம் என்று அரசாணை பிறப்பித்து, அதன்படி திருவாரூர் மாவட்டத்திலே அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஏறக்குறைய 18 மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையிலேகூட நியமித்துவிட்டார். ஆனால் மருத்துவர்கள் சங்கத்தினர் (Association) அரசாங்கத்தை அணுகி நாங்கள் இந்த மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலையிலும் கூடுதலாக வேலை செய்து, தேர்வாணையம் பட்டியல் தருகின்றவரையில் அரசாங்கத்தோடு ஒத்துழைப்புத் தருகிறோம் என்றும், வருமுன் காப்போம் திட்டத்திற்கு இரவு 10 மணியானால்கூட நாங்கள் எங்கள் கடமையை ஆற்றுகின்றோம். ஆனால் எந்தக் காரணத்தைக்கொண்டும் டாக்டர்களை ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கக்கூடாது. எனவே அதைப் பரிசீலிக்க



2000 ஏப்ரல் 4]

வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே அரசாங்கத்தோடு நல்ல முறையிலே ஒத்துழைப்புத் தருகின்ற காரணத்தினாலே, அனாவசியமாக அவர்களை அரசுக்கு விரோதமாகத் திருப்பிவிட வேண்டாம் என்று எண்ணி, அந்த ஒப்பந்த முறையை இரத்து செய்து, தேர்வாணையத்திடம் இதை விரைவுபடுத்தும்படிச் சொல்லி, தேர்வாணையம் நேற்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்குப் பட்டியலைத் தந்திருக்கிறது. பத்து அல்லது பதினைந்தாம் தேதிக்குள்ளாக counselling முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அது முடிந்தவுடன், இந்த மாதம் 25 ஆம் தேதிக்குள்ளாக எல்லா மருத்துவமனைகளிலேயும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, அங்கே பணிகளிலே சேருவார்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நமது அரசு பல மருத்துவர்களை நியமித்திருந்தாலும்கூட, Zonal என்ற அந்த அடிப்படையிலே, சிலர் மாறுதல்களைக் கேட்டுச் சென்றுவிடுகிறார்கள். எங்களுடைய மாவட்டம் சேலம் மாவட்டத்தோடு Zonal ஆக இணைக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே நியமிக்கப்படுகின்ற மருத்துவ அதிகாரிகள் சேலம் சென்று விடுகிறார்கள். ஆகவே, தருமபுரி மாவட்டத்திலே சேருகின்ற மருத்துவர்கள் குறைவாக இருக்கிறார்கள். நியமனம் வாங்கிக்கொண்டு ஒருநாள் இரண்டுநாட்கள் வேலை செய்துவிட்டு, மறுநாள் மாற்றலாகிச் செல்கிறார்கள். ஆகவே தருமபுரி தனி Zone-ஆக ஏற்படுத்தப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு தேர்வாணையத்தில், மருத்துவர்களை எங்கே நியமித்தாலும், சில இடங்களுக்குப் போக மறுக்கிறார்கள் என்ற காரணத்தினால் Zonal அடிப்படையிலே தேர்வு செய்யப்பட்டார்கள். அப்படித் தேர்வு செய்யப்பட்டவர்களை 10 ஆண்டுகளுக்கு அந்த Zone-ஐ விட்டு வேறு Zone-க்கு மாற்றக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அதிலேயும் பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, தருமபுரியை விட்டுவிட்டு சேலத்திற்குப்

[2000 ஏப்ரல் 4

போகிறார்களே தவிர, தருமபுரிக்கு மருத்துவர்கள் வருவது இல்லை. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, இந்த முறை தேர்வாணையப் பட்டியல் கிடைத்ததும், மருத்துவர்களை நேரடியாக அழைத்து, யார், யார் எந்தெந்தப் பகுதிக்குச் செல்கிறார்கள் என்று அவர்களுடைய விருப்பப்படியே தேர்வு செய்ய இருக்கிறார்கள். அதன்படி மருத்துவர்கள் விரும்புகின்ற இடத்திற்குப் போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தருமபுரியில் இந்தப் பிரச்சினை நிச்சயமாகத் தீர்த்துவைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 203, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**203—**

**செய்யூர் அனல் மின் நிலையம்**

***24120—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் செய்யூர் அனல் மின் நிலைய திட்டப் பணி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், சென்னைக்குத் தெற்கே செய்யூர் வட்டத்தில் 95 கிலோ மீட்டர் தூரத்தில் 2,888 ஏக்கர் நிலப் பரப்பில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட செய்யூர் அனல் மின் திட்டம் தேசிய அனல் மின் கழகத்தாரால் நிறுவப்படவுள்ளது. தேசிய அனல் மின் கழகத்தாரால், செய்யூர் அனல் மின் திட்ட முதற் கட்டத்திற்கு (1000 மெ.வா.) விரிவான அறிக்கை தயாரித்து அந்தப் பணிகள் நடைபெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மின் திட்டம் இரண்டு கட்டங்களாக நிறுவப்படவுள்ளது. முதற்கட்டப் பணிகள் 48 மாதங்களில் நிறைவுபெறும்.



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1997 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதியில் தளவாடப்பேட்டையிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைத்து ஆறு மாதங்கள் ஆகியும்கூட, இன்னும் தொடங்கப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றி, உடனடியாக அந்த 10 கே.வி. துணை மின் நிலையத்தை விரைவாகத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதே மன்றத்தில் பேசியபோது, அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னேன். துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டுவிட்டது. அதற்கு capacitors போட வேண்டும் என்று மத்திய அரசாங்கம் இப்போது புதிதாக வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள எல்லா துணை மின் நிலையங்களுக்கும் capacitorsஐப் பொருத்திக்கொண்டு வருகிறோம். விரைவிலே அந்தப் பணி முடிந்துவிடும். முடிந்தவுடன் அது இயங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனல் மின் நிலையத் திட்டம் விரைவில் தொடங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டும் என்பதற்காகத்தான் மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, எல்லாவிதமான ஏற்பாடுகளையும் மாநில அரசு செய்து வருகிறது. நிலத்தை ஆர்ஜிதம் செய்துகொடுத்து விட்டோம். ஒரு நாளைக்கு இரண்டு மில்லியன் காலன் தண்ணீர் வேண்டுமென்று சொன்னார்கள். 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பாலாற்றுப் படுகையிலேயிருந்து அந்த நீரை எடுப்பதற்கான ஆணையும் தமிழக அரசாலே பிறப்பிக்கப்பட்டுவிட்டது. coolling water வேண்டுமென்று சொன்னார்கள்.

[2000 ஏப்ரல் 4

அருகிலுள்ள கடலிலிருந்து எடுப்பதற்கான அந்த ஆணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அந்தத் திட்டம் தொடங்குவதற்கு இப்போது Pollution Control Board அனுமதி வழங்க வேண்டும். நான்கு தினங்களுக்கு முன்னாலே வந்தபோதுகூட மத்திய அமைச்சர் நம்முடைய முதலமைச்சரோடு பேசியிருக்கிறார்கள். மத்தியிலே சுற்றுப்புறச் சூழல் அமைச்சராக நம்முடைய அமைச்சர் இருக்கின்ற காரணத்தினாலே அவர்களிடத்திலேயும் அதை நினைவுபடுத்தியிருக்கிறோம். விரைவிலே அதற்கான அனுமதியைப் பெற்று முதல் கட்டமாக 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஒப்புதல் தரத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 204, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**204—**

**கழிவு நீர் வசதி**

***29404—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சி, கதிர்வேல் நகர், மீனாட்சி நகர் 1 முதல் 5-வது தெருக்கள் வரையும், கணபதி நகர் வாசுகி தெரு மற்றும் பராசக்தி நகர் ஆகிய பகுதிகளிலும் கழிவு நீர் சாக்கடை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் முழுமையாக வடிகால் வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2000 ஏப்ரல் 4]

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சிப் பகுதியில் உள்ள கதிர்வேல் நகர், மீனாட்சி நகர் 1-வது தெரு முதல் 5-வது தெரு வரை, கணபதி நகர், வாசுகி தெரு மற்றும் பராசக்தி நகர் ஆகிய பகுதிகளில் 25,000 முதல் 30,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது பேரூராட்சியின் சார்பில் அனைத்து சாலைகளும் புதுப்பிக்கப்பட்டும், கழிவுநீர் சாக்கடைகள் இல்லாத அவல நிலை இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதியாண்டில் அதற்கு நிதி ஒதுக்கப்படும் என்று சொல்லியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை மிக விரைவில் முடித்துத் தர வேண்டுமென அந்தப் பகுதி மக்களின் சார்பில் கேட்டுக் கொண்டு, இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'அதை எடுத்துக்கொண்டு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமைச்சர் அறிவித்திருக்கிறார்' என்று குறிப்பிடுகிறார். நான் சொன்ன பதிலுக்கும், அவர் தெரிவித்திருப்பதற்கும் மாறுபாடு ஏராளமாக இருக்கிறது. எப்படி இருந்தாலும், நடப்பு நிதியாண்டில் கூடுமானவரை—அப்பேரூராட்சியில் உள்ள கதிர்வேல் நகர், மீனாட்சி நகர் 1-வது முதல் 5-வது தெரு வரை, கணபதி நகர், வாசுகி தெரு மற்றும் பராசக்தி நகர் ஆகிய பகுதிகளில் 58 தெருக்கள் உள்ளன. அவற்றில் 31 தெருக்களில் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள தெருக்களில் வடிகால் வசதி செய்ய வேண்டுமானால் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.20 இலட்சம் தேவைப்படுகிறது. நடப்பு நிதியாண்டிலே—பேரூராட்சியை நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அவர்களுடைய சொந்த நிதியிலோ அல்லது வேறு கடன் பெற்றோ—எப்படியோ அவற்றைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 205, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 4

205—

சாலை அமைத்தல்

***27787—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சிகரல அள்ளியிலிருந்து குழிப்பட்டி கிராமத்திற்கு வனத் துறை மூலம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சிகரல அள்ளியிலிருந்து குழிப்பட்டி கிராமத்திற்குச் செல்ல ஏற்கெனவே நடைபாதை உள்ளது. அதை வனத் துறை மூலம் சாலையாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சிகரல அள்ளியிலிருந்து குழிப்பட்டி, கொங்கரப்பட்டி கிராமங்களுக்குச் சென்று விவசாயம் செய்யக்கூடியவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அங்கே தங்கியிருந்தும் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் செல்வதற்கான நடைபாதையானது அடிக்கடி மழையின் காரணமாகவும், காடுகள் வளர்ந்து வருகிற நேரத்தில் தூர்ந்து விடுவதன் காரணமாகவும், போக்குவரத்து மிகவும் பாதிப்பாக இருக்கிறது. அதைச் சுற்றி வர வேண்டுமென்றால், ஒகேனக்கல் சென்று 50 கி.மீ. சுற்றி வர வேண்டியிருக்கிறது. ஆனால் இது மூன்றே கிலோ மீட்டர் தூரம். ஆகவே வனத் துறை மூலமாக அங்கு சாலை புதியதாகப் போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடம் யானைகள் அதிக நடமாட்டம் உள்ள ஒரு பகுதியாகும். இரண்டாவது, காப்புக் காடுகள்



2000 ஏப்ரல் 4]

நிறைந்த பகுதியாகும். எனவே அந்தப் பகுதியிலே சாலைகளை அமைப்பதன் மூலம், வன உயிரினங்களுக்கு ஆபத்து நேரிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது 3 கி.மீ. தூரம்தான், இல்லாவிட்டால் 50 கி.மீ. தூரம் சுற்றி வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிலைமை என்ன என்பதை மீண்டும் ஒரு முறை அரசு பரிசீலித்து, அதற்கு சாத்தியக்கூறு இருக்கும் என்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளில் புதியதாக சாலைகள் போடுவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டும் என்பதிலே ஒரு சில நியாயங்கள் இருக்கலாம். வனப் பகுதிகளிலே மிருகங்கள் இருக்கின்றன. ஆகவே சாலைகள் போடுவதற்குத் தடையாக உள்ளது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஏற்கெனவே பல ஆண்டுகளாக தொழிலாளர்கள் சென்று கொண்டிருந்த சாலைகளை வனத் துறையினர் மூடியிருக்கின்றார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தேனி மாவட்டத்திலே இருக்கின்ற சுருளி அருவிக்குச் செல்லக்கூடிய பாதை பல நூறு ஆண்டுகளாகச் சென்று கொண்டிருந்த பாதை. இது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிற பாதை. தற்போது அது வனத் துறையால் மூடப்பட்டு இருக்கிறது. அதேபோல மேகமலையை எடுத்துக் கொண்டால், அங்கே பல ஆண்டுகளாகத் தோட்டத் தொழிலாளர்கள், செல்லக்கூடிய உணவுப் பாதையும் மூடப்பட்டிருக்கிறது. அவற்றையாவது திறப்பதற்கு வனத் துறை ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நான் ஓரளவிற்கு ஒத்துக்கொள்கிறேன். சில இடங்களிலே காடே இல்லாவிட்டாலும் அது காட்டுப் பகுதி என்று சொல்லி வழிவிட மறுக்கிறார்கள். அந்த conservatism இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி பற்றி என்னிடத்திலே தெரிவிப்பாரேயானால், நானே அதிலே தலையிட்டு ஏதாவது வழி காண முடியுமா என்பதை யோசிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. மு. முபாரக்.

[2000 ஏப்ரல் 4

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையினால் பல இடங்களிலே பொது மக்களுக்கு சாலை, குடிநீர் மற்றும் மின் இணைப்பு பெறுவதிலே தடங்கல் ஏற்படுகிறது. நேற்றைக்குக்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, 'இதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாகச் செய்கிறேன்' என்கிற நல்ல தகவலைத் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்திலேகூட, 'எபநாடு' என்ற பகுதியிலே ஊராட்சி நிதி ஒதுக்கி ஒரு வருடம் ஆகியும், வனத் துறையின் தடையால் அந்தப் பணி நிற்கிறது. Bus stop-க்காக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.45,000 என்னுடைய தொகுதிக்கு ஒதுக்கியும்கூட 'டான்டீ' நிறுவனம் வனத் துறையைக் கேட்டுத்தான் அதைப் போட முடியும் என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதேபோல குயின்சோலை என்கிற இடத்திலே முன்பு வனத் துறை அமைச்சராக இருந்தவரை அழைத்துச் சென்று காண்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** அந்த இடத்திலேயும் தடை இருக்கிறது. பொதுவாக பல விஷயங்களில் பொது மக்கள் பயன்பெறுகிற நிலைகளை ஏதாவது காரணம் சொல்லி வனத் துறையினர் நிறுத்திவிடுகிறார்கள். ஆகவே எல்லா வனத் துறை அதிகாரிகளிடமிருந்தும் எந்தெந்தப் பணி நிற்கிறது, வனத் துறையால் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு அறிந்து, நாடு முழுக்க இந்த நல்ல காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, வனத் துறைக்கு இருக்கிற சட்டம் சாதாரணமானதல்ல. 45,000 ரூபாயை ஒதுக்கிவிட்டு, அதனாலே இந்த வேலை நிற்கிறது என்கிறார். பொதுப் பணித் துறையிலே கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கிவிட்டு, அணை கட்ட முடியாமல் இருக்கிறது. மின்சார வாரியத்தினுடைய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இது மத்திய அரசினுடைய concurrent list-ல் இருக்கிற காரணத்தால், பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இதைக் கொஞ்சம் மென்மையாகத்தான் கையாள வேண்டும். ஆனால் பொதுவாக, அத்தியாவசியமாக மக்களுக்குப் பயன்படுகிற காரியங்களைச் செய்தாக வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அதைத்தான் சொன்னேன். ஒவ்வொரு பிரச்சினையிலும் தனிக் கவனம் செலுத்தினாலொழிய வனத் துறையிலிருந்து இப்படிப்பட்ட காரியங்களைச் சாதிப்பது என்பது சுலபம் அல்ல என்பதை நான்



2000 ஏப்ரல் 4]

அனுபவபூர்வமாக உணர்ந்தவன். ஆகையினால்தான் இருக்கிற பிரச்சினைகளை என்னிடத்தில் சொல்லுங்கள். அதற்கு கூடிப் பேசி ஒரு சுமுகமான முறையிலே வழி காணலாம் என்று சொல்லி இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 206, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**206—**

### பயண வழி உணவகம்

***21636—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை-பெங்களூர் சாலையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஒரு பயண வழி உணவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் செல்லும் பயணிகளுக்கு வழியில் சரியான உணவகம் இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே மறுபரிசீலனை செய்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஒரு நல்ல உணவகம் அமைத்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் செல்கிறபோது உணவிற்காக, கிருஷ்ணகிரியிலே இரவுப் பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன. ஓசூரிலேயும் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் விடுதிகளை அமைக்கிற செயற்குறிப்பு எதுவும் எந்தப் போக்குவரத்துக் கழகத்துக்கும் தற்போது இல்லை.

[2000 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**207—**

**பாலம் கட்டுதல்**

***24076—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கீரக்களூர்-முன்னியூர் இடையில் அடப்பாற்றில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் பாலம் கட்டக் கோரியுள்ள இடத்துக்கு மிக அருகில் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் கான்கிரீட் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. எனவே மேற்படி இடத்தில் புதிய பாலம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, திரு. கோ. தளபதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**208—**

**நான்கு வழித்தடம்**

***26751—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, எல்லிஸ் நகர் பாலத்தை (தினத்தந்தி பாலம்) நான்கு வழித்தடமாக உயர்த்தும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை எல்லிஸ் நகர் பாலத்தை புதிதாகக் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்தியப் பகுதியில் அமைந்துள்ள எல்லிஸ் நகர் இரயில்வே மேம்பாலத்தில் ஏதாவது ஒரு வாகனம் பழுதடைந்து நின்று விட்டால், அன்று முழுவதுமாக போக்குவரத்து பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்தப் பாலத்தை நான்கு வழித்தடமாகவும்—பாலத்தினுடைய மேற்குப் பகுதியிலே எல்லிஸ் நகருக்குச் செல்லக்கூடிய ஒரு பாதையும், தேனிக்குச் செல்லக்கூடிய சாலைக்கு இரண்டு புறமும்—அதேபோன்று கிழக்குப் பகுதியிலே மேலவெளி வீதி ஒருவழிப் பாதையாக இருப்பதால் அந்தப் பாலத்தினுடைய நீளத்தை திண்டுக்கல், திருப்பரங்குன்றம் வரை நீட்டித்து நவீன முறையிலே பறக்கும் பாலமாகக் கட்டித் தருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினத்தந்தி அலுவலகத்திற்கு அருகிலே உள்ள எல்லிஸ் நகர் மேம்பாலம் மிகப் பழமையான பாலம். 1937 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மிகவும் பழுதடைந்து இருக்கிற காரணத்தாலே இதைத் திரும்பக் கட்ட வேண்டும் என்று மத்திய அரசிடத்திலே கேட்டோம். காரணம், அந்தப் பாலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்து இருக்கிறது. மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலை 24-2-1999-ல் வழங்கி இருக்கிறது. ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் மீண்டும் மத்திய அரசு அதைச் செய்ய இயலாது என்று தெரிவித்தது. மறுபடியும் நான் சென்ற 15, 16 தேதிகளில் டெல்லிக்குச் சென்று அதிகாரிகளையும், அந்தத் துறை அமைச்சரையும் நேரில் சந்தித்துப் பேசி இதனுடைய அவசியத்தை வலியுறுத்தினேன். எனவே அதை Central Road Fund திட்டத்திலே செயல்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புக்கொண்டு இப்போது Tender கேட்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதைப் போல அந்தப் பாலத்தை மேலவெளி வீதியைக் கடந்து மேம்பாலமாக அமைத்து திண்டுக்கல் சாலையிலே கொண்டுபோய்ச் சேர்க்கிற வகையிலேயும், அதைப்போல இடதுபுறத்தில் இரயில்வே

[2000 ஏப்ரல் 4

நிலையம் வரையில் கொண்டுபோய்ச் சேர்க்கிற வகையிலேயும் அதற்கு Design, வடிவமைப்பு போடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் Tender கோருகிறபோது alternative designs-ம் நாம் கேட்போம். அவர்கள் கொடுக்கின்ற அந்த மாற்று வடிவமைப்பையும் பார்த்து, நம்முடைய வடிவமைப்பையும் பார்த்து, எது சிறந்தது என்று கண்டறிந்து, அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். நிச்சயமாக அது பறக்கும் பாலமாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 209, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**209—**

**கோயிலைப் புதுப்பித்தல்**

***16030—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம் கோவில்பட்டி மருதப்ப கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) வல்லரசு சார்பில் நீங்கள் கேட்க, அது உங்கள் தொகுதியா? திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதப்பர் கோயில் என்பது நமது பாண்டிய மன்னர்கள் காலத்திலே மிகச் சிறப்பான பல கலை நுட்பங்களோடு கட்டப்பட்ட ஒரு கோயில். இப்போதும் அது ஓரளவுக்கு நல்ல நிலையிலே இருக்கின்றது. அந்தப்



2000 ஏப்ரல் 4]

பழைய கலைச் சிற்பங்களையெல்லாம் போற்றுகின்ற வகையிலே அதைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்தால் மக்கள் எல்லாம் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். அதோடு அந்தக் கோயிலுக்கென்று மானியமாக நிலங்கள் கூட இருக்கின்றன. எனக்குத் தெரிந்த அளவிலே, அந்தப் பகுதி மக்கள் சொன்னது இது. நிலங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருக்கிறதா என்பதையும் அறிவதோடு, மீண்டும் அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து அது பழமையான கோயிலாக கலைச் சிற்பங்களோடு இருக்கின்ற காரணத்தினால், அதைப் புதுப்பித்துத் தர முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதப்பன் என்ற மருதுபாண்டியர் திருக்கோயில் இத்துறையின்கீழ் இல்லை. இந்து அறநிலையத் துறையிலே இணைக்கப்படாமலே தனிப்பட்ட முறையில் இருக்கிறது. கல்வெட்டுகள் ஏராளமாக இருக்கின்றன என்பதனால் கல்வெட்டுத் துறை மற்றும் தொல்லியல் துறை அந்தக் கல்வெட்டுகளை படி எடுக்கிறது. மற்றபடி இந்தக் கோயிலுக்கு எந்தவகையான பூசைகளும் நடைபெறுவதில்லை. இத்திருக்கோயிலுக்கு நன்செய் நிலங்களோ, புன்செய் நிலங்களோ எவையும் இல்லை. சொந்தமான சொத்துக்கள் ஏதும் இல்லாததனால் வருமானமும் இல்லை. என்றாலும் ஒருகால பூசைக்காக எங்களால் உதவி செய்ய முடியும். அதைச் செய்வதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

முற்பகல் 10-00

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களிலே 500 ஆண்டுகள், 1000 ஆண்டுகள் பெருமைபெற்ற, பழமைவாய்ந்த புகழ்பெற்ற கோயில்களில் திருப்பணிகள் செய்ய முடியாமல் இருக்கின்றன. காரணம் அவற்றுக்கு வருமானம் இல்லை. இருந்தாலும் பழநி போன்ற திருத்தலங்களிலே வருகின்ற பணத்தை வைத்துக்கொண்டு, இப்படிப் புகழ்பெற்ற கோயில்களை எல்லாம் கண்டறிந்து, அவற்றிற்குத் திருப்பணி செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

[2000 ஏப்ரல் 4

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நான் ஏற்கிறேன். ஆனால் 1996-க்கு முன்பு ஓராண்டில் 60 என்ற அளவிலும், மற்றோர் ஆண்டில் 65 என்ற அளவிலும்தான் குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் நமது கழக ஆட்சியில், கடந்த ஓராண்டில் மட்டும் 330 கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. இதிலிருந்தே துறை எந்த அளவுக்குக் கவனம் செலுத்துகிறது என்பதைத் தாங்கள் உணர்வீர்கள். அதனால்தான் பெரிய கோயில்களுக்கு சில நேரம் மதிப்பீடு தயார் செய்கிறபோது, நன்கொடையாளர்கள் ஏராளமாக நன்கொடை தருகிறார்கள். அது எளிதாக முடிந்துவிடுகிறது. ஆனால் சிறிய கோயில்களுக்கு என்று தமிழக அரசு 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தருகிறது. அதிலே 32 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கின்றது. இப்போது ஏராளமான ஊர்களில், கன்னியாகுமரியிலிருந்து தொடங்கி சென்னை வரைக்கும் ஏராளமான கோயில்களில் திருப்பணி நடந்துகொண்டு வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் 400, 500 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில்களெல்லாம், இப்போது திருப்பணி செய்ய முடியாமல் சிதைந்து, சீரழிந்துகொண்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களால் நன்கொடை கொடுத்து, அந்தத் திருப்பணிகளைச் செய்ய இயலாத நிலையிருப்பதால்—பல்வேறு துறைகளில் உலக வங்கியின் மூலம் கடன் பெற்று பல்வேறு பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்—அந்த வகையிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலக வங்கியின் மூலம் கடன் பெற்றாவது கிராமப்புறங்களில் இருக்கிற திருக்கோயில்களைச் சீரமைத்து திருப்பணி செய்ய முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணி செய்வதற்கு உலக வங்கி அல்ல, உள்ளூர் வங்கியே கடன் கொடுக்காது. (சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், உங்களுக்கும், கோயிலுக்கும் என்ன தொடர்பு? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றுமில்லை. இப்பொழுது நடைபெற்று வருகிற துணை வினாக்கள்,



2000 ஏப்ரல் 4]

மற்ற விஷயங்களைப் பார்க்கிறபோது, கோயில்களிலே இருக்கின்ற தெய்வம், தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள இயலவில்லையே, இவர்கள் எப்படி மக்களைக் காப்பாற்றுவார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. வரலாற்றில் என்ன நடந்திருக்கிறது என்றால், தெய்வம்தான் மனிதனைப் படைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்று சொன்னால், வரலாற்றில் மனிதன்தான் தெய்வத்தை உருவாக்கியிருக்கிறான். ஒவ்வொன்றையும் மனிதனே செய்ய வேண்டி இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புவது, அந்தந்தக் கோயில்களின் ஆற்றல் உள்ள கடவுள்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள இயலவில்லையே, அந்தக் கோயில்களில் உள்ள தெய்வங்கள் எப்படி நாட்டைக் காப்பாற்றும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்பிக்கை இல்லாத சுப்பராயன் அவர்களையே தெய்வம்தான் காப்பாற்றுகிறது. (சிரிப்பு) திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கக்கூடிய கோயில்களை திருப்பணி செய்வதற்காக அரசு 25 ஆயிரம் ரூபாயை வழங்கிக்கொண்டிருக்கிறது. இந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால், முழுமையாகச் செய்ய முடியவில்லை. கிராமங்களில் விவசாயிகளும், கூலித் தொழிலாளர்களும் அதிகம் இருக்கிற காரணத்தால், அவர்களால் வசூல் செய்து, பெரிய அளவில் கோயிலின் திருப்பணியைச் செய்ய இயலவில்லை. எனவே 25 ஆயிரம் ரூபாய் என்பதை, 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** திரு. சுப்பராயன் கேட்ட கேள்விக்குப் பதில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே கோயில்களுக்கு மொத்தத்தில் நிதி ஒதுக்கப்படுவது இல்லை. பழநி கோயில் என்று சொன்னால், அந்த பழநி கோயிலினுடைய நிதி, வருவாய் முழுவதும் அந்தக் கோயிலைச் சுற்றி வருமே தவிர, தனிப்பட்ட வேறு கோயிலுக்கு வழங்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதில்லை. என்றாலும், அதுபோன்ற பெரிய கோயில்களிலிருந்து கடன் பெற்றுத்தான் வேறு சில பணிகளுக்குத்

[2000 ஏப்ரல் 4

தருகிறோம். அந்தப் பணி நிறைவுபெற்ற பிறகு, கடன் திருப்பிச் செலுத்தப்படுகிறது. இல்லாவிட்டால் ஒரு காலத்தில் பழநி கோயிலே வற்றிவிடும். அதேநேரத்தில் சிறிய கோயில்கள் என்று ஏராளமானவை இருக்கின்றன. நம்முடைய துறையின்கீழ் 36,324 கோயில்கள், அறக்கட்டளைகள், சமணக் கோயில்கள் என்று அனைத்தும் அடங்குகின்றன. இதிலே ஏற்கெனவே ஆயிரத்திற்கும் குறைவான வருமானம் உள்ள கோயில்கள் என்பவை கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன. ஒரு கோயிலில் குறைந்தது ஒரு காவலர், ஓர் ஓதுவார் என இரண்டு பேரை பணியமர்த்தினால்தான் அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறும். எனவே இந்த ஆயிரம் ரூபாய் என்பது அதற்கே போதாத நிலைமை. அதனால்தான் சிறிய கோயில் என்றால் சிறிய அளவிலே திருப்பணி செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாய் என்று பல கோயில்களுக்கு அரசால் வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல. ஒருகால பூசையே நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் எழுந்த காலத்தில் தமிழக அரசு, கடந்த 1996-க்கு முன்னால் பல கோயில்களுக்கு வழங்கியிருந்தாலும், இந்த 2,3 ஆண்டுகளில் மட்டும் 1756 கோயில்களுக்கு ஒருகால பூசைக்கு நிதி ஒதுக்கியிருக்கிறது. ஆக மொத்தம் 8010 கோயில்களுக்கு ஒருகால பூசைக்கு என்று தனி நிதி ஒதுக்குகிறது. பிறகு ஆதிதிராவிடர் கோயில்களுக்கு என்று நூறு, நூறு கோயில்களாக ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்குகிறோம். அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்டோர் கோயில்கள் என்று பல கோயில்களுக்கு ஒதுக்குகிறோம். இதுதான் நடைமுறையில் உள்ள நிலை.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**210—**

**நியாய விலைக் கடை**

***27606—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, நுள்ளிவிளை கூட்டுறவு நியாய விலைக் கடையைப் பிரித்து வடக்கு பேயன்குழியில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் காரக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்பட்டு வரும் நுள்ளிவிளை நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள 1,382 குடும்ப அட்டைகளிலிருந்து 306 குடும்ப அட்டைகளைப் பிரித்து, கொன்னக்குழிவிளை என்ற இடத்தில் ஒரு மகளிர் துணை நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கடையிலுள்ள எஞ்சிய குடும்ப அட்டைகளில் 322 குடும்ப அட்டைகளைக் கொண்டு வடக்கு பேயன்குழி என்ற இடத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க 28-4-1999 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இக்கடை தற்போது செயல்பட்டு வருகிறது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியப்படக்கூடிய நியாயமான கோரிக்கைகளை கேள்வி நேரம் மூலமாகவே நிறைவேற்றித் தந்திருக்கிற அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கடை, பகுதி நேரக் கடையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை முழு நேரக் கடையாக ஆக்க அரசு ஆவன செய்யுமா? பக்கத்து ஊரிலுள்ள சில குடும்ப அட்டைகளைக்கூடச் சேர்த்தால், முழு நேரக் கடையாக ஆகக்கூடிய அளவுக்கு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அதை முழு நேரக் கடையாக ஆக்கித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின் பிரகாரம்தான் திறந்துகொண்டிருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு இடத்திலும் முழு நேரக் கடை என்றால், ஒரு விற்பனையாளர், ஒரு கட்டுநர் என்று நியமித்தால் கூடுதலாகச் செலவு வரும். எனவே 400 அட்டைகள் இருந்தால்தான் முழு நேரக் கடை திறக்கப்படும். அதற்குக் குறைவாக அட்டைகள் இருந்தால், பகுதி நேரக் கடைகளாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது.

[2000 ஏப்ரல் 4

சமத்துவபுரத்திலே வாழ்கிற மக்களுக்குக்கூட குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்திலே அதிகமான நபர்களுக்கு இன்னும் குடும்ப அட்டை வழங்கப்படவில்லை. அவை விரைவிலே வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி அட்டைகளைக் களைந்து உண்மையான நபர்களுக்கு வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் தமிழக அரசு முப்பது கோடி ரூபாய் செலவிலே புதிய அட்டைகள் வழங்குகின்ற அந்தப் பணியைத் தொடங்கியது. மத்திய அரசு தற்போது சமீபத்தில் எடுத்த கணக்கீட்டுப் பிரகாரம், தமிழ்நாட்டில் 1,42,00,000 குடும்பங்கள்தான் இருக்கின்றன. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மூத்த மகன் திருமணம் முடிந்து அந்தக் குடும்பத்திலே இணைந்திருந்தாலும்கூட, அந்த மூத்த மகனுக்குத் தனியாக அட்டைகள் வழங்கலாம் என்று சொல்லிய காரணத்தால், 1,57,00,000 அட்டைகள் இப்போது வழங்கப்பட்டிருக்கின்றன. இப்போது கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் அட்டைகள் மட்டும்தான் எங்களிடம் நிலுவையில் இருக்கின்றன. அந்த இரண்டு இலட்சம் குடும்ப அட்டைகளையும் மீண்டும் மீண்டும் சரிபார்த்துத் தருகின்ற பணியை இப்போது நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். காரணம், கேட்டவுடனே வழங்கிக்கொண்டே வருவோமானால், உண்மையாகக் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்காமல், போலியாக உள்ள நபர்கள் ஏதோ செல்வாக்கை வைத்து அட்டையைப் பெறுகிறார்கள். அதனால்தான் அதை சரிபார்த்துத் தருகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவிலே சரிபார்த்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 211, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**211—**

**பால் கூட்டுறவு ஒன்றியம்**

***27937—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டத்தில் புதியதாக பால் கூட்டுறவு ஒன்றியம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 4]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில் புதியதாக பால் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கும் கருத்துரு தற்சமயம் ஏதுமில்லை.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மிகக் குறைந்த அளவிலே இயங்கி வருகின்றன. அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுத்துவிட்டார்கள் என நினைக்கிறேன். தனியார் நிறுவனங்கள் கரூர் மாவட்டத்தில் மிக அதிக அளவிலே போட்டி போட்டுக்கொண்டு பால் விற்பனை செய்து வருகிறன்றன. முன்பணம் கொடுப்பது போன்ற சலுகைகளைக் கொடுத்து கொள்முதல் செய்து வருகிறார்கள். ஆவின் நிறுவனமும் முன் பணம் கொடுப்பது, உரிய நேரத்தில் பணம் கொடுப்பது போன்ற சலுகைகளைச் செய்து அதிக அளவில் கொள்முதல் செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனம் போல், ஆவின் நிறுவனம் முன்பணம் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக ஒன்றியம் அமைக்க இயலாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**212—**

**வேலைவாய்ப்பு நிறுவனங்கள்**

***27961—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு அனுமதியுடன் இயங்கி வரும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றின் மூலம் பயனடைந்தோர் எத்தனை பேர்?

[2000 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அயல்நாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்காகத் தமிழ்நாட்டில் மத்திய அரசின் அனுமதி பெற்று சுமார் 180 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில், அதாவது 1994 ஆம் ஆண்டு முதல் 30-6-1999 வரை சென்னையில் இயங்கும் குடிபெயர்வோர் பாதுகாவலரின் தடை நீக்கம் பெற்றுப் பயனடைந்தோர்களின் எண்ணிக்கை 2,13,800 பேர் ஆகும்.

முற்பகல் 10-10

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதி பெற்று இயங்குகின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் என்று ஒரு பக்கம் இருந்தாலும், அனுமதி இல்லாமல் வெறும் Board-ஐ மட்டும் வைத்துக்கொண்டு ஏமாற்றுப் பேர்வழிகள் இப்போது அதிகமாக இருக்கிறார்கள். இதன் காரணத்தால் தமிழகத்தில் மிக அதிகமான மக்கள் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள். அரசுகூட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை இயக்கிக்கொண்டிருக்கிறது. அதில் வருகின்ற வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே, போலி நிறுவனங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவற்றை ஒழிக்கவும், அரசு மூலம் நடத்தப்படுகின்ற வெளிநாட்டு நிறுவனத்தின் வாயிலாக இன்னும் அதிகமான அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையிலே ஆவன செய்யவும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை நம்மவர்கள் பெறுவதற்காக இந்த Corporation உருவாக்கப்பெற்றது. கடந்த ஆண்டுகளில் 5,328 நபர்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தந்திருக்கிறது. Passport Clearance மற்றும் விமான டிக்கெட் பெறுவது போன்ற பணிகளையெல்லாம் இது செய்கிறது. எட்டு இலட்சம் ரூபாய் லாபத்திலே இயங்குகிறது. இந்த அமைப்பு பற்றி விளம்பரங்கள் இங்கேயும், வெளிநாடுகளிலும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே இதைப் பலரும் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் நீங்கள் கேட்பதுபோல, சில முறையற்ற கம்பெனிகள்



2000 ஏப்ரல் 4]

மக்களை ஏமாற்றுகின்ற விதத்திலே தவறான—காரியங்களில் ஈடுபட்டால் அரசின் கவனத்திற்கு வந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதி பெற்று அயல்நாட்டில் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற கம்பெனிகளைப் போன்று வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு அளிப்பதாகக் கூறி தனியாக நிறுவனத்தை ஆரம்பித்திருக்கின்றவர்கள் பல இலட்சம் பேர்களிடம் பல இலட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்து, வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு தருவதாகக் கூறி ஏமாற்றுகின்றார்கள். ஆகவே இவ்வாறு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு அளிக்கின்ற கம்பெனியை புதியதாக ஆரம்பிக்கின்றவர்கள் அரசிடம் அனுமதி பெற்று ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு ஆணை வழங்குமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிபெயர்வு விதிமுறைகள் உள்ளடக்கிய குடிபெயர்ப்புச் சட்டம், 1983 என்று ஒரு சட்டமே இருக்கிறது. மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் Travels போன்ற தனியார் கம்பெனிகள் இந்தப் பணிகளில் ஈடுபட முடியும். இதை மீறிச் செய்தால் அவர்கள் Criminal குற்றத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலிருந்து குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அயல்நாடுகளில் வேலையில் அமர்ந்துவதாகச் சொல்லி அழைத்துச் செல்லப்பட்டு ஏமாற்றுகிறார்கள். அவர்கள் தாலியை விற்று வீட்டில் இருக்கின்ற கொஞ்சநஞ்சம் சொத்து சுகங்களை விற்று, இங்கே வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தால், அயல்நாடுகளுக்குச் செல்கின்றார்கள். இங்கேயிருந்து அழைத்துச் செல்கின்றபோது சொல்வது ஒரு வேலை, அங்கே சென்றபிறகு கொடுப்பது வேறு ஒரு வேலை. ஆகவே வேலையின் காரணமாக சென்ற அவர்கள் மிகவும் நலிவுற்ற நிலையிலே கொடுத்துச் சென்ற காசைக்கூட ஈட்டி வர முடியாமல், பாதியிலே திரும்பி வந்துவிடுகிறார்கள். எனவே அயல்நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்கு அனுப்புகின்ற நிறுவனங்களை அரசே

[2000 ஏப்ரல் 4

ஒழுங்குமுறைப்படுத்துமா? சொல்கின்ற வேலை ஒன்று, அங்கேபோய் தருகின்ற வேலை ஒன்று என்று ஏமாற்றும், இந்தமாதிரி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அவர்கள் இழந்த காசுகளை மீட்டுத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, சட்டத்திற்குட்பட்டு செயல்படாதவர்கள்மீது புகார் கொடுக்கப்படுகின்றபோது நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேநேரத்தில், வேலை உறுதி குறித்தும் அங்கு சென்றதற்குப் பிறகு அவர்கள் சரியாக நடத்தப்படுகிறார்களா என்பது குறித்தும் தூதுவர் அலுவலகத்தோடு தொடர்புகொண்டு முறையாகக் கட்டணமும் நிர்ணயித்து செயல்படுவதுதான் இந்த Overseas Manpower Corporation-னின் பணி, ஆனால் தனியார்கள் இதை ஒரு வியாபாரமாக்கி கொள்ளை அடிக்கிறார்கள் என்பது உண்மை. பலபேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுத்த நேரங்களில் எல்லாம் அரசும், காவல் துறையும் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு தருவதற்காக அரசாங்கம் நடத்துகின்ற Corporation முறையாக நடந்தாலும், ஒவ்வொரு காவல் நிலைய எல்லைக்குள்ளும், தனியார் ஒருசாரார் அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, ஆயிரக்கணக்கான ரூபாயைக் கொள்ளை அடிக்கின்ற ஒரு நிலை தமிழ்நாடு பூராவிலும் இருக்கிறது. எனவே ஒரு புகார் வருகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவரோ, இல்லையென்றால், மாவட்டக் காவல் துறையின் உயர் அதிகாரிகளோ அல்லது அந்த வட்டத்தில் இருக்கின்ற காவல் துறையோ அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான், இந்தக் கொடுமையை நாம் தடுத்து நிறுத்த முடியும். அந்த வகையிலே அரசாங்கம் முறையான நடவடிக்கை மேற்கொள்வதோடு, அரசாங்கத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு நம்முடைய நபர்களை அனுப்புகின்ற நிறுவனத்தை இன்னும் அதிகப்படியாக விஸ்தரித்து, அதற்குரிய விளம்பரங்கள் செய்து தருவதன் மூலமாகத்தாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதை அரசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மத்திய அரசினுடைய அனுமதி பெற்ற நிறுவனங்கள்தான், முகவர்கள் (agents) தான் இந்தப் பணியைச் செய்ய முடியும். அப்படி அனுமதி பெற்றவர்கள்கூட முறையாக நடக்காமல் தவறு செய்வார்களேயானால், சட்டத்திற்குட்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதுபோல, பல நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, பெரிய விளம்பரங்கள் கொடுத்து, அழைத்துச் சென்று அங்கு வேலை இல்லாமல் பல்லாயிரக்கணக்கான பேர், சிங்கப்பூர், மலேசியா மற்றும் மேற்கத்திய நாடுகளிலுள்ள சிறைகளிலே வாடிக்கொண்டிருப்பதை அரசு அறியுமா? அவர்களுடைய எண்ணிக்கையைப் பற்றி அரசு அறியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இதுகுறித்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்று ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்காக, சரியான முறையில் நடைபெறாத Agency-கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரை எத்தனை நிறுவனங்கள்மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதற்கு தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *213*, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 4

**213—**

**நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

***31001—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, பழங்கோயில் கிராமத்தில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க விண்ணப்பித்துள்ளனரா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பழங்கோயில் கிராமத்தில், திருமுருக கிருபானந்தவாரியார் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் பிரேரணை பெறப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ், இச்சங்கத்தை ஓர் அங்கத்தினராக சேர்த்துக் கொள்ள 5-11-1999-ல் இசைவு தெரிவித்துள்ளது. ஆனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கும் மத்திய கூட்டுறவு வங்கியின் இசைவின்றி புதிய சங்கம் பதிவு செய்ய இயலாது என்பதால், மத்திய கூட்டுறவு வங்கியின் இசைவு பெறப்படாத நிலையில் மேற்படி சங்கத்தினை பதிவு செய்வது நிலுவையில் உள்ளது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் ஓய்வூதியமோ அல்லது இயற்கைச் சீற்றத்தின் காரணமாக அரசு தருகின்ற நஷ்ட ஈட்டையோ பெற வேண்டுமென்று சொன்னால், சங்கம் பதிவு செய்யப்பட்டு, அதிலே உறுப்பினராக இருந்தால்தான் அந்தப் பலனை அவர்கள் பெற முடிகின்ற ஒரு நிலை உள்ளது. அதன் காரணமாக அங்கே சங்கம் தேவைப்படுகிறது. அந்த கிராமம் பூராவுமே நெசவாளர்கள் இருக்கின்ற கிராமம் ஆகும். அதனால் பழங்கோயில் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டு, ஒத்துக்கொண்டிருக்கிற அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினை அரசு விரைவாகப் பதிவு செய்து, நெசவாளர்கள் பலன் பெறுகின்ற நிலையை ஏற்படுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறையின் சார்பிலே அதற்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது. ஆனால் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய இசைவு பெறப்பட வேண்டும். பலமுறை நினைவூட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறோம். நிச்சயமாக விரைவில் திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியின் ஒப்புதலின்பேரில் அவர்களுடைய சங்கம் பதிவு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 214, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-20*

**214—**

**மீனவர்களுக்கு மனைப் பட்டா**

***14954—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக் கரை ஊராட்சியிலுள்ள மீனவர்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக் கரை ஊராட்சியிலுள்ள மீனவர்களிடமிருந்து குடியிருப்பு மனைப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பங்கள் அரசுக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே இந்த மீனவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 215, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 4

**215—**

**பள்ளிக்குச் சமையல் கூடம்**

***17699—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எலவம்பட்டி ஊராட்சி, நத்தக்காட்டனூர் பள்ளிக்குச் சமையல்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எலவம்பட்டி ஊராட்சி, நத்தக்காட்டனூர் பள்ளி சத்துணவு மையத்திற்கு சமையல் கூடம் கட்ட 1999-2000-ல் ரூ.42,000 மதிப்பீட்டில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 216, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**216—**

**காமராஜர் நினைவகம்**

***32637—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லத்தை அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 ஏப்ரல் 4]

கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவகத்தில் நுழைவு வளைவு அமைத்தல், பூங்காக்கள் மேம்படுத்துதல், புல்வெளிகள் அமைத்தல், மின்விளக்கு வசதி செய்தல் ஆகிய பணிகளை ரூ. 15 இலட்சம் செலவில் மேற்கொண்டு அழகுபடுத்தப்பட்டு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டியிலுள்ள காமராஜர் நினைவு இல்லத்திற்கு தற்போது புதிய அலங்கார விளக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் சென்னை கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணாவினுடைய நினைவகம் மற்றும் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவகத்திற்கு இணையாக காமராஜருடைய நினைவகம் இல்லையே என்பதுதான் எங்களுடைய வருத்தம். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்கிற உங்களுக்கு எம்.ஜி.ஆர். நினைவகத்தைப்போல, பேரறிஞர் அண்ணா நினைவகத்தைப்போல, காமராஜர் நினைவகத்தையும் அழகுபடுத்துகிற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதை அழகுபடுத்துகின்ற முயற்சிகளின் முதற்கட்டமாகத்தான் இந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் எம்.ஜி.ஆருக்கும், அண்ணா அவர்களுக்கும் கன்னியாகுமரியிலே காமராஜருக்குக் கட்டப்படுவதுபோல மணிமண்டபம் கட்டப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அழகிரிக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இடத்தை பொதுமக்கள் பார்க்கிற அளவிலே விரிவுபடுத்துவதற்கும் அழகுபடுத்துவதற்கும் வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-11-1975 அன்று விருதுநகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் இல்லத்தை, நினைவு இல்லமாக மாற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்து இருக்கிறார்கள்.

[2000 ஏப்ரல் 4

அதுமாத்திரமல்லாமல் அங்கே பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, பொதுமக்களுடைய பார்வைக்காகவும் அந்த இடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல் தியாகராய நகரிலுள்ள காமராஜர் நினைவு இல்லத்தில், இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு சுமார் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகளை மேற்கொண்டு, இப்போது அங்கேயும் சிறப்பாகப் பராமரித்து வருகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கன்னியாகுமரியிலே மணிமண்டபம் கட்டுவதோடு மட்டுமல்லாமல் கிண்டியிலே இருக்கிற பெருந்தலைவர் காமராஜர் நினைவகத்திற்கு முன்னால் நீண்டநெடுங்காலமாக இருந்த அவல நிலையை மாற்றி, மார்பளவு பெருந்தலைவர் காமராஜர் சிலையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே திறந்து வைத்து சிறப்புச் சேர்த்து இருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் அண்மையிலே நடைபெற்ற மகளிர் தின விழாவில் பெருந்தலைவர் காமராஜரைப் பெற்றெடுத்த அன்னை சிவகாமி அம்மையாருக்குப் பெருமை சேர்க்கிற வகையில், இரு குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அன்னை சிவகாமி அம்மையாருடைய பெயரைச் சூட்டிப் பெருமை சேர்த்து இருக்கிறார்கள். ஆக எல்லா வகையிலேயும் காமராஜருக்குப் பெருமை சேர்த்திருக்கிற ஒரே ஒரு தலைவராக நம்முடைய முதலமைச்சர் கலைஞர்தான் திகழ்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 217, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**217—**

**கால்நடைக் கிளை நிலையம்**

***27748—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆயலவாடி கிராம கால்நடைக் கிளை நிலையக் கட்டடம் கட்டியும் கிளை நிலையம் இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயங்கும்?



2000 ஏப்ரல் 4]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி கோட்டத்தில் ஆயலவாடி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலர், நடமாடும் கால்நடை மருந்தகமாக பயன்படுத்திடும் பொருட்டு கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கால்நடைக் கிளை நிலையம் தற்போது நல்ல நிலையில் இயங்கிவருவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அதை கால்நடை மருந்தகமாக உயர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமை மற்றும் தகுதிகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 218, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

**218—**

**ஊனமுற்றோர் தொழிற்கூடம்**

***23025—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் உடல் ஊனமுற்றோர் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் உடல் ஊனமுற்றோருக்காகத் தொழிற்கூடம் அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 4

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு ஒன்றியத்தில் இல்லாவிட்டாலும் திருவண்ணாமலை மாவட்டத் தலைநகரில் உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு தொழிற்கூடம் அமைத்து, அந்தத் தொழிற்கூடத்திலே உடல் ஊனமுற்றவர்கள் பணிபுரிந்து, அதன் மூலம் சம்பளத்தைப் பெற்று தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொள்வதற்கு ஏதுவாக மாவட்ட அளவில் ஒரு தொழிற்கூடம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா? அப்படி இல்லையென்றால் தொழிற் பயிற்சி நிலையமாவது தொடங்கி அதன்மூலம் தொழிற் பயிற்சி பெற்று, பின்னர் தொழில் தொடங்கி தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு, சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை மறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையமாவது உடல் ஊனமுற்றவர்களுக்காகத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களில் பார்வையற்றவர்களுக்கு பூவிருந்தவல்லியிலும், செவித்திறன் குறை உடையவர்களுக்கு சென்னையிலும், உடல் ஊனமுற்றவர்களுக்கு கிண்டியிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பயிற்சிகள் மூலமாக அவர்கள் தகுதியுள்ளவர்களாக ஆக்கப்படுகின்ற நேரத்தில் வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலமாகத்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவிக் கருவிகள் செய்து தருகின்ற பயிற்சியும், உதவிக் கருவிகள் வழங்குகின்ற திட்டமும் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலுள்ள மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 219, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**219—**

**ஆதிதிராவிடர்களுக்கு விட்டு மனை**

***9197—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், முத்துக்கவுண்டன்பாளையம், எழுமாத்தூர் ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனையிடம் வழங்கப்பட்டுள்ளதா?



2000 ஏப்ரல் 4]

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) அதில் பட்டா பெற்றோர் குடியமர்ந்துள்ளார்களா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஈரோடு மாவட்டம், முத்துக்கவுண்டன்பாளையம் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.

(ஆ) எழுமாத்தூர் கிராமத்தில் 223 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(இ) அதில் 26 நபர்கள் குடியமர்ந்துள்ளார்கள். மீதமுள்ள 197 நபர்கள் குடியமரவில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வழங்கப்பட்டிருக்கிற வீட்டுமனை நிலம் அரசினைச் சேர்ந்ததா? தனியாரைச் சேர்ந்ததா? தனியாரைச் சேர்ந்தது என்றால் நேரடிக் கிரயத்தின் மூலமாக அரசு கையகப்படுத்திய நிலமா? அப்படி கையகப்படுத்திய நிலத்திற்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை மூலமாக தனியார் இடத்தை 235 பயனாளிகளுக்கு வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டது. ஆனால் 277 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. அந்த 277 பேர்களும் குடியேறவில்லை. அது காலியாகத்தான் உள்ளது. முத்துக்கவுண்டன்பாளையத்தில் இருக்கின்றவர்களுக்கு விரைவில் அதன் மெய்தன்மை அறிந்து வழங்கப்படவிருக்கிறது. அதற்கு எவ்வளவு விலை கொடுக்கப்பட்டது என்று உறுப்பினர் கேட்டார். 15.52 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு உள்ளது. மொத்த மதிப்பீட்டைப் பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. அந்த விவரம் உறுப்பினருக்குத் தனியாகக் குறிப்பிடப்படும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 223 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதில் வெறும் 26 பேர்கள்தான் அங்கே குடியேறியிருக்கிறார்கள். மற்றவர்கள் குடியேறவில்லை. மற்றவர்கள் குடியேறாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

அந்த இடம் குடியிருப்பதற்கு லாயக்கற்ற இடமா? இதனை அரசு மறுபரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீட்டுமனைகள் வழங்கப்பட்ட இடத்தில் உயர் அழுத்த மின்கம்பி செல்வதாலும், பயனாளிகள் குடியேறாததாலும், அந்த இடம் அவசியமாக அந்த மக்களுக்குப் பயன்படாததாலும், ஆதிதிராவிடர்கள் ஏழையாக இருக்கின்ற காரணத்தாலும், தொகுப்பு வீடுகளை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாலும், அந்த இடம் காலியாக இருக்கிறது. ஆகவே மீதம் உள்ளவற்றை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்க் கூட்டம் முடிந்து தன் தொகுதிக்குச் செல்வதற்குள் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 220, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**220—**

**சுற்றுலா மையம்**

***10414—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் காமராஜர்சாகர் நீர்த்தேக்கம் சீர்செய்யப்பட்டு அதனைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் காமராஜர்சாகர் நீர்த்தேக்கம் சீர்செய்யப்பட்டு அதனைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.





முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர்சாகர் குடிநீர்த்தேக்கம் திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்கக்கூடிய ஒரு மிகப் பெரிய நீர்த்தேக்கமாகும். அது கட்டி முடிக்கப்பட்ட காலத்தில் அந்த இடத்தில் மிகப் பெரிய பூங்கா ஒன்று ஏற்படுத்தப்பட்டு பள்ளி மாணவர்களும் பொது மக்களும் சென்று பார்த்து வரக்கூடிய ஒரு சுற்றுலா மையமாகவே இருந்து வந்தது. ஆனால் காலப்போக்கில் பராமரிக்கப்படாத காரணத்தால் இப்போது வனம்போல அந்த இடம் காட்சியளிக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும், நானும் அந்த இடத்திற்குச் சென்றபோது அங்கிருக்கக்கூடிய நிலையை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பார்த்தார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. அந்த அணையை பலப்படுத்துகின்ற வகையிலும் அங்கே உள்ள முள் புதர்களை அகற்றி ஒரு சுற்றுலா மையத்தை மீண்டும் அமைப்பதன் மூலமாக அந்தப் பகுதி ஒரு சிறப்பான பகுதியாக அமைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நேரில் பார்வையிட்டு அந்த இடத்தை மீண்டும் பழைய நிலைமைக்கு சுற்றுலாத்தலமாக ஆரம்பிக்கக்கூடிய அளவுக்கு ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீர்த்தேக்கம் 1962-வது வருடம் கட்டப்பட்டது. அந்த நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில் அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம். ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள காமராஜர்சாகர் நீர்த்தேக்கத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையும் நூற்றுக்கும் குறைவாக இருக்கின்றது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் வருங்காலத்தில் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 4

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (ஐந்தாம் பட்டியல்*)

### வெளிநாட்டினர் தொழில்

**வினா எண் 13752—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே வெளிநாட்டினர் தொழில் தொடங்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1. சென்னை அருகே வெளிநாட்டினர் மற்றும் உள்நாட்டினர் தொழில் தொடங்க நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

டிட்கோ நிறுவனம் எண்ணூருக்கு அருகே 7155 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் பெட்ரோ கெமிக்கல் பூங்கா அமைப்பதற்கும், மறைமலை நகர் அருகே 1250 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் ஆட்டோ துணைக் கருவிகள் பூங்கா அமைப்பதற்கும் நிலம் கையகம் செய்கிறது.

2. டாசிட் நிறுவனம் ஒரகடம் மற்றும் 8 கிராமங்களில் 827.22.0 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திலும், மாமண்டூர், பழமாத்தூர் ஆகிய கிராமங்களில் 348.19.5 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திலும், ஊத்துக்கோட்டை கிராமத்தில் 802.84.0 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்திலும், திருக்கச்சூர் கிராமத்தில் 411.37.5 ஹெக்டேர் நிலத்தில் தொழில் வளாகங்கள் அமைப்பதற்கும், வரதராஜபுரம் கிராமத்தில் 392.81.5 ஹெக்டேர் நிலத்தில் துணைக்கோள் நகரம் நிர்மாணிப்பதற்கும் நிலங்களைக் கையகம் செய்கிறது.

3. எல்காட் நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம், சோளிங்கநல்லூர் கிராமத்தில் 54.72 ஏக்கர் நிலத்தை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கவும் கையகம் செய்கிறது. மேலும் சிறுசேரி மற்றும் இகாட்டூர் கிராமத்தில் 250 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் மின்னணுவியல் நிறுவனங்கள் அமைக்கவும் உத்தேசித்துள்ளது.

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2000 ஏப்ரல் 4]

4. சிப்காட் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை, நெமிலி, திருப்பெரும்புதூர் ஆகிய தொழில் வளாகங்களுக்கென சுமார் 6000 ஏக்கர் நிலங்களை கையகம் செய்து வருகிறது. ஹூண்டாய், செயின்ட் கோபெயின் கண்ணாடி தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகள் இங்கு அமைக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டினர் மற்றும் உள்நாட்டினர் தொழில் தொடங்க முன் வருங்கால் காலதாமதமின்றி உடனடியாக அவர்கள் தொழிற்சாலை அமைத்திட இந்நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்தொழில் வளாகங்களுக்கு நிலம் ஈந்தோரின் வாரிசுகளுக்கு இங்கு அமையும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள தொழில் துறையில் முன்னிறங்கச் செய்ய இத்தொழில் வளாகம் அமைக்கும் நடவடிக்கைகள் உதவும் என அரசு எதிர்பார்க்கிறது.

2—

### ஆயத்தீர்வை நிலுவை

**வினா எண் 19686—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆயத்தீர்வை நிலுவையை வசூல் செய்து அரசின் நிதி ஆதாரத்தைப் பெருக்க உதவும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழகத்தில் ஆயத்தீர்வை நிலுவையினை வசூல் செய்வதன் மூலம் அரசின் நிதி ஆதாரத்தைப் பெருக்க 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வரவினச் சட்டம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் முன்னாள் கள் மற்றும் சாராயக்கடை உரிமதாரர்/ஏலதாரர்களிடமிருந்து அரசுக்கு ஏற்பட்ட கருத்தியல் இழப்பு/வாடகை நிலுவை பாக்கித் தொகையினை வசூலிப்பதற்கு "சமாதான்" என்ற புதிய திட்டத்தினைப் புகுத்தலாம் என்ற ஒரு செயற்குறிப்பை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அனுப்பியுள்ளார். இந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2000 ஏப்ரல் 4

3—

## ஆய்வுக் கூடங்கள் நிறுவுதல்

**வினா எண் 22632—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளச் சாராய வேட்டைகளில் கைப்பற்றப்படும் சரக்குகளை துரிதமாக பரிசோதிக்க அதிக அளவில் ஆய்வுக்கூடங்கள் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள தடய அறிவியல் ஆய்வுக் கூடங்களைத் தவிர, கூடுதலாக தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

4—

## தீயணைப்பு வண்டி வழங்குதல்

**வினா எண் 24443—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநியில் தீயணைப்பு நிலையத்திற்கு மற்றொரு தீயணைப்பு வண்டி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பழநி தீயணைப்பு நிலையத்தில் ஒரு நீர்தாங்கி வண்டி உள்ளது. அருகிலுள்ள தீயணைப்பு நிலையங்களிலிருந்து ஊர்திகளை வரவழைத்து பழநியில் நடைபெறும் கோயில் விழாக்களில் நிலை நிறுத்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அப்பகுதியில் ஏற்படும் தீ நிகழ்வுகளை அங்குள்ள தீயணைப்பு நிலைய ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும். எனவே பழநி தீயணைப்பு நிலையத்திற்குக் கூடுதலாக ஒரு வண்டி வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2000 ஏப்ரல் 4]

5—

## தீயணைப்புத் துறைக்கு கருவிகள்

**வினா எண் 24725—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓரிடத்தில் ஹைட்ரஜன் சல்பைடு, மீதேன் நெடியடிக்கும் அமோனியா, மூச்சுத் திணற வைக்கும் குளோரின் ஆகிய ஆபத்தான வாயுக்கள் உள்ளனவா என அறிய பயன்படுத்தப்படும் கருவிகள் தீயணைப்புத் துறைக்கு வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீயணைப்புத் துறையில் பல வகையான வாயுக்களைக் கண்டறிய "Multi Gas Monitor" என்ற கருவிகளும், விஷவாயு கண்டறிய "Poisonous Gas Detector" கருவிகளும் ஏற்கெனவே உபயோகத்தில் உள்ளதால் இனி புதிதாக அவற்றை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

6—

## புதிய காவல் நிலையம்

**வினா எண் 25769—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய காவல் நிலையம் அயப்பாக்கம் கிராமத்தில் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் புதிய காவல் நிலையம் அயப்பாக்கம் அருகே வீட்டுவசதி வாரியம் கட்டியுள்ள காவல் நிலையக் கட்டடத்தில் திறக்கப்படுமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**7—**

**காவலர்களுக்கு குடியிருப்பு**

**வினா எண் 25962—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, வெறையூர், தானிப்பாடி, வானாபுரம், தச்சம்பட்டி காவல் நிலைய காவலர்களுக்கு குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி வெறையூர், தானிப்பாடி, வானாபுரம், தச்சம்பட்டி காவல் நிலையக் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட நிலம் ஏதும் காவல் துறை வசம் இல்லை. தேவைப்படும் நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**8—**

**காவல் நிலையத்துடன் சேர்த்தல்**

**வினா எண் 25966—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஒன்றியத்திற்குட்பட்ட கனந்தம்பூண்டி, காவேரியம்பூண்டி, நல்லவன்பாளையம், காவல்பூண்டி ஆகிய பகுதிகளை திருவண்ணாமலை கிராமிய காவல் நிலையத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இது குறித்து பரிசீலித்து உரிய முடிவினை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

**9—**

**கழிப்பிடப் பகுதி**

**வினா எண் 27227—திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம், சூலூர் பேரூராட்சியிலுள்ள காவலர் குடியிருப்பில் பயன்படாமல் இருக்கும் கழிப்பிடப் பகுதியை பேரூராட்சியிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோவை மாவட்டம், சூலூரில் காவல் துறைக்குச் சொந்தமான நிலத்தை கழிப்பிடங்கள் கட்டுவதற்காக சூலூர் பேரூராட்சி நிர்வாகம் கேட்டுள்ளது. இந்த நிலத்தின் தற்போதைய அங்காடி விலை ரூ.19,50,000 ஆகும். இத்தொகையை காவல் துறைக்குச் செலுத்தினால் இந்த இடம் சூலூர் பேரூராட்சிக்கு மாற்றப்படலாம். இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட ஆட்சியர் அல்லது வருவாய்த் துறை இதர அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு காவல் துறைத் தலைமை இயக்குநரால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**10—**

**ஆயுள் காப்பீடு செய்யும் திட்டம்**

**வினா எண் 27684—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் அதிகாரிகளின் குடும்பத்திற்கு கட்டாய ஆயுள் காப்பீடு செய்யும் திட்டம் பரிசீலிக்கப்படுமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறையில் பணியாற்றும் களப்பணியாளர்கள் அலுவலக நிமித்தமாக வெளியே செல்லும்போது விபத்து ஏற்பட்டு அகால மரணமடைந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்படி ரூபாய் ஒரு இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1-1-1994 முதல் அமலில் உள்ளது. காவல் அதிகாரிகளின் குடும்பத்திற்கு கட்டாய ஆயுள் காப்பீடு செய்யும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை.

**11—**

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 28068—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதியில் உள்ள வல்லம் ஒன்றியத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

செஞ்சி தொகுதியில் உள்ள வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**12—**

**காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்**

**வினா எண் 30770—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூரில் காவலர் குடியிருப்பில்லாமல் காவலர்கள் மிகவும் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது காவலர் குடியிருப்பு இல்லம் கட்டப்படும்?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர் காவல் நிலையத்தில் பணியாற்றும் 22 பணியாளர்களுக்கு குடியிருப்புகள் ஏதும் இல்லை. 22 குடியிருப்புகள் கட்டுவதற்காக திருவண்ணாமலை மாவட்டம் தேசூரில் 0.17.05 ஹெக்டேர் நிலம் காவல் துறை வசமுள்ளதால் குடியிருப்புகள் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**13—**

**காவலர் குடியிருப்பு**

**வினா எண் 30939—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி செய்யதுங்கநல்லூரிலுள்ள காவல் நிலையத்திற்கு காவலர்கள் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்யதுங்கநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை 24. இப்பணியாளர்களுக்கு தற்சமயம் குடியிருப்புகள் ஏதுமில்லை. மேற்படி பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏதுவாக நிலம் ஏதும் தற்பொழுது காவல் துறை வசமில்லை. எனவே நிலம் கையகப்படுத்திய பின்னர் குடியிருப்புகள் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**14—**

**தமிழ்வழியில் பாடங்கள் போதித்தல்**

**வினா எண் 19321—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

மருத்துவம், பொறியியல், தொழிற் பயிற்சிக் கல்வியை தமிழில் பயில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் நான்கு பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் இரண்டு பல்கலைக்கழகங்களிலும் தமிழ்வழியில் பாடங்கள் போதிக்க அரசு உத்தேசித்துள்ளது.

1. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.
2. பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி, கோவை.
3. அழகப்பா செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி.
4. தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை.
5. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
6. அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.

(2) பொறியியல் கல்வியை தமிழ்வழியில் பயிற்றுவிக்க அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தின் இசைவு பெறப்பட வேண்டும். எனவே அதன் இசைவு வேண்டி, கடந்த 2½ ஆண்டு காலமாக தொடர்ந்து, அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு மற்றும் மைய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றுடன் முதலமைச்சர் அளவில் கடிதம் வாயிலாக தொடர்பு கொள்ளப்பட்டு வந்தது. எனினும் அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தின் இசைவு பெறப்படவில்லை. இது தொடர்பாக தற்போது மத்திய அரசின் இசைவினைப் பெற அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(3) தொழிற் பயிற்சிக் கல்வியைப் பொறுத்தஅளவில், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு தொழிற் பயிற்சிக் கல்வி தமிழிலும், ஆங்கிலத்திலும் போதிக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் தேர்வுகளை தமிழிலும் எழுத அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கான பாடப்புத்தகங்கள் தமிழில் வெளியிட அரசாணை வெளியிட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் 9,440 மாணவர்கள் முழுமையாக தமிழைப் பயன்படுத்தி பயிற்சி பெறுவார்கள்.



2000 ஏப்ரல் 4]

(4) மருத்துவக் கல்வியை தமிழில் பயிற்றுவிப்பது தொடர்பாக தற்போது முதலாமாண்டு எம்.பி.,பி..எஸ். பட்டப்படிப்பு மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்கள் தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

**15—**

**உருது போதிக்கும் வகுப்பு**

**வினா எண் 23429—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் சிறுபான்மையோர் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்காக, நகராட்சி தொடக்கப் பள்ளியில் உருது போதிக்கும் ஒரு வகுப்பு ஆரம்பிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இத்தொடக்கப்பள்ளியில் உருது படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக (5+5) உள்ளதால் அப்பணியிடம் அருகிலுள்ள போதிய மாணவர் எண்ணிக்கையுடைய நைனாம்பட்டி நகரவை தொடக்கப்பள்ளிக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பள்ளியில் போதிய மாணவர்கள் இல்லாததால் உருது போதிக்கும் வகுப்பு ஆரம்பிக்கும் பிரச்சினை எழவில்லை.

**16—**

**நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா எண் 24906—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூர் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 4

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மேலப்பனையூர் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி 1999-2000 ஆம் ஆண்டு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார். தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளியாக உயர்த்த சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே வரும் கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து விதிகளின்படி பரிசீலனை செய்யப்படும்.

**17—**

**ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 26509—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியம், பள்ளிப்பாளையம் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பணியிடம் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காலியிடத்திற்கு ஆசிரியர் நியமனம் செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியம், பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலியாக இருந்த இரு ஆசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன.

(ஆ) தற்போது இப்பள்ளியில் காலிப் பணியிடம் ஏதுமில்லை.



2000 ஏப்ரல் 4]

**18—**

**தமிழ் பயிற்றுமொழி செயல்படுத்துதல்**

**வினா எண் 26684—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி செயல்படுத்துதல் அரசு ஆணை (நிலை) எண் 6-ன்படி 1999-2000 ஆம் ஆண்டில் எத்தனை பள்ளிகள் தொடர்ந்து ஏற்புக்காக விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) எத்தனை பள்ளிகளுக்கு தொடர்ந்து ஏற்பு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1,214 பள்ளிகளிலிருந்து தொடர்ந்து ஏற்பு வழங்க விண்ணப்பித்துள்ளார்கள்.

(ஆ) பகுதி 3-ல் இரண்டு பாடங்களை தமிழில் கற்பிக்கும் 290 பள்ளிகளுக்கும், அனைத்துப் பாடங்களையும் தமிழில் கற்பிக்கும் 35 பள்ளிகளுக்கும் ஆக 325 பள்ளிகளுக்கும் 22-9-1999 முடிய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**19—**

**கிளை நூலகக் கட்டடம்**

**வினா எண் 30404—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகூர் கிளை நூலகக் கட்டடத்தை புதுப்பித்துக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகூர் கிளை நூலகம் 20-8-1995 முதல் புதிய சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே இதனைப் புதுப்பித்து கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**20—**

## நூலகர்கள் நியமனம்

**வினா எண் 32252—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பகுதி நேர நூலகர்களின் தொகுப்பூதியத்தை அதிகரிக்கவும் அவர்களை ஊர்ப்புற நூலகர்களாகவும், ஊர்ப்புற நூலகர்களை மூன்றாம் நிலை நூலகர்களாகவும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பகுதிநேர நூலகர்களின் தொகுப்பூதியம் ரூ.255-லிருந்து ரூ.405 ஆக அரசாணை (1டி) எண் 126, பள்ளிக் கல்வித் துறை நாள் 6-5-1999-ன்படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. பகுதி நேர நூலகர்களை அப்பணியிடத்திலிருந்து நேராக ஊர்ப்புற நூலகர்களாகவும், ஊர்ப்புற நூலகர்களை மூன்றாம் நிலை நூலகர்களாகவும் நியமனம் செய்ய விதிமுறைகளில் இடமில்லை. எனினும் பகுதி நேர நூலகர்களும் விதிப்படி தகுதி பெற்றிருப்பின் வேலை வாய்ப்பகங்கள் மூலம் நேரடியாக மூன்றாம் நிலை நூலகர்களாக நியமனம் பெற வழியுள்ளது.

**21—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 18730—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கூம்பர் ஊராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்திலுள்ள கூம்பர் ஊராட்சி மக்கள் தொகை 331 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையமும் 9 கி.மீ. தொலைவில் ஈசநத்தம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் கூம்பர் ஊராட்சி அடங்கிய குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி கூம்பர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

**22—**

## குடிசைக்கு ஒரு விளக்கு

**வினா எண் 26863—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பட்டம்பாளையம் ஆதிதிராவிட காலனியில் அனைத்து வீடுகளுக்கும் குடிசைக்கு ஒரு விளக்கு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் முழுமையாக எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பட்டம்பாளையம் ஆதிதிராவிட காலனியில் மொத்தம் உள்ள வீடுகள் 60. அதில் 39 வீடுகளுக்கு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வீட்டிற்கு மின் அளவி பொருத்தப்பட்டு வீட்டு மின் இணைப்பு

[2000 ஏப்ரல் 4

வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 40 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 20 வீடுகளில் தகுதியான 11 குடிசைவாசிகளிடமிருந்து குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு கூடிய விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும். 2 குடிசைவாசிகளிடமிருந்து இதுநாள் வரை மின் இணைப்பு வேண்டி எந்தவிதமான விண்ணப்பமும் பெறப்படவில்லை. மீதமுள்ள 7 வீடுகள் "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ்" மின் இணைப்பு பெற தகுதி பெற்றவையாகும். அவர்களிடமிருந்து முறையான வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் மின் அளவி பொருத்தப்பட்டு மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

**23—**

### மருந்தாளுநர் நியமித்தல்

**வினா எண் 27083—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், அரசு பொது மருத்துவமனைகளில் எவ்வளவு மருந்தாளுநர் பணியிடம் காலியாக உள்ளது?

(ஆ) ஆம் எனில், மருந்தாளுநர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு அரசு மருத்துவமனையில் மட்டும் ஒரு "மருந்தாளுநர்" பணியிடம் வெற்றிடமாக உள்ளது. வெற்றிடத்தினை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏனைய 8 மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் உள்ள மருந்தாளுநர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 4]

**24—**

### அவசர ஊர்திக்கு ஓட்டுநர் நியமனம்

**வினா எண் 28894—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர், அரசு மருத்துவமனையிலுள்ள அவசர ஊர்திக்கு ஓட்டுநர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்ள அவசர ஊர்திக்கு ஓட்டுநர் பணியிடம் நிரப்பப்பட்டு 12-3-1999 முதல் ஓட்டுநர் பணியாற்றி வருகின்றார்.

**25—**

### குழந்தை நலப் பிரிவு

**வினா எண் 29655—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மருத்துவமனைகளில் குழந்தை நலப் பிரிவு எத்தனை இடங்களில் செயல்படுகிறது?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி சார்ந்த மருத்துவமனைகளில் மட்டுமின்றி, 26 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் 120 வட்ட மருத்துவமனைகளிலும், குழந்தைகள்

[2000 ஏப்ரல் 4

நலப் பிரிவு இயங்கி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் குழந்தைகள் நலப் பிரிவு இயங்கி வருவதுபோல், வட்ட மருத்துவமனைகளிலும் அங்குள்ள படுக்கைகளில் 6 படுக்கைகள் குழந்தைகள் நல சிகிச்சைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**26—**

**நிலம் ஒதுக்கீடு**

**வினா எண் 15981—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரூர்பட்டி ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட சுடுகாட்டை ஆக்கிரமிப்பு செய்து உழவடை நிலமாக செய்து வருவதை மீண்டும் மயானத்திற்கு ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டம், அரூர்பட்டி கிராமம் ச.எண். 60/1 பரப்பு 1.12.5 ஹெக்டேர் மயான புறம்போக்கு ஆகும். மேற்படி நிலத்தில் திரு. புன்னையண்ண கவுண்டர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார். மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றுவதை ஆட்சேபித்து திரு. புன்னையண்ண கவுண்டர் சென்னை உயர் நீதிமன்றத்தில் டபிள்யு. ப்பி. 7163/98 என்று வழக்கு எண்ணில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு குறித்து தீர்ப்பு வரப்பெற்றதும் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

**விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 27396—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

(அ) எடப்பாடி தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, எடப்பாடி ஒன்றியங்களின் வீட்டுமனைப் பட்டா கேட்டு எவ்வளவு பேர் விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) அதில் எவ்வளவு பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, எடப்பாடி ஒன்றியங்களில் வீட்டுமனைப் பட்டா கேட்டு 3,516 பேர்கள் விண்ணப்பித்திருந்தார்கள்.

(ஆ) அவர்களில் 3,361 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**28—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 31239—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாரைக்கிணறு கிராமப் பகுதிகளில் அன்சர்வே பிளாக் எண் 2 நிலங்களை நிலமற்ற 1,000-க்கும் மேற்பட்ட விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாரைக்கிணறு கிராமப் பகுதிகளில அன்சர்வே பிளாக் எண் 2 நிலங்களை நிலமற்ற 1,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி நபர்கள் நிலப் பட்டா கோரி மனு செய்து வருகின்றனர். இதன்

[2000 ஏப்ரல் 4

மொத்தப் பரப்பு 8,855 ஏக்கர் ஆகும். இந்த வன வட்டாரத்தை ரிசர்வ் பாரஸ்ட்டாக மாற்றம் செய்ய தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு 4-இன்கீழ் சேலம் மாவட்ட கெஜட்டில் 19-5-1955-இல் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, இந்த விளம்பரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அதாவது 18-8-1955 ஆம் தேதிக்குள் ஆக்கிரமிப்புதாரர்கள் அவரவர்கள் பாகத்தை ரிசர்வ் பாரஸ்ட்டில் சேர்க்காமல் இருக்கக் கோரி மனு செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு யாரும் மனு செய்யவில்லை. ஏனெனில், அப்போது ஆக்கிரமிப்புகள் இந்த வன வட்டாரத்தில் இல்லை. அதன் பின்னரே இப்பகுதியில் பல ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ளன. தற்போது 1,000-க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்புதாரர்கள் அவரவர்கட்கு உட்பட்ட ஆக்கிரமிப்பு பாகத்தில் கடந்த 20, 25 மற்றும் 30 ஆண்டுகளுக்கு மேலாக கூரை வீடுகள், வில்லை வீடுகள், தார்சு வீடுகள் கட்டியும் கிணறு வெட்டியும், தென்னை, வாழை, நெல், கம்பு, சோளம், பருத்தி, குச்சி ஆகியவற்றை பயிர் செய்தும் அனுபவம் செய்து வருகிறார்கள். எனவே, ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மேற்படி நிலங்களை வழங்கலாமா என்பது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர், சேலம் மாவட்ட வன அலுவலருடன் கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. காப்பு வனப் பகுதியாக அறிவிக்கை செய்த இடங்கள் தவிர்த்து மற்ற பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்து பட்டா வழங்குவது குறித்து பரிசீலித்து அதற்கேற்ப முடிவெடுக்கப்படும்.

**29—**

### குடிநீர் வசதி

**வினா எண் 17760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் "ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்" மூலம் பாதுகாப்பான குடிநீர் எத்தனை கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) கிராம வாரியாக அதன் விவரம் என்ன?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் "ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்" கீழ் 1992-93 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை உள்ள துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் ARWSP மூலம் 233 ஊரகக் குடியிருப்புகளுக்கும் புனோரைடு திட்டத்தின் மூலம் 188 ஊரகக் குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 421 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு உள்ளது. மேலும் தமிழக அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் (MNP) மூலம் 765 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**30—**

### அண்ணா மறுமலர்ச்சிப் பணிகள்

**வினா எண் 21825—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் நெறிப்பறைச்சல் ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சிப் பணிகள் எத்தனை முடிக்கப்பட்டன?

(ஆ) அவற்றிற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 477 பணிகள்.

(ஆ) 165.34 இலட்சம்.

[2000 ஏப்ரல் 4

31—

**தொகுப்பு விடுகள் கட்டித் தருதல்**

**வினா எண் 22118—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சி, ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், மருங்குளம் கிராமத்தில் 1999-2000 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 15 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

32—

**டிரைசம் பயிற்சித் திட்டம்**

**வினா எண் 22439—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98, 1998-99 ஆம் ஆண்டு டிரைசம் (TRYSEM) பயிற்சித் திட்டம் சேலம் மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்குப் (Training) பயிற்சி அளிக்கப்பட்டது?

(இ) எடப்பாடி தொகுதியில் எவ்வளவு பேருக்குப் (Training) பயிற்சி அளிக்கப்பட்டது?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு 664 நபர்களுக்கும், 1998-99 ஆம் ஆண்டு 311 நபர்களுக்கும் டிரைசம் பயிற்சி அளிக்கப்பட்டது.

(இ) எடப்பாடி தொகுதியில் 1997-98 ஆம் ஆண்டு 28 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு 31 நபர்களுக்கு டிரைசம் பயிற்சி அளிக்கப்பட்டது.

33—

**குடிநீர்த் திட்டம்**

**வினா எண்23120—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், முகாசிப்புத்தூர் ஊராட்சி, கள்ளியங்காட்டிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மின் மோட்டார் வைத்து மேல்நிலைத் தொட்டி கட்டி கள்ளியங்காடு, நாகனூர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்மாப்பேட்டை ஒன்றியத்திலுள்ள முகாசிப்புத்தூர் ஊராட்சியில் கள்ளியங்காட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் போதிய நீர் ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே இதே பஞ்சாயத்தில் உள்ள அம்மன்கோயில் ஓடைமேடு குடியிருப்புக்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அக்குடியிருப்பிற்கு அருகில் ஆழ்குழாய்க் கிணறு உருவாக்கப்பட்டது. இந்த ஆழ்குழாய்க் கிணற்றில் கிடைக்கும் நீர்வரத்து அம்மன்கோயில், ஓடைமேடு, கள்ளியங்காடு மற்றும்

[2000 ஏப்ரல் 4

நாகனூர் ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் போதுமானதாக உள்ளது. இந்த நீராதாரத்தைக் கொண்டு அம்மன்கோயில் ஓடைமேட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து நாகனூர் மற்றும் கள்ளியங்காட்டிற்கும் ரூ.7.59 இலட்சம் செலவில் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் (1999-2000) பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**34—**

**தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்**

**வினா எண் 23630—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், நெம்மேலி, திப்பியகுடி ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் தெருவில் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவோணம் ஒன்றியம், நெம்மேலி, திப்பியகுடி கிராமத்தில் 1997-98 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் 16 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**35—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 24624—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், எஸ். காட்டேரி ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்கு கூடுதலான தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில், 1999-2000ஆம் ஆண்டிற்கு 1,273 தொகுப்பு வீடுகள் கட்டித்தர இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் கோணலூர், ஆணைபோகி, தவலி, ஆலியூர் மற்றும் எரும்பூர் ஆகிய ஊர்களில் தலா 10 வீடுகள் வீதம் 50 வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. எனவே எஸ். காட்டேரி ஊராட்சிக்கு வீடுகள் கூடுதலாக தற்போது கட்டித்தர இயலாது.

**36—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 24853—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பெரணம்பாக்கம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பெரணம்பாக்கம் கிராமக் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர், நமத்தோடு மற்றும் இதர 22 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்க சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அதன் மூலம் குடிநீர் வழங்கப்பட உள்ளது. அனைத்து குடிநீர்த் திட்டப் பணிகளும் மார்ச்

[2000 ஏப்ரல் 4

திங்கள் 2001-க்குள் முடிக்கப்பட்டு மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் தற்போது கையிறைபபான் ஒன்றும் தரைமட்டத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம், திறந்தவெளிக் கிணறு ஒன்றை நீர் ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

37—

### தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுது பார்த்தல்

**வினா எண் 24870—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில், ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுதடைந்தால் பழுது நீக்கிக் கொடுக்க ஒரு வருடத்திற்கு மேல் ஆவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பழுது நீக்கிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு, கோபி மற்றும் தாராபுரம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொலைக்காட்சி தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் வானொலி மேற்பார்வையாளர் பணிபுரிய வேலைப்பட்டியல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் பழுதடைந்த தொலைக்காட்சிகள் அனைத்தும் சரி செய்யப்பட்டுள்ளன. கோபி வட்டத்தில் ஆறு தொலைக்காட்சிப் பெட்டிகளும், தாராபுரம் வட்டத்தில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் படக்குழாய் செயலற்றதால் பழுதடைந்துள்ளன. இவற்றை மாற்றி பழுது நீக்கம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



2000 ஏப்ரல் 4]

38—

### நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்

**வினா எண் 25863—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை ஊராட்சி, மேலக்கொள்ளுக்காடு கிராமத்தில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை ஊராட்சி, மேலக்கொள்ளுக்காடு கிராமத்தில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு நீர்மூழ்கி மின் மோட்டார், சம்பந்தப்பட்ட ஊராட்சியால் அமைக்கப்பட வேண்டும். எனவே ஊராட்சியின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் இப்பணியினைச் செய்திட ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

39—

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 26544—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த வடிவூட்டுப்பள்ளம் கிராமத்தில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, வடிவூட்டுப்பள்ளம் கிராமத்தில் சுமார் 10 குடியிருப்புகளுக்கும் குறைவாக உள்ளதால் இங்கு தற்போது தெரு விளக்குகள் அமைக்க இயலாத நிலை உள்ளதாக தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.*

**40—**

**தொகுப்பு விடுகள் கட்டித் தருதல்**

**வினா எண் 26568—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை ஒன்றியம், சுள்ளிப்பாளையம் ஊராட்சி, சுள்ளிப்பாளையம் மற்றும் பள்ளக்காட்டூர் ஆகிய ஊர்களிலிருந்து தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்கும்படி அரசுக்கு முறையீடு வந்துள்ளனவா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெருந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த சுள்ளிப்பாளையம் ஊராட்சியில் 1999-2000 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் லட்சுமிபுரத்தில் 3 வீடுகளும், ஐயப்ப நகரில் 1 வீடும், பள்ளக்காட்டூரில் 3 வீடுகளும், சுள்ளிப்பாளையத்தில் 3 வீடுகளும் ஆக மொத்தம் 10 வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*



2000 ஏப்ரல் 4]

**41—**

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 26569—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை ஒன்றியம், காசிபில்லாம்பாளையம் பொது மக்களிடமிருந்து தொகுப்பு வீடுகள் கட்டித் தருமாறு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெருந்துறை ஒன்றியம், காசிபில்லாம்பாளையம் பொது மக்களிடமிருந்து தொகுப்பு வீடுகள் கட்டித் தருமாறு கேட்டு நடப்பு ஆண்டில் கோரிக்கைகள் ஏதும் மாவட்ட நிர்வாகத்திற்கு வரப்பெறவில்லை. காசிபில்லாம்பாளையம், கம்புளியம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்டதால் கம்புளியம்பட்டி ஊராட்சிக்கு 10 இதர வகுப்பினருக்கு தொகுப்பு வீடுகள் 1998-99 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்து பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.*

**42—**

**மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 27267—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திப்பியகுடி கிராமத்தில் இருந்து தஞ்சாவூர் சாலைக்கு உள்ள இணைப்புச் சாலைப் பகுதியில் மின் விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1999-2000-ஆம் ஆண்டு சமன்பாட்டு ஊக்க நிதியாக அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திப்பியகுடி ஊராட்சி கிராமத்தில் இருந்து தஞ்சாவூர் சாலைக்கு உள்ள இணைப்புச் சாலைப் பகுதியில் மின்விளக்கு அமைக்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.*

**43—**

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 28135—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, ஏலகிரி (பழைய)-யில் கூடுதலாக தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, ஏலகிரியில் தற்போது மூன்று தெரு விளக்குகள் உள்ளன. 1999-2000-ஆம் ஆண்டிற்கு சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக ரூ.73.4633 கோடி ஊராட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மேற்படி இடங்களுக்கு தேவைக்கேற்ப புதிய தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.*



2000 ஏப்ரல் 4]

**44—**

### தெரு விளக்கு மற்றும் குடிநீர் வசதி

**வினா எண் 28430—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மண்ணாரை ஊராட்சி 3-ஆவது வார்டு 2-ஆவது வார்டுகளில் தெரு விளக்கு, குடிநீர் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மண்ணாரை ஊராட்சியில் 2-ஆவது வார்டில் ஏற்கெனவே 36 குழல் விளக்குகளும், இரண்டு மேல்நிலைத் தொட்டிகளும், இரண்டு ஆழ்க்குழாய்க் கிணறுகளும் (மின் மோட்டார் பொருத்தியது), மூன்று திறந்தவெளிக் கிணறுகளும், மூன்று கைப்பம்புகளும் உள்ளன. மேலும் பத்து விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் 3-ஆவது வார்டிலும், ஏற்கெனவே 150 குழல் விளக்குகளும், இரண்டு சோடியம் ஆவி விளக்குகளும், ஐந்து திறந்தவெளிக் கிணறுகளும், ஒரு மின் மோட்டார் பொருத்திய திறந்தவெளிக் கிணறும், நான்கு ஆழ்க்குழாய்க் கிணறுகளும் (மின் மோட்டார் பொருத்தியது), மூன்று மேல்நிலைத் தொட்டிகளும் உள்ளன. மேலும் 40 விளக்குகள் விஸ்தரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் இப் பகுதியும் அடங்கும். மேலும், இதைத் தவிர இவ்விரு பகுதிகளுக்கும் திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.*

**45—**

### ஊரக மருந்தகங்கள்

**வினா எண் 29151—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 ஏப்ரல் 4

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் எத்தனை ஊரக மருந்தகங்கள் இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு எந்தத் துறையைச் சார்ந்தது?

(இ) ஆண்டுதோறும் பராமரிப்புச் செலவு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் அவினாசி கவுண்டர்பாளையம், முதலிபாளையம் ஆகிய இடங்களில் இரண்டு ஊரக மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தது.

(இ) 1998-99-ஆம் ஆண்டிற்குப் பராமரிப்புச் செலவாக ரூ.5,11,942.00 ஆகிறது. இச்செலவினம் திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**46—**

### திடக்கழிவுகள்

**வினா எண் 29559—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பெருமாநல்லூர் ரோடு பாறைக்குழியில், திடக்கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்படுவதால் கடுமையான துர்நாற்றம் வீசுகிறது என்று புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், பெருமாநல்லூர் பாறைக்குழியில் திடக்கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்படுவதால் கடுமையான துர்நாற்றம் வீசுகிறது என்று புகார் எதுவும் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை.

குறிப்பிடப்பட்ட பாறைக்குழியைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாள்தோறும் மாட்டுவண்டிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் கொண்டுவந்து குவிக்கப்படும் சுமார் 100 டன் திடக்கழிவுகள் புல்டோசர் மூலம் சமன் செய்யப்படுகிறது. புல்டோசர் மூலம் பருவமழைக் காலத்தில் ஈரமான திடக்கழிவுகள் புரட்டப்படும்போது சிறிது துர்நாற்றம் வீச வாய்ப்புள்ளது. தற்போது மழை இல்லாததினால், வெயிலில் காய்ந்து நாற்றம் இல்லாமல் உள்ளது. மேலும் மேற்படி பாறைக்குழியைச் சுற்றி கம்பிவேலி போட்டு பாதுகாப்புடன் தனியார் மேற்படி இடத்திற்குள் நுழைந்து மலம் கழிப்பதைத் தடுக்க ஒரு காவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் திருப்பூர் நகராட்சியில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து திடக்கழிவுகளைக் கொண்டு கலவை உரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயல்படத் தொடங்கியவுடன் குப்பைகளால் துர்நாற்றம் வீசும் நிலை எழாது.

**47—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 30063—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கஞ்சல்நத்தம் ஊராட்சி, பட்டாக்காரன் கொட்டாயில் இதுவரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படாமல் இருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படுமா?

88779

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட உத்தேசிக்கப்படவில்லை. இருப்பினும், முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் (2000-2001) இக்குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**48—**

**தண்ணீர் வசதி செய்தல்**

**வினா எண் 30108—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி, மேலூர் பகுதியில் கே.சி. சாலையில் பூம்புகார் சிற்பக்கூடத்துக்கு தென் பகுதியில் அமைந்துள்ள பெண்கள் கழிப்பிடத்திற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி, கே.சி. சாலையில் பூம்புகார் சிற்பக்கூடத்திற்குத் தென்பகுதியில் அமைந்துள்ள பெண்கள் கழிப்பிடத்திற்கு 26-6-1999 முதல் தண்ணீர் வசதி செய்துதரப்பட்டு, நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.





**49—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 30438—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மில்லியன் கிணறு திட்டத்தின்கீழ் வெட்டும் கிணறுகள் பல இடங்களில் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டமாக மாற்ற மத்திய அரசிடம் அனுமதி கோர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது மில்லியன் கிணறு திட்டம் நிறுத்தப்பட்டு, பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு திட்டத்துடன் (SGSY) இணைக்கப்பட்டுவிட்டது.

(ஆ) எனவே ஆழ்குழாய்க் கிணறு (மில்லியன் கிணறு) விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் வழங்க இனி வாய்ப்பில்லை. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் (மானியமும் கடனும் சேர்ந்த திட்டத்தில்) சம்பந்தப்பட்ட பயனாளி விண்ணப்பித்தால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சம்பந்தப்பட்ட வங்கி மூலம் பயன் பெறலாம்.

**50—**

**கழிப்பிட வசதி செய்தல்**

**வினா எண் 30913—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி 22, 10, 17 ஆகிய வார்டுகளில் நவீனக் கழிப்பிட வசதி ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுற்றுலா மற்றும் புனிதத் தலம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தென்காசி நகராட்சி 22-வது வார்டில் கழிப்பிடம் கட்ட பணி உத்தரவு வழங்கப்பட்டது. பொது மக்களின் ஆட்சேபணையின் பேரில் அத்திட்டம் கைவிடப்பட்டது. வார்டுகள் 10 மற்றும் 17-ல் நவீனக் கழிப்பிடம் கட்ட திட்டம் ஏதுமில்லை.

**51—**

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 32114—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், விளார் ஊராட்சிக்குட்பட்ட நாவலர் நகர், அன்னை இந்திரா நகர் ஆகிய பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சியில் உள்ள நாவலர் நகர், அன்னை இந்திரா நகர் ஆகியவற்றின் தற்போதைய மக்கட்தொகை 3,234 ஆகும். தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 150 மி.மீ. விட்டமுள்ள ஓர் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 1 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன், 2500 மி. பகிர்மானக் குழாய் மற்றும் 29 பொதுக் குழாய் மேடைகள் மூலம், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1998-99-ல் முடிக்கப்பட்டு ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 4]

**52—**

### புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 32134—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கலைஞர் நகர், ரகுமான் நகர் பகுதியில் புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

**கலைஞர் நகர்:** தஞ்சாவூர் ஒன்றியத்தில் உள்ள நீலகிரி ஊராட்சிக்கு உட்பட்ட கலைஞர் நகரின் தற்போதைய மக்கட்தொகை 750 ஆகும். தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 150 மி.மீ. விட்டமும் 81 மீ. ஆழமும் கொண்ட ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு, 80,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் 2,000 மீ. பகிர்மானக் குழாய் மற்றும் 11 பொதுக் குழாய் மேடைகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**ரகுமான் நகர்:** தஞ்சாவூர் ஒன்றியத்திலுள்ள நீலகிரி ஊராட்சிக்குட்பட்ட ரகுமான் நகரின் தற்போதைய மக்கட்தொகை 535 ஆகும். தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 12 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. ரகுமான் நகர் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

**53—**

### பணியிடங்கள் வரன்முறைப்படுத்துதல்

**வினா எண் 32764—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

(அ) ஊராட்சிகள் பணி இடங்களை வரன்முறைப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சிகள் பணி இடங்களை வரன்முறைப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

**மரச் சாமான்கள் தயாரித்தல்**

**வினா எண் 26088—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குத் தேவையான மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்களை வனத் துறை மூலம் பெரிய அளவில் தயாரித்து வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லையெனில், அதுபற்றி மாற்றுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) மாற்றுத் திட்டம் ஏதுமில்லை.



2000 ஏப்ரல் 4]

**55—**

**பொறியாளர் பதவி உயர்வு**

**வினா எண் 33183—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில அரசுப் பணிகளில் பட்டயப் பொறியாளர்கள் தகுதியிருந்தும் செயற்பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர் பதவிகளுக்கு செல்லமுடியாத நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பொதுப் பணித் துறையில் பொறியியல் பணித் தொகுதியில் முதல்நிலைப் பதவி உயர்வான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான பட்டியல் தயாரிக்கையில் தகுதிவாய்ந்த பட்டப் பொறியாளர்கள் (உதவிப் பொறியாளர்கள்) மற்றும் பட்டயப் பொறியாளர்களை (இளநிலைப் பொறியாளர்கள்) அவரவர் முதுநிலைக்கேற்ப மேற்படி பணிகளுக்கான விதிகளின்படி 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் (3 உதவிப் பொறியாளர்கள் 1 இளம் பொறியாளர்) ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. அதன் பின்னர் உதவி செயற்பொறியாளர் பதவியிலான ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியலில் (inter-seniority) அடிப்படையில் செயற்பொறியாளராகவும், பின்னர் மேற்பார்வைப் பொறியாளராகவும் பதவிஉயர்வு அளிக்கப்படுகிறது. இந்நிலையில் உதவி செயற்பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற பட்டயப் பொறியாளர்கள் பெரும்பாலும் அடுத்த பதவியான செயற்பொறியாளர்/மேற்பார்வைப் பொறியாளர் பதவிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் முன்னரே வயது முதிர்வின் காரணமாய் பணியிலிருந்து ஓய்வுபெற்று விடுகின்றனர். அவ்வாறு ஓய்வு பெறுபவர்கள் மட்டுமே பதவி உயர்வு பெற முடியாத நிலை உள்ளது. ஏனையோர் பதவி உயர்வுபெற தடையேதுமில்லை.

[2000 ஏப்ரல் 4

56—

## வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 20402—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும்போது உயிரிழந்த ஊழியர்களின் வாரிசுகளில் இன்னும் எத்தனை பேருக்கு வாரிசு அடிப்படையில் வேலை வழங்கப்பட வேண்டும்?

(ஆ) எத்தனை ஆண்டு காலமாக வாரிசுகளுக்கு வேலை வழங்கப்படாமல் உள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (30-9-1999 முடிய) பணியாற்றும்போது உயிரிழந்தவர்களின் வாரிசுகளின் வேலை வேண்டி விண்ணப்பித்தோரில் வேலை வழங்க வேண்டியவர்கள் இன்னும் 99 நபர்கள் உள்ளனர். 1991 ஆம் ஆண்டின் விண்ணப்பம் தற்போது நிலுவையில் உள்ளது. கல்வித் தகுதியின் அடிப்படையில் பணியிடங்கள் காலி ஏற்படும்போது அவ்வப்போது நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டு மொத்தம் 8 வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

57—

## நகரப் பேருந்தின் தொலைவை நீட்டித்தல்

**வினா எண் 22035—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்பொழுது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நகரப் பேருந்தின் தொலைவு எல்லையை மேலும் 5 கி.மீ. நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே 30 கி.மீ. ஆக இருந்த நகரப் பேருந்து எல்லை, மேலும் 5 கி.மீ. நீட்டிக்கப்பட்டு 35 கி.மீ. ஆக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நகரப் பேருந்துகளின் தூரம் மேலும் 5 கி.மீ. நீட்டிக்கப்பட்டால் புறவழிப் பேருந்துகளின் வருவாய் பாதிக்கப்படும். எனவே இச்செயற்குறிப்பினை தற்பொழுது பரிசீலிக்க இயலாது.



2000 ஏப்ரல் 4]

58—

## பேருந்துகள் விடுதல்

**வினா எண் 30211—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஏழுமலை மற்றும் எம். கல்லுப்பட்டிக்குச் சென்று வந்த பேருந்துகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அவ்வழித் தடத்தில் அதிக பேருந்துகள் விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏழுமலை மற்றும் எம். கல்லுப்பட்டி பகுதிகளில் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. கால அட்டவணைகளில் மட்டுமே பொது மக்களின் வேண்டுகோள் மற்றும் தேவையின் அடிப்படையில் சிறு மாறுதல்கள் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. ஏழுமலையிலிருந்து உசிலம்பட்டி செல்வதற்கு 130 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. இதேபோன்று எம். கல்லுப்பட்டியிலிருந்து உசிலம்பட்டி செல்வதற்கு 84 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்போது கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

59—

## போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுதல்

**வினா எண் 30527—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை இல்லாத ஊர்களில் பணிமனை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு, ஈரோடு மாவட்டத்தில் 10 இடங்களில் பணிமனைகள் உள்ளன. சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சேலம், நாமக்கல் மாவட்டங்களில் தேவைக்கேற்ற பணிமனைகள் உள்ளன. தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் அரசு போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக 9 இடங்களில் பணிமனைகள் உள்ளன. இவையே போதுமானதாக உள்ளன. எனவே, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பணிமனை கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**60—**

**பேருந்து வழித்தடம் விரிவாக்கம் செய்தல்**

**வினா எண் 31334—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளா அரசுப் பேருந்துகளை தென்காசி, சுரண்டை, ஆய்க்குடி வழியாக விரிவாக்கம் செய்து இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இது தொடர்பாக கேரளா அரசு போக்குவரத்துத் துறைதான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.



(ஆ) தமிழ்நாட்டில் மேற்கண்ட வழித்தடம் வழியாக பேருந்துகளை இயக்க அனுமதி கேரளா அரசால் கோரப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

**61—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 31740—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் - பழைய குற்றாலம், மத்தளம் பாறை வழித்தடத்தில் நிரந்தரமாக பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் - பழைய குற்றாலம்-மத்தளம் பாறை வழித்தடம் குடியிருப்பு ஏதும் இல்லாத பகுதியாகும். மேலும், மத்தளம் பாறை என்ற கிராமம் அம்பாசமுத்திரம் - தென்காசி பிரதான சாலையில் அமைந்துள்ளதால் மத்தளம் பாறையிலிருந்து தென்காசிக்கு வந்து அங்கிருந்து குற்றாலத்திற்குச் செல்ல ஏற்கனவே இயக்கப்பட்டுவரும் போதிய பேருந்து வசதிகளை பயன்படுத்த வாய்ப்புகள் தற்போது உள்ளன. தற்போது இவ்விரு வழித்தடங்களிலும் சுமார் 200-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் பழைய குற்றாலம், குற்றாலம் போன்ற இடங்களுக்கு சாரல் சீசன் காலங்களில் இங்குள்ள நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் விழும்பொழுது மட்டுமே பொதுவாக உல்லாசப் பயணிகள் வரத்து இருந்து வருகிறது என்பதாலும் பயணிகள் விழுக்காடு போதிய அளவு இன்றி வசூல் மிகக் குறைவாக இருக்கும் என்பதாலும், வினாவில் கேட்டுள்ளபடி குற்றாலம் - பழைய குற்றாலம் - மத்தளம் பாறை தடத்தில் நிரந்தரமாக பேருந்து வசதி ஏற்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

[2000 ஏப்ரல் 4

62—

## புதிய பேருந்துகள்

**வினா எண் 31749—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் புதிய பேருந்துகள் எவ்வளவு வாங்கப்பட்டன?

(ஆ) அதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த மூன்றாண்டுகளில் (1996-97 முதல் 1998-99 வரை) வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 7,396 ஆகும்.

(ஆ) அதற்காக அரசு ரூ. 100.00 கோடி வழங்கியது. மற்ற செலவினத்தை போக்குவரத்துக் கழகங்களே ஏற்றுக்கொண்டன.

63—

## பேருந்து வசதி செய்தல்

**வினா எண் 31751—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். கோம்பை கிராமம் மலைப்பகுதி என்பதால் ஆர். கோம்பை - வேடசந்தூர் - ஒட்டன்சத்திரம் - பழனி வழித்தடத்தில் புதிய போக்குவரத்து பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரிய புதிய வழித்தடத்தில், ஆர். கோம்பை - வேடசந்தூர் தடத்தில் நகர் பேருந்துகள் மூலம் 21 தனி நடைகளும், வேடசந்தூர் - ஒட்டன்சத்திரம் தடத்தில் நகர் மற்றும்



2000 ஏப்ரல் 4]

புறநகர்ப் பேருந்துகள் மூலம் 90 தனி நடைகளும் மற்றும் ஒட்டன்சத்திரம் - பழனி தடத்தில் நகர் பேருந்துகள் மூலம் 152 தனி நடைகளும் புறநகர்ப் பேருந்துகள் மூலம், 694 தனி நடைகளும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் மற்றும் தனியார் பேருந்துகள் மூலமாக பகுதிவாரியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பேருந்து வசதியை பயன்படுத்தி ஆர். கோம்பை கிராம மக்கள் உரிய இடங்களுக்குப் பயணம் செய்கின்றனர். தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானது. எனவே, கோரிக்கைத் தடத்தில் புதிய போக்குவரத்து வசதி செய்துதர தேவை எழவில்லை.

64—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 32535—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், ஆவுடையானூரிலிருந்து தென்காசி செல்ல கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவுடையானூர் என்ற கிராமம் திருநெல்வேலி - தென்காசி பிரதான சாலையில் உள்ள பாவூர் சத்திரம் என்ற ஊரிலிருந்து பிரிந்து உட்புறமாக சுமார் 5.0 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. ஏற்கனவே, ஆவுடையானூரிலிருந்து பாவூர் சத்திரம் வழியாக தென்காசி செல்வதற்கு மதுரை கோட்டம்-2-ன் நகரப் பேருந்து ஒன்று நாளொன்றுக்கு 12 சுற்றுக்களும், ஆவுடையானூர், மைலப்பபுரம் மத்தளம்பாறை வழியாக தென்காசிக்கு மதுரை கோட்டம்-2-ன் புறநகர்ப் பேருந்து ஒன்று மூலமாக 4 சுற்றுக்களும் ஆக 16 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. இது தவிர ஆவுடையானூரிலிருந்து 5.0 கி.மீ. தொலைவில் பிரதான சாலையில் அமைந்துள்ள பாவூர் சத்திரத்திற்கு 40-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. பாவூர் சத்திரத்திலிருந்து தென்காசிக்கு 200-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே

போதுமானது எனபதினால் வினாவில் கேட்டுள்ளபடி கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

65—

**சாலை அமைத்தல்**

**வினா எண் 24435—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி, தேக்கன்தோட்டத்திலிருந்து பாரதி நகர் வரை செல்லும் வளைவில்லாத கொடைக்கானல் சாலை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், இச்சாலை எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையானது பழனி அடிவாரம் தேக்கன்தோட்டம் கி.மீ. 13/2-ல் வலது பக்கமாகப் பிரிந்து வனத் துறைக்குச் சொந்தமான அடர்ந்த மரம் சூழ்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்று பேத்துப்பாறை, பாரதி அண்ணாநகர் வழியாக கொடை-பழனி மலைச்சாலையில் கி.மீ. 1/6-ல் இணைகிறது. தற்போது அண்ணாநகரில் இருந்து கி.மீ. 0/0-4/0 வரை (பேத்துப்பாறை வரை) கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. பேத்துப்பாறையில் இருந்து தேக்கன்தோட்டம் வரை சுமார் 8.40 கி.மீ. நீளம் பகுதி மிகவும் சரிவான மலைப் பாதையாக உள்ளது. தேக்கன்தோட்டம பகுதி சுமார் 4.40 கி.மீ. நீளப் பகுதி அடர்ந்த மரங்கள் சூழ்ந்த காட்டுப் பகுதி (Central Reserve Forest) வன இலாகா வசம் உள்ளது. இப்பகுதியில் சாலை அமைப்பதற்கு வன இலாகாவின் அனுமதி தேவை. 12.80 கி.மீ. நீளமுள்ள இச்சாலையை அமைக்க தோராயமாக ரூ. 8.00 கோடி தேவைப்படும். மேற்கூறிய சாலையை அமைக்கத் தேவைப்படும் நிலத்தை வனத் துறையிடமிருந்து பெற்று பின்னர்தான் இச்சாலையை அமைக்க தேவைப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



66—

**சாலையை உயர்த்துதல்**

**வினா எண் 26054—திரு. வா. சந்தானம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான்பேட்டை பகுதியிலிருந்து அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரையில் உள்ள ரோட்டை உயர்த்தித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம். இச்சாலையானது திருமங்கலம்-பள்ளப்பட்டி சாலை கி.மீ. 24/6-25/4-ல் உள்ளது. இப்பகுதி தாழ்வாக உள்ளதால் மழைக் காலங்களில் தண்ணீர் சாலையின் மேற்பரப்பில் தங்கி சாலை சேதமடைகிறது. எனவே, மேற்படி 800 மீட்டர் நீளத்திற்கும் சாலையை உயர்த்தி மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும்.

எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

**நெடுஞ்சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 28527—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி பனிக்கனூர் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை, நாமக்கல் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) கோட்டப் பராமரிப்பிலுள்ள கச்சுப்பள்ளி புதுப்பாளையம் பனிக்கனூர் எனும் சாலை 9.8 கி.மீ. (கி.மீ. 0/0-9/8) நீளமுடைய அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலை கி.மீ. 0/0-3/0 மற்றும் 5/0-5/4 ஆகிய பகுதிகளில் தார் நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கி.மீ. 4/0-5/0 வரையுள்ள சாலைப் பகுதியை உறுதிப்படுத்தும் பணி NABARD - RIDF-I திட்டத்தின் மூலம் பணி முடிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 3/0-4/0 மற்றும் 5/4-9/0 ஆகிய பகுதிகளில் தார் தளம் புதுப்பிக்கத் தோராயமாக ரூ. 12.00 இலட்சமும், கி.மீ. 9/0-9/8 வரை இரண்டுக்கு கப்பி பரத்தி பின் தார்தளம் அமைக்கத் தோராயமாக ரூ. 4.50 இலட்சமும் ஆக மொத்தம் தோராயமாக ரூ. 16.50 இலட்சம் தேவைப்படும். இப்பணி வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக இச்சாலை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படும். தற்போது இச்சாலையில் ஏற்படும் குழிப்பள்ளங்கள் அவ்வப்போது தார் நொடிகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**68—**

**சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 28826—திரு. ரா. ஈஸ்வரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாசுதேவநல்லூர் தொகுதி, செந்தட்டியார்புரம் - கரிசல்குளம் - பந்தப்புளி - ரெட்டியபட்டி ரோடு, ரெட்டியபட்டி விலக்கு வரை உள்ள சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*கரிசல்குளம்-செந்தட்டியார்புரம் வரை உள்ள சாலைப்பகுதி சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். ரெட்டியார் பட்டி*



2000 ஏப்ரல் 4]

*விலக்கில் இருந்து, பந்தப்புளி, ரெட்டியார்பட்டி வழியாக கரிசல்குளம் வரை செல்லும் சாலை கி.மீ. 0/0-6/0 நீளம் உள்ளது. தற்போது இச்சாலையில் கி.மீ. 0/0-5/4 வரை NABARD 1-வது கட்ட திட்டத்தில் பணி எடுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள கி.மீ. 5/4-6/0 வரை வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**69—**

**சாலை சீர் செய்தல்**

**வினா எண் 28827—திரு. ரா. ஈஸ்வரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாசுதேவநல்லூர் தொகுதி, இராஜபாளையம் திருநெல்வேலி ரோட்டில் தென்மலை விலக்கிலிருந்து எட்டிசேரி வரை 4 கிலோ மீட்டர் ரோடு மிக மோசமாக பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*இச்சாலையானது பருவக்குடி - தென்மலை சாலை கி.மீ. 0/0-3/0 என்பதாகும். இச்சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை வருட பராமரிப்பின் கீழ் தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கேற்ப சீர்செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**70—**

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 28829—திரு. ரா. ஈஸ்வரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாசுதேவநல்லூர் தொகுதி, மேட்டுப்பட்டி - கூடலூர் - சங்குபுரம் - பனையூர் - சொக்கலிங்கபுரம் கரிவலம் வந்தநல்லூர் விலக்கு வரை ரோடு பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு முன்வருமா?*

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வாசுதேவநல்லூர் தொகுதியில் மேட்டுப்பட்டி - கூடலூர் - சங்குபுரம் பனையூர் - சொக்கலிங்கபுரம் - கரிவலம்வந்தநல்லூர் விலக்கு வரை ரோடு பழுதடைந்துள்ளதை சீர்செய்ய மொத்தம் ரூ. 122.00 இலட்சங்கள் தேவைப்படுகிறது. மேற்படி சாலைகள் அனைத்தும் ஒரே சமயத்தில் வருட பராமரிப்பு நிதியில் எடுத்துச் செய்ய இயலாது. இச்சாலைகளில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சீர்செய்யப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு தங்குதடையின்றி செல்லத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**71—**

**சாலை சீர் செய்தல்**

**வினா எண் 28830—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை - ஏ. சுப்பிரமணியாபுரம் அருகன்குளம் - செந்தட்டியார்புரம் புதூர் ரோடு பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை இராஜபாளையம் - சங்கரன்கோவில் திருநெல்வேலி சாலை கி.மீ. 70/10-ல் இருந்து பிரிந்து செல்லும் சாலை ஆகும். முழுவதும் தார்த் தளமுடைய இச்சாலை தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. இச்சாலையைச் செப்பனிடுவதற்குத் தோராயமாக ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி வளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வரும் நிதியாண்டில் இத்துறையின் திட்டப் பணிகளின்கீழ் இப்பணியை மேற்கொள்ளத் தக்கவாறு பரிசீலிக்கப்படும்.



2000 ஏப்ரல் 4]

**72—**

**சாலையைச் சீர்படுத்துதல்**

**வினா எண் 28833—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, தலைவன்கோட்டை - வெள்ளானைக்கோட்டை (தர்காபுரம் வழி) ரோடு மிக மோசமாக உள்ளதால் பஸ் போக்குவரத்து இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்காபுரம் - வெள்ளானைக்கோட்டை சாலை கி.மீ. 0/0-6/4 வரை உள்ள இச்சாலையில் கி.மீ. 2/0-4/6 வரையுள்ள பகுதிகள் மட்டுமே நல்ல நிலையில் உள்ளது. இதர பகுதிகள் மற்றும் தர்காபுரம் - வெள்ளானைக்கோட்டை சாலையில் 1/8 கி.மீ. பகுதிகள் முழுவதும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி சாலையினைச் சீரமைக்க ரூ. 25 இலட்சம் தேவைப்படும். நிதி நிலைமைக்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் இப்பணியினைச் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**73—**

**மாற்றுப்பாலம் அமைத்தல்**

**வினா எண் 28834—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி - விஸ்வநாதப்பேரி செல்லும் ரோட்டில் சிவகிரி கிழக்கே உள்ள பாலம் பழுதடைந்துள்ளதால் அந்தப் பாலத்தில் மாற்றுப்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பாலமானது நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இதர மாவட்டச் சாலையான சிவகிரி - விஸ்வநாதபேரி சாலை கி.மீ. 0/10-ல் அமைந்துள்ளது. இதன் மொத்த நீளம் 2.20 கி.மீ. ஆகும். இதனை அகலப்படுத்தி திரும்பக் கட்ட ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும். எனவே, இனிவரும் காலங்களில் NABARD - RIDF V திட்டப் பிரேரணையில் சேர்த்துச் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

74—

**சாலை சீர்செய்தல்**

**வினா எண் 28840—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி - சங்கரன்கோவில் ரோட்டில் முத்துசாமியாபுரம் செல்லும் விலக்கு ரோட்டில் இருந்து பாம்புக்கோயில் வரை ரோடு பழுதடைந்துள்ளதை சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இச்சாலையானது கி.மீ. 0/0-5/8 நீளம் உள்ள இதர மாவட்டச் சாலையான முள்ளிக்குளம் - பாம்புக்கோயில் சந்தை சாலை ஆகும். இச்சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை செப்பனிட ரூ.47.00 இலட்சங்கள் தோராயமாகத் தேவைப்படும். இதனை வருடப் பராமரிப்பு நிதியில் சீர்ப்படுத்த இயலாது. இனிவரும் காலங்களில் இச்சாலையை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



75—

**புதிய சாலை அமைத்தல்**

**வினா எண் 28866—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, முங்கலடியிலிருந்து செங்கல்தேரி பங்களாவிற்குச் செல்லும் சாலை பழுதடைந்துள்ளதால் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையானது சேரன்மாதேவி பணகுடி சாலை கி.மீ. 19/8-ல் பிரிந்து பின்னர் இதர மாவட்டச் சாலையான களக்காடு சிதம்பரம் சாலையில் கி.மீ. 1/4-ல் பிரிந்து ஊராட்சி ஒன்றியச் சாலை வழியாக செங்கல்தேரி செல்கிறது. இச்சாலையின் மொத்த நீளம் கி.மீ. 0/0—18/0 ஆகும். இப்பகுதி முழுவதும் வனத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதால் புதிய சாலை அமைக்க வனத் துறையின் அனுமதி பெற வேண்டும். வனத் துறையின் அனுமதி கிடைத்த பின்னர்தான் நெடுஞ்சாலைத் துறையால் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உடனடியாக புதிய சாலை அமைக்க இயலாது.

76—

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 29037—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரிலிருந்து அரியப்புரம், வெய்காலிப்பட்டி, புலவனூர் வழியாக கடையம் செல்லும் சாலையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பகுதிகள் பின்வருகின்ற சாலைகளின் தொடர்ச்சியாகும். மேட்டூர் புகைவண்டி நிலையம் முதல் ஆவுடையனூர் வரையுள்ள சாலை கி.மீ. 0/0-2/4 இது மாவட்டச் சாலையாகும். இதில் கி.மீ. 0/9-1/0 வரை சீரமைக்க ரூ.5.80 இலட்சம் தேவைப்படும். இதன் தொடர்ச்சி ரகுமானியாபுரம் சாலை கி.மீ. 0/0—0/6 வரை சிறப்பு பழுது பார்க்கும் திட்டத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வைக்காலிப்பட்டி புலவனூர் வழியாக கடையம் பாவூர் சத்திரம் சாலையை இணைக்கும் சாலையில் ஒரு பகுதி ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். மேற்படி சாலை முழுவதும் சீரமைக்க ரூ.15.00 இலட்சம் தேவைப்படும். வரும் நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப சீர் செய்யப்படும்.

**77—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 32063—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நெல்லை நெடுஞ்சாலையில் புல்லுக்காட்டு வலசை விலக்கிலிருந்து கண்டமங்கலம் புளிக்குளம் வழியாக புல்லுக்காட்டு வலசை வரையிலான சுமார் 2 கி.மீ. சாலை செப்பனிட்டு தார் விரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை திருநெல்வேலி—செங்கோட்டை—கொல்லம் சாலையிலிருந்து புல்லுக்காட்டு வலசை செல்லும் சாலை ஆகும். இச்சாலை





2.6 (கி.மீ.0/0—2/6) நீளமுடைய அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0—2/0 வரையுள்ள சாலைப்பகுதிகள் செப்டம்பர் 1998-ல் தார் தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதிகள் நல்ல நிலையிலும் உள்ளன. ஆக இச்சாலை முழுவதுமே போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**78—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 30967—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, பாளையங்கோட்டை—மணப்படை வீடு (திருத்துசாலை) மிகவும் பழுதடைந்துள்ளதால், இச்சாலையை நபார்டு (NABARD) வங்கி நிதியுதவித் திட்டத்தில் சேர்த்து இதனை முழுமையாகச் செப்பனிட்டு சீரமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பாளையங்கோட்டை—திருத்துசாலை கி.மீ. 0/0—11/4 வரையுள்ளது. இச்சாலை பாளையங்கோட்டையிலிருந்து மணப்படை வீடு வழியாக திருத்துசாலை செல்லும் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 7/0-ல் மணப்படை வீடு என்ற கிராமம் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 3/0-4/0 தவிர மற்றப் பகுதிகள் பழுதடைந்துள்ளன. இதனைச் செப்பனிடத் தோராயமாக ரூ.73.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியினை 2000-2001 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய பணிகளில் ஒன்றாக முக்கியத்துவத்திற்கேற்றவாறு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**79—**

## மகளிருக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 24310—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தில் உள்ள ஆலயங்களின் வேலை வாய்ப்புகளில் மகளிருக்கு 30 சதவீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பொதுவாக திருக்கோயில் பணிகளில் உள் துறைப் பணிகளுக்குப் பெண் பணியாளர்களை நியமனம் செய்ய ஆகம விதிகளில் இடமில்லை. வெளித் துறைப் பணியிடங்களில் (அலுவலகப்பணி) பெண் பணியாளர்கள் ஏற்கெனவே பல திருக்கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள். மேலும் திருக்கோயில் பணியாளர்கள் நியமனங்கள் அந்தந்த திருக்கோயில் அறங்காவலர் குழு மூலம் தேவைக்கேற்ப நியமனம் செய்யப்பட்டு வருகிறது. அரசு துறை நிறுவனங்கள் போல குறிப்பிட்ட விதிமுறைகளின்கீழ் பட்டியல்படி திருக்கோயில் அறங்காவலர் குழுவால் தேவைக்கேற்ப பணியிடங்களை ஏற்படுத்தி தற்காலிகமாக நியமித்து தேவையில்லாத காலங்களில் அப்பணியிடங்களை நீக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 30 சதவிகிதம் பணியிடங்களை மகளிருக்கு ஒதுக்க ஆகம விதிகளில் வழிவகைகள் இல்லை. எனவே, ஆலயங்களின் வேலை வாய்ப்புகளில் மகளிருக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய இயலாது.

**80—**

## ஆலயங்களை அறநிலையத் துறையோடு இணைத்தல்

**வினா எண் 26031—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டையில் உள்ள ஆலயங்கள் தனிப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளதால் அவற்றை தமிழக அறநிலையத் துறையோடு இணைக்கும் சூழ்நிலை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமாரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் உள்ளன.

**81—**

## இலவச திருமணத் திட்டம்

**வினா எண் 28562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் நிதியாண்டில் திருக்கோயில் சார்பாக சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கான இலவச திருமண திட்டத்தின்கீழ் எவ்வளவு இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தப்பட்டன?

(ஆ) திருக்கோயில் வாரியாக நடத்தப்பட்ட இணைகள் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் நிதியாண்டில் திருக்கோயில் சார்பாக சமுதாயத்தில் நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கான இலவச திருமண திட்டத்தின் கீழ் மொத்தம் 387 இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) திருக்கோயில் வாரியாக நடைபெற்ற திருமணங்கள் மற்றும் இணைகளின் எண்ணிக்கை:

[2000 ஏப்ரல் 4

| திருக்கோயிலின் பெயர் (1) | நாள் (2) | இணைகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| **1. இணை ஆணையர்/திருநெல்வேலி** | | |
| அருள்மிகு பண்மொழி திருமலைக் குமாரசாமி திருக்கோயில் | 01-07-1998<br>06-07-1998 | 1<br>2 |
| **2. இணை ஆணையர்/சிவகங்கை பிரிவு** | | |
| விருதுநகர் மாவட்டம் மடம்—சின்ன ஓடைப்பட்டி அருள்மிகு வன்னிய விநாயகர் திருக்கோயில் | 07-06-1998 | 3 |
| **3. இணை ஆணையர்/கோவை பிரிவு** | | |
| 1. அருள்மிகு சென்னியாண்டவர் ஆலயம் விராலிக்காடு, கோவை மாவட்டம் | 14-06-1998 | 2 |
| 2. அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் ஆலயம், மொண்டி பாளையம், அவிநாசி வட்டம், கோவை மாவட்டம் | „ | 3 |
| 3. அருள்மிகு வனபத்ரகாளியம்மாள் ஆலயம், தேக்கம்பட்டி, மேட்டுப் பாளையம் வட்டம் | „ | 10 |
| 4. அருள்மிகு சங்கமேஸ்வரசாமி ஆலயம், கோட்டை, கோவை நகர் | „ | 1 |
| 5. அருள்மிகு பட்டீஸ்வரர் ஆலயம், பேரூர், கோவை மாவட்டம் | „ | 3 |
| 6. அருள்மிகு வெள்ளிங்கிரி ஆண்டவர் ஆலயம் பண்டி, கோவை வட்டம் | „ | 5 |
| 7. அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம், காந்திபுரம், கோவை நகர் | „ | 3 |



2000 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 8. அருள்மிகு விநாயகர், சுப்பிரமணியர், மாரியம்மன் ஆலயம், காட்டூர், கோவை நகர் | 14-06-1998 | 1 |
| 9. அருள்மிகு மாசானியம்மன் ஆலயம், ஆனைமலை, கோவை மாவட்டம் | „ | 4 |
| 10. அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் ஆலயம், அவிநாசி நகர், கோவை மாவட்டம் | | 0 |
| 11. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், ஊட்டி, நீலகிரி மாவட்டம் | „ | 5 |
| 12. அருள்மிகு மாரியம்மன், விநாயகர் ஆலயம், சூலக்கல், கோவை மாவட்டம் | „ | 2 |
| 13. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் ஆலயம், அய்யம்பாளையம், பல்லடம் வட்டம் | „ | 4 |
| 14. அருள்மிகு தண்டுமாரியம்மன் ஆலயம், அவிநாசி சாலை, கோவை நகர் | „ | 3 |
| 15. அருள்மிகு கோனியம்மன் ஆலயம், பெரியகடை வீதி, கோவை நகர் | „ | 5 |
| 16. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம் | „ | 3 |
| 17. அருள்மிகு பாலதண்டாயுதபாணிசாமி ஆலயம், சுக்கிரவார்பேட்டை, கோவை நகர் | „ | 3 |
| 18. அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் ஆலயம், திருமூர்த்திமலை, உடுமலை | „ | 3 |
| 19. அருள்மிகு கல்யாணசுப்பிரமணியசாமி ஆலயம், அன்னூர், கோவை மாவட்டம் | „ | 1 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 20. அருள்மிகு மன்னீஸ்வரர் திருக்கோயில், அன்னூர், கோவை மாவட்டம் | 14-06-1998 | 2 |
| 21. அருள்மிகு அரங்கநாதசாமி ஆலயம், காரமடை, கோவை மாவட்டம் | " | 5 |
| 22. அருள்மிகு காரணவிநாயகர் ஆலயம், மந்தம்பாளையம், கோவை | " | 5 |
| 23. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோவை | " | 3 |
| 24. அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயம், மருதமலை, கோவை | " | 13 |
| 25. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கருவலூர், கோவை | " | 2 |
| 26. அருள்மிகு ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் | 4/1998 முதல் 3/99 வரை | 13 |
| **4. இணை ஆணையர்/வேலூர்** | | |
| அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு | 19-06-1998 | 79 |
| **5. இணை ஆணையர்/சேலம் மண்டலம்** | | |
| 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், செவ்வாப்பேட்டை, சேலம்-2 | 25-10-1998 | 5 |
| 2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சஞ்சீவராயன் பேட்டை, சேலம் | " | 5 |
| 3. அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி, சேலம் மாவட்டம் | " | 5 |
| 4. அருள்மிகு எல்லைமாரியம்மன் திருக்கோயில், சேலம் | " | 5 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், ஒருக்காமலை, சேலம் | 25-10-1998 | 10 |
| 6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சென்னிமலை | " | 5 |
| 7. அருள்மிகு சிதம்பர விநாயகர் திருக்கோயில், சேலம் | " | 5 |
| 8. அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமணசாமி திருக்கோயில், சின்னதிருப்பதி, ஓமலூர் | " | 5 |
| 9. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், குமரக்குடி, சேலம் | " | 5 |
| இதர திருக்கோயில்கள்: | " | 15 |
| **6. இணை ஆணையர்/தஞ்சாவூர்** | | |
| 1. திருவாளர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் | 08-03-1995 | 57 |
| 2. தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் | 09-03-1998 | 51 |
| 3. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் | 06-07-1998 | 1 |
| 4. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | 06-07-1998 | |
| | 15-09-1998 | |
| | 09-11-1998 | |
| | 29-11-1998 | 5 |
| | | **387** |

[2000 ஏப்ரல் 4

82—

### மண்ணெண்ணெய் சிற்றங்காடிகள் திறத்தல்

**வினா எண் 12561—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் கூட்டுறவு மண்ணெண்ணெய் சிற்றங்காடிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இதில் சேலம் மாவட்டத்தில் சங்ககிரி, எடப்பாடி வட்டங்களில் எத்தனை மண்ணெண்ணெய் சிற்றங்காடிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென தனியே மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டு 30 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைத்திட அரசு ஆணையிட்டது. இத்திட்டத்திற்கு மக்கள் அளித்த வரவேற்பினைத் தொடர்ந்து மேலும் 1997-98 ஆம் ஆண்டில் 100 மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கவும். 1998-99 ஆம் ஆண்டில் மேலும் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கவும், அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்ட தலைமையிடங்களில் தலா ஒன்று வீதம் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டதில் எடப்பாடி வட்ட தலைமையிடத்தில் ஆவணிப் பேரூர் தொடக்க வேளாண்மை வங்கி ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்துள்ளது. இம்மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் 9-3-1999 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. சங்ககிரி கூட்டுறவு பண்டகசாலைக்குச் சொந்த இடம் இல்லாததால் அரசு புறம்போக்கு நிலத்தின் உரிமை மாற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 4]

83—

### பயிர்க் கடன் வழங்குதல்

**வினா எண் 20417—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

84—

### இலவச அங்காடி

**வினா எண் 20793—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோயில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி எல்லைக்குட்பட்ட கடகடப்பை அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மண்டலத்தில் 1999-2000-ல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டும் திட்டத்திற்கு அனுப்பப்பட்ட 123 அங்காடிகளின் பட்டியலில் கடகடப்பை அங்காடி இடம் பெறவில்லை. எனவே

[2000 ஏப்ரல் 4

2000-2001 ஆம் ஆண்டுக்கான இலவச அங்காடிகள் கட்டித் தரும் திட்டத்திற்கு கடகடப்பை அங்காடி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**85—**

**அமுதம் அங்காடிக்குக் கட்டடம்**

**வினா எண் 23052—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், சோழகன் குடிகாடு கிராமத்திலுள்ள அமுதம் அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆம் ஆண்டுக்கான இலவச கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் சோழகன்குடிகாடு நியாயவிலை அங்காடி இடம் பெறவில்லை. எனவே 2000-2001 ஆம் நிதியாண்டில் இலவச அங்காடிகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் சோழகன்குடிகாடு நியாயவிலை அங்காடி பரிந்துரைக்கப்படும்.

**86—**

**கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம்**

**வினா எண் 24013—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தெக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உப்புண்டார்பட்டி கிராம கூட்டுறவு அங்காடிக்கு ஒரு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



2000 ஏப்ரல் 4]

தஞ்சாவூர் மாவட்டம், தெக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் உப்புண்டார்பட்டி கிராம கூட்டுறவு அங்காடிக்கு அடுத்த நிதியாண்டில் (2000-2001) கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**87—**

**தனி ஊதியம் வழங்குதல்**

**வினா எண் 28180—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சில ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5 சதவீதம் தனி ஊதியத்தை எல்லாப் பணியாளர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 6-வது சம்பள கமிஷன் அறிக்கையின்மீது நியமனம் செய்யப்பட்ட ஒரு நபர் குழு பரிந்துரையின் அடிப்படையில் 15-9-1998 அன்று நிதித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 497-ல் ஏற்கெனவே 5 சதவீதம் தனி ஊதியம் வழங்கப்பட்ட பிரிவினருக்கு, 1-9-1998 முதல் மீண்டும் 5 சதவீதம் தனி ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டது. அது இக்கழகத்திலும் இயக்குநர் குழு ஒப்புதலுக்குப் பிறகு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் 5 சதவீதம் தனி ஊதியம் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்க வாய்ப்பில்லை.

**88—**

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்**

**வினா எண் 30347—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 14 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 2 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உத்தேசித்துள்ள மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களின் விவரம்:—

| | | |
|---|---|---|
| (1) | பணி முடிந்து செயல்படும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள். | 4 |
| (2) | கட்டுமானப்பணி முடிந்து தொடங்க தயார் நிலையில் உள்ளது. | 1 |
| (3) | கட்டுமானப்பணி நடைபெற்று வரும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் | 6 |
| (4) | கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள். | 5 |
| | மொத்தம் | **16** |

**89—**

## கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா எண் 30641—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் 10-12-1997 முதல் செயல்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை நிலையம் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின் கூட்டுறவுப் பயிற்சித் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யும் என்பதால், இதே மாவட்டம், பெண்ணாகரத்தில் மேலும் ஒரு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தினைத் தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**90—**

## மண்ணெண்ணெய் பங்குகள் ஆரம்பித்தல்

**வினா எண் 32723—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் எத்தனை இடங்களில் மண்ணெண்ணெய் பங்குகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது?

(ஆ) இன்னும் எவ்வளவு பங்குகள் புதிதாக இத்தொகுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் ஆவணிப்பேரூர் மேல் முதல் நகராட்சிப் பகுதியைச் சார்ந்த 9551 குடும்ப அட்டைகளுடன் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் 25-08-1999 தேதி முதல் அமைக்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 60,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது.

(ஆ) எடப்பாடி தொகுதியில் 2 கிலோ மீட்டர் சுற்றளவில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்து மாதம் 50,000 லிட்டர்

மண்ணெண்ணெய் நேரடியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் வகையிலும், இதர நியாய விலைக் கடைகளுக்கு வழங்கக்கூடிய வகையிலும் போதிய குடும்ப அட்டைகள் இப்பகுதியில் இல்லாத சூழ்நிலையில், மேலும் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**91—**

### பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

**வினா எண் 23652—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் எத்தனை உள்ளது?

(ஆ) 1998-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் எத்தனை?

(இ) மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் தினசரி எவ்வளவு பால் கொள்முதல் செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 164-ம், அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5-ம், ஆக மொத்தம் 169 சங்கங்கள் உள்ளன.

(ஆ) 1998-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 69 ஆகும்.

(இ) மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 20,475 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.



**92—**

### பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 27898—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் வட்டத்தில் 48 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 7 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 41 சங்கங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேற்படி 41 சங்கங்களில் 2 சங்கங்களுக்கு மட்டும் அடிமனை உள்ளது. மேலும், சங்கங்களிடம் போதிய நிதி வசதி இல்லாததால் இன்னும் அடிமனை வாங்கப்படவில்லை. சொந்த அடிமனை இல்லாத சங்கங்களில் பால் உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்கி, அடிமனை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சொந்த அடிமனை உள்ள சங்கங்களுக்கு நமக்கு நாமே திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**93—**

### ஆவின் பால் பாக்கெட்டுகள்

**வினா எண் 29390—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பால் பாக்கெட்டுகள் சாலை ஓரத்தில் உள்ள பங்குகளில் வழங்குவதால் சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் பண்ணைகளில் பல்வேறு நிலைகளில் பாலின் தரம் பரிசோதிக்கப்பட்டு, ஆவின் பால் கெட்டியான பாலிதின் பைகளில் அடைத்து விற்கப்படுவதால் சாலை ஓரத்திலுள்ள பங்குகளில் விற்கப்படுகின்றபோதிலும், சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்பில்லை.

**94—**

**பணியை வரன்முறைப்படுத்துதல்**

**வினா எண் 31636—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தற்காலிகமாகப் பணிபுரியும் பணியாளர்களின் பணியை வரன்முறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தற்காலிகமாகப் பணிபுரியும் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்த தேவையான 76 இளநிலை மஸ்தூர் பணியிடங்களைத் புதிதாக ஏற்படுத்துவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**95—**

**தொழில் பயிற்சி நிலையம் அமைத்தல்**

**வினா எண் 19433—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் இதுவரை தொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



2000 ஏப்ரல் 4]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் லட்சுமி நாராயணா ஐ.டி.ஐ. என்ற தனியார் தொழில் பயிற்சி நிலையம் ஏற்கெனவே உள்ளது.

**96—**

**கட்டடத் தொழிலாளர் நல வாரியம்**

**வினா எண் 22685—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டடத் தொழிலாளர் நல வாரிய முடிவுகளின்படி மகப்பேறு, திருமணம், கல்விகளுக்கான உதவித்தொகை வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இதுகுறித்து செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) அரசாணை (நிலை) எண் 139, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 3-11-1998 ல் வெளியிடப்பட்ட ஆணைப்படி கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் கீழ்கண்ட கூடுதல் நலத் திட்டங்கள் சேர்க்கப்பட்டு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அவற்றை செயலாற்றி வருகிறது:—

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில்—

(1) பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை ரூ.1,000 (இருமுறை மட்டும்) வழங்கப்படுகிறது.

(2) பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன்/மகள் ஆகியவர்களுக்குத் திருமண உதவித்தொகை ரூ. 1,000 (இருமுறை மட்டும்) வழங்கப்படுகிறது.

[2000 ஏப்ரல் 4

(3) பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன்/மகள் ஆகியவர்கள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் கல்வி உதவித் தொகை முறையே ரூ.750 மற்றும் ரூ. 1,000 (இரு குழந்தைகளுக்கு மட்டும்) வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களுள் மகப்பேறு உதவியாக வழங்கப்பட்டு வரும் ரூ.1,000-ஐ ரூ.2,000 ஆக உயர்த்தலாமென்று வாரியம் முடிவெடுத்துள்ளது. இதற்கான முதல்நிலை அறிவிக்கை அரசாணை எண் 113, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 28-7-1999-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**97—**

## பணிபுரியும் ஆசிரியர்களின் பதிவு எண்கள் இரத்து செய்தல்

**வினா எண் 32000—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தனியார் மற்றும் சிறுபான்மை தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வேலை வாய்ப்புப் பதிவு எண்கள் இரத்து செய்யப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இரத்து செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் மட்டுமின்றி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் மற்றும் சிறுபான்மையோர் தொடக்க நடுநிலைப் பள்ளிகளில பணியாற்றும் ஆசிரியர்களது பெயர்கள் வேலைவாயப்பக உயிர்ப்பதிவேட்டிலிருந்து நீக்கப்படவில்லையென்று புகார்கள் பெறப்பட்டதன் அடிப்படையில், சென்னை-6, தொடக்கக் கல்வி இயக்குநருக்கு இப்புகார் குறித்து தெரிவிக்கப்பட்டு, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு 1998-99 ஆம் கல்வியாண்டில் அரசு நிதியுதவி பெறும் தொடக்க நடுநிலைப் பள்ளிகளின் வேலைவாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலை உடன் சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனுப்பி



2000 ஏப்ரல் 4]

அவர்களது பதிவுகளை உடன் பதிவேட்டிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை-6, தொடக்கக் கல்வி இயக்குநர் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

வேலை வாய்ப்பக அலுவலகங்களிலும் நியமன விவரங்கள் பெறப்பட்டவுடன் பதிவட்டைகள் உடனுக்குடன் நீக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், குறிப்பாக சிறுபான்மையோர் பள்ளிகளில் நேரடியாகப் பணியில் அமர்த்தப்படும் ஆசிரியர்களின் வேலை வாய்ப்பக அலுவலகப் பதிவுகளையும் நீக்க உரிய அறிவுரைகள் கிளை அலுவலர்களுக்கு வழங்கப்பட சென்னை-6, தொடக்கக் கல்வி இயக்குநர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**98—**

## கட்டடத் தொழிலாளர்கள் நல வாரியம்

**வினா எண் 33329—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்குச் செலுத்தும் பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்களைப் பதிவுபெற்ற சங்கங்கள் மூலமாக வாரியத்திற்குச் செலுத்த அரசு அனுமதிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு கட்டுமானத் தொழிலாளர்கள் செலுத்தும் பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் ஆகியவைகளைப் பதிவு பெற்ற தொழில் சங்கங்கள் மூலம் செலுத்துவதற்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அனுமதி வழங்கி வருகிறது.

**99—**

## உரிமையியல் நீதிமன்றங்கள்

**வினா எண் 32356—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

(அ) தமிழ்நாட்டில் உரிமையியல் நீதிமன்றங்களில் எவ்வளவு வழக்குகள் தேங்கியுள்ளன?

(ஆ) அவற்றை காலத்தில் விசாரித்து முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உரிமையியல் நீதிமன்றங்களில் 30-9-1999 அன்று நிலவரப்படி நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிலுவையிலுள்ள அந்த வழக்குகளை விசாரித்து முடிப்பதற்கான நடவடிக்கை முழுக்க நீதித் துறையைச் சார்ந்ததாகும். இவற்றை விரைந்து முடிப்பதற்கு, சென்னை உயர்நீதிமன்றம் அவ்வப்போது அனுப்பும் செயற்குறிப்புகளைப் பரிசீலனை செய்து, அரசின் நிதிநிலைக்கேற்ப புதிய உரிமையியல் நீதிமன்றங்களையும் கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்களையும், கூடுதல் பணியாளர்களையும் ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கிறது; மற்றும்

(2) நீதித் துறையைப் பொறுத்தவரை உரிமையியல் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் எல்லா வகையான நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் மாவட்ட அமர்வு நீதிபதிகள் பதிவாகும் வழக்குகள், முடிக்கப்படும் வழக்குகள் மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த பருவகால அறிக்கைகளைப் பரிசீலித்து, வழக்குகள் நிலுவையில் இருப்பதைத் தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். சென்னை உயர்நீதிமன்றம் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஓராண்டு பருவகால அறிக்கைகளை ஆய்வு செய்து, அதிக அளவில் வழக்குகளை முடித்து குறைந்த அளவில் வழக்குகளை நிலுவையில் வைப்பதற்குத் தேவையான ஆணைகளை பிறப்பிக்கிறது. இதுதவிர சென்னை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையிலான வழக்குகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு நீதித் துறை அலுவலர்களை வலியுறுத்தி வருகிறது. மேலும் மாவட்ட அமர்வு நீதிபதிகள் அனுப்பும் ஆண்டு ஆய்வு அறிக்கை மற்றும் முன்னறிவிப்பின்றி மேற்கொள்ளும் அறிக்கை (Annual Inspection and Surprise Inspection Report) ஆகியவற்றை சென்னை உயர்நீதிமன்றம் ஆய்வு செய்து நீதித் துறை அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளை அவ்வப்போது அனுப்பி வருகிறது.



2000 ஏப்ரல் 4]

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளும் நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

## இணைப்பு

### தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களில் 30-9-1999 அன்றைய நிலவரப்படி நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

| வரிசை எண் மற்றும் மாவட்டம் (1) | மாவட்ட நீதிமன்றம் (2) | சார்பு நீதிமன்றம் (3) | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1. சென்னை | | | | |
| அ. சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | .. | .. | .. | 43,981 |
| ஆ. சிறு வழக்குகள் | .. | .. | .. | 36,347 |
| 2. செங்கல்பட்டு | 649 | 39,414 | 51,014 | 91,077 |
| 3. கோயம்புத்தூர் | 1,799 | 20,444 | 16,400 | 38,643 |
| 4. கடலூர் | 489 | 9,966 | 11,617 | 22,072 |
| 5. தருமபுரி | 2,020 | 10,160 | 9,180 | 21,360 |
| 6. ஈரோடு | 3,647 | 8,532 | 10,896 | 23,075 |
| 7. திண்டுக்கல் | 1,015 | 17,853 | 12,758 | 31,626 |
| 8. கன்னியாகுமரி | 645 | 6,233 | 9,055 | 15,933 |
| 9. கரூர் | 1,106 | 3,837 | 3,573 | 8,516 |
| 10. மதுரை | 4,411 | 14,325 | 15,505 | 34,241 |
| 11. நாகப்பட்டினம் | 1,049 | 6,324 | 13,204 | 20,577 |
| 12. நீலகிரி | 225 | 741 | 3,340 | 4,306 |

| வரிசை எண் மற்றும் மாவட்டம் | மாவட்ட நீதிமன்றம் | சார்பு நீதி மன்றம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 13. புதுக்கோட்டை | 2,500 | 3,601 | 5,318 | 11,419 |
| 14. இராமநாதபுரம் | 1,183 | 1,381 | 2,761 | 5,325 |
| 15. சேலம் | 4,977 | 24,909 | 18,023 | 47,909 |
| 16. சிவகங்கை | 505 | 1,767 | 4,676 | 6,948 |
| 17. தஞ்சாவூர் | 1,209 | 9,376 | 11,453 | 22,038 |
| 18. தூத்துக்குடி | 1,686 | 5,139 | 2,807 | 9,626 |
| 19. திருச்சிராப்பள்ளி | 1,001 | 2,326 | 24,737 | 28,064 |
| 20. திருநெல்வேலி | 2,629 | 13,515 | 32,215 | 48,359 |
| 21. திருவண்ணாமலை | 1,603 | 6,650 | 15,008 | 23,261 |
| 22. வேலூர் | 676 | 14,151 | 26,496 | 41,323 |
| 23. விழுப்புரம் | 813 | 16,750 | 20,198 | 37,761 |
| 24. விருதுநகர் | 201 | 3,553 | 3,254 | 7,008 |
| 25. பெரம்பலூர் | 198 | 5,297 | 8,423 | 13,918 |
| மொத்தம் | **36,236** | **2,46,244** | **3,31,911** | **6,94,713** |

**100—**

### சத்துணவு மையம் அமைத்தல்

**வினா எண் 22121—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் தோப்புவிடுதி ஊராட்சி, பத்துப்புளி விடுதி கிராமத்தில் புதிய சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தோப்புவிடுதி மற்றும் பத்துப்புளி விடுதி கிராமங்களில் முறையே 42 மாணவர்களுடனும், 90 மாணவர்களுடனும் ஏற்கெனவே பள்ளி சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன.

## (ஆறாம் பட்டியல்)

**1—**

### மொபெட் திருட்டு வழக்கு விவரம்

வினா எண் **23884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98 -ஆம் ஆண்டு ஜூன் 1998 வரை மொபெட் வண்டிகள் திருட்டுப் போயின என்று எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(ஆ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(இ) எவ்வளவு வண்டிகள் திரும்ப உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 5409 வழக்குகள்.

(ஆ) 3574 பேர்கள் கைது.

(இ) 2775 வண்டிகள்.

2—

### தீயணைப்பு நிலையம்

**வினா எண் 24718—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரையூர் வட்டத்தில் புதிய தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓரிடத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்றால் அந்த இடத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிற்குள் வேறெந்த இடத்திலும் தீயணைப்பு நிலையம் இருக்கக்கூடாது என்பது அரசு கடைப்பிடிக்கும் அளவுகோல்களில் ஒன்றாகும். பேரையூரைச் சுற்றிலும் 25 கி.மீ. தொலைவிற்குள் உசிலம்பட்டி மற்றும் வத்திராயிருப்பு ஆகிய தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. பேரையூரில் நிகழும் தீ விபத்துக்களை மேற்கண்ட நிலைய ஊர்திகளைக் கொண்டு சமாளிக்க இயலும். எனவே, அங்கு புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

3—

### தீயணைப்பு வண்டி வழங்குதல்

**வினா எண் 28274—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால், அங்கு கூடுதலாக தீயணைப்பு தண்ணீர் வண்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், அதாவது 1996-ஆம் ஆண்டு 19 தீ விபத்து அழைப்புகளும், 4 மீட்பு அழைப்புகளும், 1997-ஆம் ஆண்டு 20 தீ விபத்து அழைப்புகளும் மற்றும் 1998-ஆம் ஆண்டு 23 தீ விபத்து அழைப்புகளும் பெறப்பட்டுள்ளன. மேலும், மாதம் ஒன்றிற்குச் சராசரியாக 2 தீ விபத்து அழைப்புகளே பெறப்படுவதால், இந்நிலையத்திற்கு மேற்கொண்டு கூடுதலாக தீயணைப்பு தண்ணீர் வண்டி வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை. மேலும், தேவைப்படும்போது இந்நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள தருமபுரி மற்றும் பாலக்கோடு தீயணைப்பு நிலையங்களில் உள்ள ஊர்திகள் உதவிக்கு அழைத்துக்கொள்ளப்படும்.

4—

### ரேஷன் பொருட்களின் தரம்

**வினா எண் 30504—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினருக்கு அளிக்கப்படும் மலிவுவிலை உணவுப் (ரேஷன்) பொருட்கள் தரமில்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பொருட்களுக்கு பதில், பணமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காவல் துறையினருக்கு அளிக்கப்படும் மலிவு விலை உணவுப் (ரேஷன்) பொருட்கள் தரமானதாகத்தான் வழங்கப்படுகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

**தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 30915—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அரியலூர் தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரியலூர் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்து கையகப்படுத்தப்பட்ட பின்னர், அரசு நிதி நிலையைக் கருத்தில் கொண்டு நிரந்தரக் கட்டடம் கட்ட பரிசீலிக்க இயலும்.

6—

**அவசர ஊர்தி**

**வினா எண் 31182—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பெண்ணாகரத்திலிருக்கும் தீயணைப்பு நிலையத்திற்கு அவசர ஊர்தி வழங்குவதன் அவசியம் குறித்தும், தீயணைப்பு நிலையத்திலுள்ள வாகனத்தைப் பழுதுபார்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் செயல்பட்டு வரும் நிலையம் ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு



நிலையமாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் மாதம் ஒன்றிற்குச் சராசரியாக இரண்டு தீ விபத்து அழைப்புகளே பெறப்படுகின்றன. இந்நிலையில் பெண்ணாகரம் தீயணைப்பு நிலையத்திற்கு அவசர கால மீட்பு ஊர்தி வழங்க வேண்டிய நிலை தற்போது ஏற்படவில்லை. மேலும், பெண்ணாகரம் தீயணைப்பு நிலையத்தில் தற்பொழுது இயங்கிவரும் நீர்தாங்கி வண்டி நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு இயங்கி வருவதால் இதனைப் பழுது பார்க்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

7—

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 31183—திரு.ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி முழுவதும் கிராமங்கள் நிறைந்து இருப்பதாலும், அந்தப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதாலும் கூடுதல் தீயணைப்பு வாகனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருவது ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையமாகும். கடந்த 3 ஆண்டுகளில் மாதம் ஒன்றிற்குச் சராசரியாக 2 தீ விபத்து அழைப்புகளே பெறப்படுகின்றன. தேவைப்படும்போது இந்நிலையத்திற்கு அருகில் உள்ள தருமபுரி மற்றும் பாலக்கோடு தீயணைப்பு நிலையங்களில் உள்ள ஊர்திகள் உதவிக்கு அழைத்துக்கொள்ளப்படுவதாலும் கூடுதல் தீயணைப்பு வாகனங்கள் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

8—

**நவீன வாகனங்கள்**

**வினா எண் 31184—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 4

(அ) தீயணைப்புத் துறைக்கு நவீன வாகனங்கள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீயணைப்புத் துறையில் ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் நீர்தாங்கி வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது தவிர பின்லாந்திலிருந்து வாங்கப்பெற்ற ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் நீட்டிப்பு ஏணி ஊர்திகள், ஜப்பானிலிருந்து வாங்கப்பெற்ற இசுசு தயாரிப்பு நீட்டிப்பு ஏணி ஊர்தி, இங்கிலாந்திலிருந்து வாங்கப்பெற்ற சைமன் ஸ்நார்கல் ஊர்தி; அவசர கால மீட்பு ஊர்திகள், நுரைதகர்வு மற்றும் நீர்விடுகுழாய் ஊர்தி போன்ற நவீன வாகனங்கள் தீயணைப்புத் துறையின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் பத்தாவது நிதிக் குழு மூலம் ரூ.4.00 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ள மாநிலப் பயிற்சி மையத்தின் உபயோகத்திற்கென ரூ.24.00 இலட்சம் செலவில் 1 சிறிய நுரைதகர்வு ஊர்தி வாங்கப்பட்டுள்ளது. மேலும் 11-வது நிதிக் குழு உதவி மூலம் சில நவீன வாகனங்கள் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9—**

### தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 31797—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தக்கலை தீயணைப்பு நிலையத்திற்கு புலியூர் குறிச்சி கிராமத்தில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சர்வே எண்



2000 ஏப்ரல் 4]

டி.1/252-ல் 25 சென்ட் புறம்போக்கு நிலம் உள்ளது. பொதுப் பணித் துறையினர் உபரியான இந்நிலத்தைக் குத்தகைக்குத்தான் கொடுக்க இயலும் எனத் தெரிவித்துள்ளனர். மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் மேற்கூறிய நிலத்தை மாற்றம் செய்து தரக் கோரப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு செய்து பெறப்பட்டதும், அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு கட்டடம் கட்டித்தர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**10—**

### குற்றவாளிகள் விவரம்

**வினா எண் 32944—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் காவலர் குடியிருப்பில் வெடிகுண்டு வைத்தது தொடர்பாக எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோவையில் காவலர் குடியிருப்பில் வெடிகுண்டு வைத்தது தொடர்பாக இதுவரை 21 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**11—**

### கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டோர் விவரம்

**வினா எண் 32980—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி முடிய தமிழ்நாட்டில், தமிழ்நாடு முழுவதும் கள்ளச்சாராயம் காய்ச்சும், விற்கும் தொழிலில் ஈடுபட்டவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்?

(ஆ) இதில் ஆண்கள் எவ்வளவு பேர், பெண்கள் எவ்வளவு பேர்?

(இ) இதில் கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயத்தின் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1999 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி முடிய தமிழ்நாடு முழுவதும் கள்ளச் சாராயம் காய்ச்சும், விற்கும் தொழிலில் ஈடுபட்டவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,66,260.

(ஆ) இதில் ஆண்கள் 1,28,916 பேர், பெண்கள் 37,344 பேர்.

(இ) இதில் கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயத்தின் தோராய மதிப்பு ரூ.15,13,20,840.

**12—**

**குற்றவாளிகள் விவரம்**

**வினா எண் 33225—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயக் குற்றத்திற்காக 1998 ஆம் ஆண்டு 17,884 பேரும், 1999 ஆம் ஆண்டு 22,104 பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**13—**

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 33335—டாக்டர் அ. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டை மற்றும் தியாகதுருகம் பகுதிகளில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓரிடத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமானால் அவ்வூரைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறெந்த இடத்திலும் தீயணைப்பு நிலையம் இருக்கக்கூடாது என்பது முக்கிய அளவுகோல்களில் ஒன்றாகும். எலவனாசூர் கோட்டையைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் 3 தீயணைப்பு நிலையங்களும், தியாகதுருகத்தைச் சுற்றி 2 தீயணைப்பு நிலையங்களும் இயங்கி வருவதால் மேற்காணும் தீயணைப்பு நிலைய ஊர்திகளைக் கொண்டே அப்பகுதிகளில் நிகழும் தீ விபத்துக்களைச் சமாளிக்க இயலும். எனவே, மேற்கண்ட இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கத் தேவையில்லை.

**14—**

**ஆசிரியர் பயிற்சி நிலையம்**

**வினா எண் 27516—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையம் எத்தனை நடந்து வருகிறது?

(ஆ) தனியார் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையம் எத்தனை நடந்து வருகிறது?

(இ) சேலம் மாவட்டத்தில் தனியார் நடத்தும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையம் எத்தனை இயங்கி வருகிறது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 8 அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் நடைபெற்று வருகின்றன.

(ஆ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 44 உள்ளன.

[2000 ஏப்ரல் 4

(இ) சேலம் மாவட்டத்தில் தனியார் நடத்தும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 2 உள்ளன.

**15—**

**கலைக் கல்லூரி இடம் மாற்றம் செய்தல்**

**வினா எண் 29978—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியை மருத்துவக் கல்லூரி வளாகத்திற்கு மாற்றிவிட்டு இப்பொழுது அக்கல்லூரி இருக்கும் இடத்தை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**16—**

**ஹீட்டர் மெஷின் அமைத்தல்**

**வினா எண் 27080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் இயங்கும் ஹீட்டர் மெஷின் (Heater Machine) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் இயங்கும் ஹீட்டர் மெஷின் (Heater Machine) அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 ஏப்ரல் 4]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**17—**

**மின் இணைப்பு மனுக்கள்**

**வினா எண் 31110—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் கோட்டம், எடப்பாடி நகர் பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி நிலுவையிலுள்ள மனுக்கள் எத்தனை என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) அவற்றிற்கு விரைவில் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகர் பிரிவு அலுவலகப் பகுதியில் விவசாய மின் இணைப்புக் கோரி வந்துள்ள மனுக்கள் 49.

(ஆ) மனுதாரர்களுக்கு வாரியத் திட்டங்களுக்கேற்ப எதிர்வரும் காலங்களில் மின் இணைப்பு வழங்க ஒதுக்கப்படும் குறியீட்டின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

**மின் இணைப்பு மனுக்கள்**

**வினா எண் 31112—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின்கோட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது இவ்வாண்டு இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு. நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியில் விவசாய மின் இணைப்பு வேண்டி வந்துள்ள மனுக்கள் 506 ஆகும். இதில் மின் இணைப்பு வழங்கியவை 12 ஆகும்.

(ஆ) நிலுவையில் உள்ள மனுக்கள்மீது மனுதாரர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் குறியீட்டுக்கு ஏற்ப எதிர்வரும் காலங்களில் வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

### மின் இணைப்பு மனுக்கள்

**வினா எண் 31552—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கோரி எத்தனை மனுக்கள் அரசுக்கு வந்தன?

(ஆ) அவற்றிற்கான இணைப்பு வழங்க ஆணை வழங்கப்பட்டு விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து மின் இணைப்பு கோரி பெறப்பட்ட மனுக்கள் விவரமாவது; 1996-97 ஆம் ஆண்டில் 50,570 மனுக்களும், 1997-98 ஆம் ஆண்டில் 64,031 மனுக்களும், 1998-99 ஆம் ஆண்டில் 46,003 மனுக்களுமாக மொத்தம் 1,60,604 மனுக்கள் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ளன.



(ஆ) அவற்றிற்கான இணைப்பு வழங்க ஆணை வழங்கப்படவில்லை. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து 31-12-1998 வரை, 4,91,994 விவசாய மின் இணைப்பு கோரி பெறப்பட்ட மனுக்கள் நிலுவையில் உள்ளன. இம் மனுக்கள் மீது பதிவு செய்த அடிப்படையில் ஆண்டுக்கு 40,000 மின் இணைப்புகள் வழங்க அரசால் இலக்கீடு நிர்ணயித்து வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

**20—**

### சித்த மருத்துவக் கச்சாப் பொருள்

**வினா எண் 32331—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, சானடோரியத்தில் உள்ள நெஞ்சக நோய் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சித்த மருத்துவக் கச்சாப் பொருள் வாங்க மாதம் எவ்வளவு தரப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, சானடோரியத்திலுள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனைக்கெனத் தனியாக கச்சாப் பொருள்கள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**21—**

### கூடுதல் வங்கி

**வினா எண் 25449—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பங்களா சுரண்டையில் கட்டப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் மேல்தளம் அமைக்கப்படாமலும், மின்வசதி, கழிப்பறை வசதி மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கப்படாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பங்களா சுரண்டையில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் மேல்கூரை அமைக்கப்பட்டுவிட்டது. மேல்கூரைக்கு மேல் செங்கல் தளம், மின் வசதி, கழிப்பறை வசதி அமைத்து கட்டடத்தை சீர் செய்யும் பணியைத் தொடங்குமாறு கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அரசுக் கட்டடங்கள் கட்டுவது குறித்து அரசால் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி சுற்றுச்சுவர் கட்ட தடையாணை உள்ளது.

22—

### கட்டட வசதி

**வினா எண் 31620—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு எல்லாத் துறை அலுவலகங்களும் ஒரே வளாகத்தில் அமையக்கூடிய வகையில் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நிதி நிலையைக் கருத்தில் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து துறை அலுவலகங்களும் ஒரே இடத்தில் ஒரே வளாகத்தில் அமையக்கூடிய வகையில் புதிய கட்டடம் கட்டும் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.



2000 ஏப்ரல் 4]

23—

### கிராம அதிகாரி அலுவலகம்

**வினா எண் 31932—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சிக்கு கிராம அதிகாரி அலுவலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சட்டம்-ஒழுங்கை சரியாகப் பராமரிப்பதற்கு ஏதுவாக முதற்கட்டமாக கூர் உணர்வுடைய கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. ஆர். புதுக்கோட்டை கிராமம் அதில் இடம் பெறவில்லை. எனவே, அங்கு கிராம நிர்வாக அலுவலர் குடியிருப்பு கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

24—

### தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் வசதி

**வினா எண் 23598—திரு. கே. ரவி. அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடமும், சத்துணவு சமைப்பதற்கு சமையல்கூடமும் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள் அந்த ஊரின் கிழக்கு மற்றும் மேற்கு ஆக இருபகுதிகளாக இயங்கி வருகின்றது. கிழக்குப் பகுதியில் உள்ள பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறையும், சமையல் கூடமும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேற்குப் பகுதியில் உள்ள பள்ளியில் சமையல் கூடம் கட்டப்பட்டுவிட்டது. கூடுதல் வகுப்பறை வரும் நிதியாண்டில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 25175—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைத்து புதிய மேல்நிலைத் தொட்டி கட்டி கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 26319—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, எர்பையன அள்ளி ஊராட்சி, ஜெம்பேரி முனியப்பன் கோயில் அருகில் மற்றும் நெக்குந்தி தெரு ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் கஷ்டத்தைப் போக்க கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, எர்பையன அள்ளி ஊராட்சி, நெக்குந்தியில் ஏற்கெனவே கைப்பம்பு உள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு அரசால் சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக ரூ.73.4633 கோடி உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தேவைக்கேற்ப ஜெம்பேரி முனியப்பன் கோயில் அருகில் கைப்பம்பு அமைத்துக் கொள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

27—

## குடிநீர் வசதி

**வினா எண் 26323—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாகலஅள்ளி ஊராட்சி, வடிவேல் கொட்டாய் மற்றும் குரும்பட்டி கொட்டாய் கிராமங்களில் குடிநீர் வசதியில்லாமலிருப்பதால் இங்கு நடப்பாண்டில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாகல அள்ளி ஊராட்சி, வடிவேல் கொட்டாய், குரும்பட்டி கொட்டாய் ஆகிய

இடங்களுக்கு 1999-2000-ம் ஆண்டிற்கு அரசினால் சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக ரூ.73.4633 கோடி உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தேவைக்கேற்ப கைப்பம்புகளை அமைத்துக்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**28—**

**கூடுதல் தெருவிளக்கு அமைத்தல்**

**வினா எண் 26543—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்படடி ஊராட்சியைச் சேர்ந்த சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் கூடுதலாக தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே 44 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே தற்போது போதுமானதாக உள்ளது.

**29—**

**தெரு விளக்கு**

**வினா எண் 27501—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சியைச் சேர்ந்த ஆத்துக்குழி கொட்டாய் கிராமத்திற்கு கூடுதலாக தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, ஆத்துக்குழி கொட்டாய் கிராமத்திற்கு 1999-2000 ஆம் நிதி ஆண்டில் தெருவிளக்கு அமைக்க மின்வாரியத்திற்குத் தொகை செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**30—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் 4-வது வார்டில் உள்ள அருந்ததியர் தெரு, முண்டாச்சியூர், காட்டுவளவு, கவுண்டர் கொட்டாய்ரெட்டி தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக பைப் லைன் பதித்து குடிநீர் வழங்க ஆவன செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியில் 4-வது வார்டில் உள்ள அருந்ததியர் தெரு மற்றும் ரெட்டித் தெரு ஆகிய இருபகுதிகளுக்கும் குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டுவிட்டது. ஏனைய பகுதிகளான முண்டாச்சியூர், காட்டுவளவு, கவுண்டர் கொட்டாய் முதலிய பகுதிகள் மிகவும் பரந்து கிடப்பதாலும் ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு முதல் ஐந்து வீடுகள் மட்டுமே இருப்பதாலும் இப்பகுதிகளைச் சென்றடைவதற்குப் பொது வழி இல்லாமல் தனியார் நிலத்தின் மீதே நடந்து செல்லவேண்டியிருப்பதாலும், இப்பகுதிகளுக்கான குடிநீர் விரிவாக்கத்திற்கான குழாய் பதிக்க இடவசதி இல்லை. தவிர மேற்கண்ட குடிநீர்த் திட்டத்தின் முடிக்கப்பட்ட

[2000 ஏப்ரல் 4

வேலைகள் யாவும் 31-12-1998 அன்று எடப்பாடி நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இப்பகுதிக்கான குடிநீர் ஒதுக்கீடு எதுவும் இல்லாததால் குடிநீர் விரிவாக்கம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

31—

முழுநேர ஊழியராக்குதல்

**வினா எண் 30526—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் விசைப் பணியாளர்களை முழுநேர ஊழியராக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. கிராம ஊராட்சிகளின் பணியமைப்பை அவைகளின் நிதி நிலைக்கு ஏற்ப சீரமைப்பது குறித்து ஆய்வு செய்து ஆறுமாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில் ஒரு குழு ஊரக வளர்ச்சித் துறையின் 9-7-1999 நாளிட்ட அரசாணை (2டி) எண் 149-ல் அமைக்கப்பட்டுள்ளது.

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 32116—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நீலகிரி ஊராட்சிக்குட்பட்ட அருட்பிரகாசம் நகர், மூகாம்பிகை நகர், ராஜீவ் நகர், கண்ணம்மா நகர், நேஷனல் பார்மா நகர் ஆகிய நகர்களில் வசிக்கும் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலை குடிதண்ணீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஒன்றியத்தில் உள்ள நீலகிரி ஊராட்சிக்குட்பட்ட அருட்பிரகாசம் நகர், மூகாம்பிகை நகர் ராஜீவ் நகர், கண்ணம்மா நகர், நேஷனல் பார்மா நகர் (இவை அனைத்தும் வள்ளலார் நகர் குடியிருப்பின் பகுதிகளாகும்) ஆகியவற்றின் தற்போதைய மக்கட்தொகை 920 ஆகும். தற்சமயம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 150 மி.மீ. விட்டமும் 90 மீ. ஆழமும் உள்ள ஒரு ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன், 2500 மீ. பகிர்மானக் குழாய் மற்றும் 10 பொதுக் குழாய் மேடைகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1998-99 தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

33—

மானியம்

**வினா எண் 24880—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் விவசாயத் துறையின் வளர்ச்சிக்காக 18 குதிரைச் சக்தி கொண்ட டிராக்டர்கள் வாங்குவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு எவ்வளவு மானியம் அளித்துள்ளது?

(ஆ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் 30 குதிரை சக்தி வரை திறன் கொண்ட சிறிய டிராக்டர் வழங்குவதற்கான திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில்

மத்திய அரசு மேற்கண்ட திட்டத்திற்காக ரூ.69.90 இலட்சம் மானியம் அளித்துள்ளது.

(ஆ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு மேற்கண்ட திட்டத்தின்கீழ் ரூ.8,70,000/- மானியத்தில், 29 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

**34—**

**டிராக்டர் வழங்கிய விவரம்**

**வினா எண் 24891—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதிவரை சேலம் மாவட்டத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எத்தனை நபர்களுக்கு சிறிய டிராக்டர் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு 1998 டிசம்பர் 15 ஆம் தேதிவரை சேலம் மாவட்டத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 23 நபர்களுக்கு சிறிய டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு டிராக்டருக்கும் மானியமாக ரூ.30,000 வழங்கப்பட்டுள்ளது.

**35—**

**கரும்பு விற்பனை**

**வினா எண் 30369—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1,000 என்று நிர்ணயம் செய்து வழங்க, அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஆண்டும் கரும்பிற்கான சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை மைய அரசு நிர்ணயித்து அறிவிப்பு செய்கிறது. பொதுவாக மாநில அரசு பரிந்துரைக்கும் விலையை மைய அரசு ஏற்று நிர்ணயம் செய்வதில்லை. எனவே, கரும்பு ஓராண்டுப் பயிர் என்பதால், ஓராண்டு காலத்தில் கரும்பு விவசாயிகள் கரும்பு அல்லாமல் இரண்டு பருவத்தில் நெல்லும் ஒரு பருவத்தில் மணிலாவும் சாகுபடி செய்தால் கிடைக்கக்கூடிய விலை மற்றும் கரும்பு சாகுபடிக்கான செலவைக் கருத்திற் கொண்டும் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்குக் கிடைக்கும் லாபத்தின் மூலம் அவர்கள் கரும்புக்குக் கொடுக்க இயலும் விலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும், மாநில அரசு மைய அரசு அறிவிக்கும் விலையை விட கூடுதலாக ஒரு பரிந்துரை அறிவித்து வருகிறது. நடப்பு ஆண்டில் இந்நடைமுறை தொடரும்.

**36—**

**விவசாயிகளுக்குத் தென்னங்கன்றுகள்**

**வினா எண் 31866—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி விவசாயிகளுக்கு வழங்கும் தென்னங்கன்றுகளை, மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் தற்போது செயல்பாட்டில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

37—

**பருத்தி உற்பத்தி விவரம்**

**வினா எண் 32212—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்திப் பரப்பளவு எவ்வளவு ஏக்கர்?

(ஆ) பரப்பளவு அதிகரித்தும் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லையா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சராசரியாக 2.50 இலட்சம் எக்டர் பருத்தி பயிரிடப்படுகிறது. இதில் மானாவாரியாக 1.50 இலட்சம் எக்டரிலும், இறவையில் 1.00 இலட்சம் எக்டரிலும் பருத்தி சாகுபடியாகிறது.

(ஆ) 1995-96 ஆம் ஆண்டில் 2.61 இலட்சம் எக்டரில் பயிரிட்ட பருத்தியிலிருந்து 3.39 இலட்சம் பஞ்சு பேல்கள் உற்பத்தியானது. (எக்டருக்கு 221 கிலோ பஞ்சு உற்பத்தித் திறன்) 1996-97 ஆம் ஆண்டில் 2.52 இலட்சம் எக்டரிலிருந்து 3.28 இலட்சம் பேல்கள் உற்பத்தியானது. (221 கிலோ எக்டருக்கு உற்பத்தித் திறன்) 1997-98 ஆம் ஆண்டில் 2.27 இலட்சம் எக்டரில் 3.58 இலட்சம் பேல்கள் உற்பத்தியானது. உற்பத்தித்திறன் 267 கிலோ. 1998-99 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் எக்டருக்கு 300 கிலோ அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே பருத்தியில் உற்பத்தித் திறன் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இவ்வாறு உற்பத்தித் திறன் கூடியிருப்பதற்கு தற்சமயம் செயல்படுத்தப்பட்டு வரும் பருத்தி அபிவிருத்தித் திட்டங்களும், மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் தீவிர பருத்தி சாகுபடி திட்டமும் முக்கியக் காரணங்களாகும். பருத்தி சாகுபடி செய்யப்படும் விவசாயிகளுக்கு செயல் விளக்கத்தின் மூலமாகவும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டதாலும், பூச்சி மருந்துகள் உபயோகம் கணிசமாகக் குறைக்கப்பட்டதாலும் சரியான உர, நீர், நிர்வாகம் ஆகிய தொழில் நுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் உற்பத்தித் திறன் அதிகரித்து உள்ளது.



38—

**தொழிலாளர்களுக்குச் சம்பளம்**

**வினா எண் 33128—டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் பணிபுரிகின்ற அக்ரோ இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக சம்பளம் வழங்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நிலுவைத் தொகை உட்பட சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள வட்டார மற்றும் மாவட்டச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தனித்தனி நிர்வாகக் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அதில் பணிபுரியும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது அந்தந்த நிர்வாகக் குழுவின் பொறுப்பாகும். சங்கங்களின் வியாபாரப் பெருக்கத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் பல சங்கங்களின் ஊழியர்களுக்கு உடனுக்குடன் சம்பளம் வழங்க இயலாமல் உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

39—

**தமிழகக் காடுகள் விவரம்**

**வினா எண் 26079—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள காடுகளின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) இவற்றில் எத்தகைய மரங்கள் வளர்க்கப்படுகின்றன?

(இ) இதன் மூலம் அரசிற்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்த நிலப்பரப்பு 1,30,058 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் வனப்பகுதியின் பரப்பு 22,845 சதுர கிலோ மீட்டர்.

(ஆ) தமிழகத்தின் வனப்பகுதிகளில் தேக்கு முதல் புன்னை வரை 30 வகையான மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

(இ) இதன் மூலம் அரசிற்கு 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 3376 இலட்சமாக இருந்த வருமானம் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 5267.29 இலட்சமாக உயர்ந்துள்ளது.

**40—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 26380—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடுகள் மற்றும் வனத் துறையில் பணியாற்றும் தற்காலிகப் பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் எப்பொழுது நிரந்தரம் செய்யப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) வனத் துறையில் தினக்கூலி அடிப்படையில் சமூக வனப்பிரிவில் வாச்சர்களாக 3,792 தினக்கூலிப் பணியாளர்களும், ஏனைய வாச்சர்களாக 1,266 தினக்கூலிப் பணியாளர்களும், மற்றும் இதரப் பிரிவுகளில் 22 தினக்கூலிப் பணியாளர்களும் ஆக மொத்தம் 9,680 தினக்கூலிப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.



(ஆ) வனத் துறையில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் சமூக வனப்பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களின் ஒருங்கிணைந்த மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்படவும், அப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த அனைத்து சமூக வனப்பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களை அவர்களுடைய முதுநிலைப்படி வனக்காவலர் மற்றும் மாலி ஆகிய பணியிடங்களில் துறையில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள மற்றும் காலப்போக்கில் ஏற்படும் காலியிடங்களில் நியமன விதி மற்றும் வயது குறித்த விதிகளைத் தளர்வு செய்து முறைப்படி நியமனம் செய்ய ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஒருங்கிணைந்த மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல், முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் தயாரிக்கப்பட்டு 401 பணியாளர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கும் முதுநிலை அடிப்படையில் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்கட்கு ஏற்ப நிரந்தரப் பணி வழங்கப்படும்.

**41—**

**காமராஜர் சிலையை அழகுபடுத்துதல்**

**வினா எண் 28884—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள காமராஜர் சிலையை அழகுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிலை சிற்பியை வைத்து காமராஜர் திருவுருவச்சிலை ஆயவு செய்யப்பட்டது. சிற்பியிடமிருந்து ஆய்வறிக்கை பெறப்பட்டவுடன் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் தக்க மதிப்பீடு

தயாரிக்கப்பட்டு அம்மதிப்பீடு அரசிற்குக் கிடைக்கப் பெற்றவுடன், அரசு பரிசிலனை செய்து, நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர் காமராஜர் சிலையை அழகுபடுத்தும் பணி செயல்படுத்தப்படும்.

**42—**

### நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 20398—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட மோளப்பாறை, ஊத்துக்குளி, சர்வ ரெட்டியூர், கண்டிக்கவுண்டனூர் ஆகிய பகுதிகளில் பவானியிலிருந்து பூலாம்பட்டி வரை சென்று கொண்டிருந்த பி-9 என்ற அரசு நகரப் பேருந்து இயக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தடம் எண் பி-9 பேருந்துவானது 14-08-1990 முதல் பவானி-பூலாம்பட்டி வழித் தடத்தில் இயக்கப்பட்டது. அப்பொழுது பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக, 30 சதவீதம் மட்டும் இருந்ததால் 31-12-1992 முதல் பவானி—எடப்பாடி 8 தனி நடைகளும், பவானி—பூலாம்பட்டி 4 தனி நடைகளும் இயக்கப்பட்டுப் பயணிகள் விகிதாச்சாரம் 42 சதவீதம் என உயர்ந்தது. மேலும், பவானி—பூலாம்பட்டி நேரடி பயணிகள் இல்லாததாலும் பூலாம்பட்டிக்கு பேருந்து வசதி வேண்டி கோரிக்கை இல்லாததாலும் 4-11-1994 முதல் பேருந்துகளின் பவானி—பூலாம்பட்டி இயக்கம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு அனைத்து நடைகளும் பவானி—எடப்பாடி இயக்கப்பட்டு வருகிறது. இதனால் பயணிகள் விகிதாச்சாரம் தற்பொழுது 59 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தற்சமயம் பவானி-பூலாம்பட்டி நேரடிப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.*



**43—**

### நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 21601—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி—இண்டூர் அக்ரஹாரம், மாங்கரை, மோட்டுப்பட்டி, கொட்டாயூர் வழியாக-பெண்ணாகரம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35 கி.மீ. வரை நகரப் பேருந்தை இயக்க இயலும். தற்போது பேருந்து வசதி கோரப்பட்ட தடத்தின் நீளம் 39.8 கி.மீ. வருவதால் கோரியுள்ள வழித் தடத்தில் நகரப் பேருந்து ஒன்றை இயக்க இயலாது. இதில் கோரப்பட்ட வழித்தடத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் பேருந்து வசதி பெற்றுள்ளன.*

**44—**

### பேருந்து வசதி

**வினா எண் 21937—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், செய்யாறு, தெள்ளார், நெற்குளம், பெண்குட்டகரம், வீரனூர் போந்தை, அருகாவூர், பணையக்கம், நாட்டார்மங்கலம் வழியாக திருவண்ணாமலை செல்ல பேருந்து வசதி செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கோரிக்கை வழித்தடத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளன. ஆகையால் நடப்பு ஆண்டில் கோரிக்கை வழித்தடத்தில் புதிய தடங்கள் இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

[2000 ஏப்ரல் 4

45—

**பேருந்துகள் விவரம்**

**வினா எண் 24943—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு கோட்டத்தில் இயக்கப்படும் பேருந்துகள் எத்தனை?

(ஆ) இவற்றில் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) புதியதாக எத்தனை பேருந்துகள் இயக்கத் திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஈரோடு கோட்டத்தில் 909 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை 393 ஆகும்.

(இ) 1999-2000-ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலம் 30 பேருந்துகள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது.

46—

**பேருந்து வசதி**

**வினா எண் 25101—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டியிலிருந்து பெருமாள்பட்டிக்குச் சாணாம்பட்டி வழியாகப் பள்ளிக்கூட நேரங்களில் காலையிலும், மாலையிலும் பேருந்து இயக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டியிலிருந்து சாணாம்பட்டி, பெருமாள்பட்டி வழியாக சோழவந்தானுக்கு 2 தனிச் சுற்றுக்களும், நிலக் கோட்டைக்கு 12 தனிச் சுற்றுக்களும் பள்ளி மற்றும் கூட்ட நேரங்களில் இயக்கப்பட்டு வருகின்றது.



2000 ஏப்ரல் 4]

மேற்கூறிய சுற்றுக்களில் பயணிகள் அடர்வு முறையே 22 சதவிகிதம் மற்றும் 43 சதவிகிதம் ஆகும். எனவே வாடிப்பட்டி—பெருமாள்பட்டி என புதிய நகரத் தடம் இயக்கத் தேவை எழவில்லை.

47—

**பேருந்து வசதி**

**வினா எண் 25102—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து வாடிப்பட்டி வழியாக கோட்டைமேடு பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி - திண்டுக்கல் சாலையில் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 0.6 கி.மீ. தூரத்தில் போடிநாயக்கன்பட்டியும், அங்கிருந்து 1.6 கி.மீ. தூரத்தில் கோட்டைமேடு கிராமமும் உள்ளது. போடிநாயக்கன்பட்டியை அடுத்து 0.4 கி.மீ. முதல் 0.6 கி.மீ. வரை சாலை மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. புனித சார்லெஸ் நடுநிலைப் பள்ளி அருகில் 0.8 கி.மீ.-ல் அமைக்கப்பட்டுள்ள சிறிய பாலம் மேற்புறம் உடைந்து, சாலை, பேருந்து போக்குவரத்து உகந்ததாக இல்லை. எனவே பேருந்து இயக்கத் தற்போது சாத்தியமில்லை.

48—

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 26228—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி - நாசரேத் வரை இரவு இயக்கப்பட்ட 103 எண் அரசுப் பேருந்து கலவரக் காலங்களில் நிறுத்தப்பட்டுள்ளதால் அதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 103 பேருந்து 08.15 மணி, 12.15 மணி, 16.15 மணி ஆகிய நேரங்களில் தூத்துக்குடியிலிருந்து நாசரேத்திற்கும், இரவு 08.15 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து ஏரல் வரையிலும் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தூத்துக்குடியிலிருந்து நாசரேத்திற்கு இரவு நேர கடைசி சுற்று இயக்கப்படவில்லை. அது தவிர காலை 06.15 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து ஒட்டப்பிடாரத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது. கலவரங்கள் முதலியவை காரணமாக மேற்படி சுற்றுக்களில் மாற்றம் எதுவும் செய்யப்படாமலேயே இயக்கப்பட்டு வருகிறது. மேலும் தூத்துக்குடியிலிருந்து நாசரேத்திற்கு இரவு 08.30 மணிக்கு ஒரு தனியார் பேருந்து ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகிறது. அது தவிர ஏரலில் இருந்து இரவு 09.45 மணிக்கு நாசரேத் வரை தனியார் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருவதால், தடம் எண் 103-ன் இரவு நேரச் சுற்றை நாசரேத் வரை நீட்டித்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**49—**

**பேருந்து பழுதுபார்த்தல்**

**வினா எண் 26453—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி - கோனேரிப்பட்டி வழி வெள்ளரிவெள்ளி செல்லும் நகரப் பேருந்து 2ஏ மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை நல்ல நிலையில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 2ஏ பேருந்து 1999 ஜூலை மாத இறுதியில் பழுது பணிக்காக நிறுத்தப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் நன்முறையில் பழுதின்றி இயக்கப்பட்டு வருகிறது. மேலும் தினசரி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**50—**

**பேருந்து வசதி**

**வினா எண் 29938—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியிலிருந்து பரிக்கல்பட்டு வரை இயக்கப்படும் தடம் எண் 261 எனும் பேருந்து தற்பொழுது பரிக்கல்பட்டு கிராமத்தில் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி - பரிக்கல்பட்டு (வழி) வடபாலை, மேல்மலையனூர், அவலூர்பேட்டை-சேத்துப்பட்டு வழித்தடத்தில், செஞ்சியிலிருந்து வடபாலை வழியாக அவலூர்பேட்டை வரையிலான சாலை மிகவும் பழுது பட்டதன் காரணமாக ஒரு சில நாட்களில், ஒரு சில நடைகள் மட்டும் பேருந்து இயக்குதல் பாதிக்கப்பட்டது. இதனால் சில நடைகள் கால அட்டவணைப்படி இயக்க இயலாத நிலையேற்பட்டனவேயன்றி, பிற நாட்களில் இவ்வழித் தடம் கால அட்டவணைப்படி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

**51—**

**வழித் தடங்கள்**

**வினா எண் 30040—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, தீயனூர், என். பெத்தனேந்தல், மடந்தை ஆகிய கிராமங்களுக்கு இதுவரை பேருந்து வசதி செய்து தரப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் வழித் தடங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீயனூர்—பரமக்குடி—இராமநாதபுரம் சாலையில் சத்திரக்குடியிலிருந்து சுமார் 2.00 கி.மீ. தொலைவில் உள்ள தீயனூர் விலக்கிலிருந்து சுமார் 1.2 கி.மீ. தொலைவில் தீயனூர் அமைந்துள்ளது. தீயனூர் விலக்கிலிருந்து தீயனூர் செல்லும் வழியில் ஆளில்லாத இரயில்வே கிராஸிங்கும், அதன் இருபுறமும் அமைந்துள்ள கம்பங்கள் குறுகலாகவும் பேருந்து இயக்கத் தகுதியில்லாத நிலையில் உள்ளது.

என். பெத்தனேந்தல்

புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும்போது தேவையின் அடிப்படையில் என். பெத்தனேந்தல் கிராமத்திற்கு பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மடந்தை

பரமக்குடி-அபிராம் சாலையில் விளத்தூர் விலக்கிலிருந்து சுமார் 4.0 கி.மீ. தொலைவில் மடந்தை கிராமம் அமைந்துள்ளது. விளத்தூர் விலக்கிலிருந்து சுமார் 2.0 கி.மீ. தூரத்தில் சாலை குண்டும் குழியுமாகவும், அடுத்துள்ள சுமார் 2.0 கி.மீ. சாலை மண்சாலையாகவும் இரண்டு இடங்களில் பேருந்து திரும்ப இயலாத அளவில் குறுகிய மண் சாலையாக உள்ளதால் மேற்படி கிராமத்திற்குப் பாதுகாப்பான பேருந்து இயக்கத்திற்கு ஒவ்வாத நிலையில் பாதை உள்ளது.

மேற்கண்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் மக்கட்தொகை 1000-க்கும் குறைவாக உள்ளது.

1000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து தர முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**52—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30048—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவிலைச் சார்ந்த தடம் எண் 560, 570, 573, 575 ஆகிய பேருந்துகளை விஜயாபதி, கூத்தன்குழி ஆகிய மீனவ கிராமங்களின் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவிலைச் சார்ந்த தடம் எண் 560, 573 மற்றும் 575-ஐ வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விஜயாபதி கூத்தன்குழி வழியாக இயக்கும் செயற்குறிப்பு இல்லை. நேரடிப் பாதையில் இயக்கப்படும் மேற்படி பேருந்துகளை கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளவாறு இயக்கினால் நடை ஒன்றிற்கு 9.2 கி.மீ. தூரம் அதிகரித்து நேரடிப் பயணிகளுக்கு பயண நேரம் மற்றும் கட்டணம் அதிகமாகும். இருப்பினும் பொதுமக்கள் கோரிக்கைக்கு இணங்க தடம் எண் 570-ல் நாளொன்றுக்கு 4 நடைகள் மற்றும் தடம் எண் 523-ல் 6 நடைகள் மேற்படி கிராமங்கள் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன.

**53—**

**பேருந்து வசதி**

**வினா எண் 30055—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி-பெரிய கொழப்பலூர் செல்லும் தடம் எண் 5 என்னும் நகரப் பேருந்தை பேருந்தே செல்லாத கின்னணூர் இராமாபுரம் சாலை வழியே பெரிய கொழப்பலூருக்கு இயக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து இயக்கப்படும்?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து பெரிய கொழப்பலூர் வரை இயக்கப்படும் ஏ-5 நகரத் தடம் 5-7-1999 முதல் கிண்ணனூர் இரமாபுரம் கூட்டுச் சாலை வழியாக கொழப்பலூருக்கு தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**54—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30139—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரியிலிருந்து கடலூருக்கு பரங்கிப்பேட்டை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புவனகிரியிலிருந்து பு. முட்லூர், பரங்கிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் வழியாக கடலூருக்குப் பேருந்து வசதி கோரும் வழித்தடத்தின் நீளம் 45.8 கி.மீ. ஆகும். இது ஒரு சுற்று வழித்தடம் என்பதால் பயண நேரம் மற்றும் பயணக் கட்டணம் அதிகமாகும். இதனால் புவனகிரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் இவ்வழித்தடத்தில் பயணம் மேற்கொள்ள விரும்பமாட்டார்கள். புவனகிரியிலிருந்து புதுச்சத்திரம், ஆலப்பாக்கம், கடலூர், முதுநகர் வழியாக கடலூருக்குச் செல்லும் குறுகிய தூர வழித்தட நீளம் 40.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் 76 பேருந்துகள் மூலம் பேருந்து வசதி உள்ளது. இவை சிதம்பரத்திற்கும் கடலூருக்கு மிடையே இயங்கி வருகின்ற பேருந்துகளாகும். புவனகிரி—கடலூர் வழித்தடப் பகுதி மக்கள் மேற்படி சிதம்பரம்—கடலூர் வழித்தடப் பேருந்துகள் மூலமாகவே போதிய வசதியை தற்போதே பெற்றுள்ளனர். புதிதாக பேருந்து வசதி கோரும் வழித்தடத்தில் சிதம்பரம்—பரங்கிப்பேட்டை, பரங்கிப்பேட்டை—கடலூர் என பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே புவனகிரி—கடலூர் வழி பு. முட்லூர் பரங்கிப்பேட்டை—புதுச்சத்திரம் வழித் தடத்தில் வேறு பேருந்து வசதி அளிக்கத் தேவை எழவில்லை.



2000 ஏப்ரல் 4]

**55—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30140—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை—விருத்தாசலம் நெடுஞ்சாலை வசதியை பயன்படுத்தி பரங்கிப்பேட்டை முதல் விருத்தாசலம் வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு முயற்சி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டையிலிருந்து புவனகிரி வழியாக சிதம்பரத்திற்கும் மற்றும் கடலூருக்கும் போதிய பேருந்து வசதிகள் உள்ளன.

சிதம்பரத்திலிருந்து புவனகிரி வழியாக விருத்தாசலத்திற்கு தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மூலம் நேரடிப் போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. பரங்கிப்பேட்டையிலிருந்து விருத்தாசலத்திற்குச் செல்பவர்கள் பரங்கிப்பேட்டை—சிதம்பரம் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி புவனகிரியை அடைந்தால் புவனகிரியிலிருந்து சிதம்பரம்—விருத்தாசலம் வழித்தடப் பேருந்துகள் வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, கோரிக்கை வழித் தடத்தில் தனியாக ஒரு பேருந்தை இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**56—**

**பேருந்து வழித் தடம் நீட்டிப்பு**

**வினா எண் 30182—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து கோனேரிப்பட்டி மற்றும் நெடுங்குளம் செல்லும் நகரப் பேருந்துகளை மக்கள் வசதியைக் கருத்தில் கொண்டு குதிரைக்கல் மேடு, பவானி-மேட்டூர் மெயின் ரோடு வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதனால் வசூல் அதிகரிக்கும் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள குதிரைக்கல் மேட்டிற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (ஈரோடு) மூலமாக ஒரு நகரப் பேருந்து தினசரி 10 நடைகளும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) மூலமாக ஒரு புற நகர்ப் பேருந்து தினசரி 6 நடைகளும் ஆக தினசரி 16 நடைகள் பேருந்து வசதியுள்ளது. அதுவே போதுமானதாக உள்ளது என்பதால் கோனேரிப்பட்டி—நெடுங்குளம் செல்லும் பேருந்துகளை நீட்டித்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**57—**

**பேருந்துகளின் இருக்கைகள் எண்ணிக்கையை உயர்த்துதல்**

**வினா எண் 30304—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் வருவாய்க்காகவும் மற்றும் பயணிகளின் வசதிக்காகவும் அரசுப் பேருந்துகளிலுள்ளதைப் போல தனியார் புறநகர்ப் பேருந்துகளின் சீட்டு எண்ணிக்கையை 59 முதல் 61 ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்துகளில் இருக்கைகள் அமைப்பது வாகனத்தின் மாடல் (Model) மற்றும் இரு அச்சுகளுக்கான (Wheel Base) இடைவெளியைப் பொறுத்தது ஆகும். லைசிங் வகை அடிச்சட்டம் உள்ளவைகளுக்கு 61 இருக்கைகளும், சீட்டா வகை அடிச்சட்டம் உள்ளவைகளுக்கு 56 இருக்கைகளும் விதிகளுக்குட்பட்டு அமைக்கப்படுகின்றன. இதில் தனியார் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் என்ற பாகுபாடு ஏதும் இல்லை.





**58—**

**சொகுசுப் பேருந்து வசதி**

**வினா எண் 30306—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகரில் இயங்கி வரும் தாராபுரம் முதல் சென்னை வரை செல்லும் அரசுப் பேருந்தை சொகுசுப் பேருந்தாக மாற்றும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தாராபுரம் முதல் சென்னை வரை இயங்கும் பேருந்தினை சொகுசுப் பேருந்தாக மாற்றும் திட்டம் இல்லை.

**59—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30289—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசியிலிருந்து திண்டிவனத்திற்கு செம்பூர் ராமசமுத்திரம், தெய்யார், காட்டேரி வழியாக பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2000 ஏப்ரல் 4

60—

## பேருந்து வசதி

**வினா எண் 30502—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையிலிருந்து மதுரைக்கு இராஜபாளையம், திருவில்லிபுத்தூர் வழியாகக் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும், அவ்வழியாக இயங்கி வந்த, நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், சங்கரன்கோவில், சுரண்டை வழியாக இரண்டு பேருந்துகள் மூலம் இயக்கப்பட்டு வந்த நான்கு தனிச் சுற்றுக்கள் மே, 1993-ல் நிறுத்தப்பட்டது. பின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்களின் வேண்டுகோளின்படி மதுரையிலிருந்து திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், சங்கரன்கோவில் வழியாக சுரண்டைக்கு 14-12-1996 முதல் இரண்டு பேருந்துகள் மூலம் நான்கு தனிச் சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இச்சுற்றுக்களில் பயணிகள் அடர்வு 80 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. மேலும் சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் இராஜபாளையம், திருவில்லிபுத்தூர் வழியாக மதுரைக்கு நான்கு சுற்றுக்களும், சுரண்டையிலிருந்து சங்கரன்கோவிலுக்கு 50-க்கு மேற்பட்ட சுற்றுகளும், சங்கரன்கோவிலிலிருந்து இராஜபாளையம், திருவில்லிபுத்தூர் வழியாக மதுரைக்கு 40-க்கும் மேற்பட்ட சுற்றுகளும் பகுதிவாரியாகப் பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானது. கூடுதல் பேருந்து இயக்க, தேவை எழவில்லை.

61—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 30793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, இண்டூர், நடப்பனஅள்ளி, கூலிக்கொட்டாய், சந்தாரப்பட்டி, பரப்பட்டி வரை புதிய தார்ச்சாலை அமைக்கப்பட்டதால், தருமபுரி, இண்டூர் சோமனஅள்ளி, மண்டஅள்ளி வழியாக கெட்டுஅள்ளி செல்லும் நகரப் பேருந்து எண் 34-ஐ மாற்று வழியாக இண்டூர், நடப்பனஅள்ளி, கூலிக்கொட்டாய் வழியாக கெட்டுஅள்ளி வரை மேற்கண்ட பேருந்தை இயக்கி இப்பகுதி மக்களின் குறைகளை நடப்பாண்டில் நீக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரியிலிருந்து கெட்டுஅள்ளி செல்லும் நகரப்பேருந்து தடம் எண் 34-ஐ நடப்பனஅள்ளி, கூலிக்கொட்டாய் வழியாக மாற்றி இயக்கினால், ஏற்கெனவே பள்ளி நேரத்திற்கு ஏற்றவாறு பயன்பெற்று வரும் பள்ளி மாணவ, மாணவிகள் பாதிக்கப்படுவார்கள். எனவே, தடம் எண் 34-ஐ மாற்றி இயக்க இயலாது.

62—

## பேருந்தை நீட்டித்து இயக்குதல்

**வினா எண் 30794—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து ஏரியூர், பூச்சூர் வழியாக ஊத்துப்பள்ளத்தூர் வரை செல்லும் நகரப் பேருந்து எண் 9-ஐ மருக்கம்பட்டி வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 30 கி.மீ. மேல் 35-வது கி.மீ. வரை நகரப் பேருந்தை இயக்க இயலும். தற்போது பெண்ணாகரத்திலிருந்து ஊத்துப்பள்ளத்தூர் வரை இயங்கும் நகரப் பேருந்து தடம் எண் 9-ஐ

[2000 ஏப்ரல் 4

மருக்கம்பட்டி வரை நீட்டித்து இயக்கினால் தடத்தின் நீளம் 37 கி.மீ. வருவதால், நகரப் பேருந்து தடம் எண் 9-ஐ ஊத்துப்பள்ளத்தூரிலிருந்து மருக்கம்பட்டி வரை நீட்டித்து இயக்க இயலாது.

**63—**

### நகரப்பேருந்து இயக்குதல்

**வினா எண் 30795—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து ஜக்கம்பட்டி, வத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி, ஏரியூர், நெருப்பூர், ஓட்டனூர் வழியாக கோட்டையூர் பரிசல்துறைக்குப் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35 கி.மீ. வரை நகரப்பேருந்தை இயக்க இயலும். ஆனால் தற்போது பேருந்து வசதி கோரிய வழித்தடத்தின் நீளம் 36.6 கி.மீ. வருவதால் கோரியுள்ள வழித்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**64—**

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 30796—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஏரியூர், பூச்சூர், பழையூர், மேச்சேரி, ஜலகண்டபுரம் வழியாக எடப்பாடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தருமபுரி புறநகர்ப் பேருந்து தடம் எண் 251 ஏ-யின் மூலம் பெண்ணாகரத்திலிருந்து மேச்சேரி வழியாக எடப்பாடிக்கு 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி 2 நடைகளே பெண்ணாகரத்திலிருந்து எடப்பாடிக்கு போதுமானதாகக் கருதப்படுகிறது. மேலும் இக்கழகப் புறநகர்ப் பேருந்து மூலம் பெண்ணாகரத்திலிருந்து ஏரியூர், பூச்சூர், பழையூர் வழியாகவும் மற்றும் நேர்வழியாகவும் மேச்சேரிக்குப் போதுமான நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பெண்ணாகரத்திலிருந்து எடப்பாடி செல்ல விரும்பும் பயணிகள் மேச்சேரி சென்று அங்கிருந்து தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துக் கழகம் மூலம் இயக்கப்படும் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் மூலம் எடப்பாடி பயணம் செய்யலாம். எனவே, கோரப்பட்ட வழித்தடத்தில் பேருந்து ஒன்றை இயக்கத் தேவை எழவில்லை.

**65—**

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 30799—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து மேச்சேரி, மேட்டூர், பாலாறு வழியாக கர்நாடக மாநிலம் மாதேஸ்வரன்கோயில் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரப்பட்டுள்ள தடமானது புற மாநிலத் தடமாகும். மேலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1 பேருந்துகள், சேலம்-மைசூர் (வழி) மேட்டூர், மாதேஸ்வரன்மலைத் தடத்தில் 8 பேருந்துகள் மூலம் 16 நடைகளும், மேட்டூர்-மாதேஸ்வரன்மலை வரையில் ஒரு பேருந்து மூலம் 8 நடைகளும் இயக்கி வருகிறது. மேலும் தருமபுரி-மேட்டூர் வரையில் 46 நடைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகப் (தருமபுரி) பேருந்துகள் கொண்டு இயக்கப்பட்டு வருகின்றது. எனவே, தருமபுரியிலிருந்து மாதேஸ்வரன் மலை

[2000 ஏப்ரல் 4

செல்லலாம். இத்தடம் கர்நாடக தமிழ்நாடு புற மாநில தட ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்த வேண்டுமாதலால் தற்போது இயக்க இயலாத நிலை உள்ளது.

66—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 30807—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து சின்னப்பநல்லூர் செல்லும் நகரப் பேருந்து கே.அக்ரஹாரம் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகரப்பேருந்து வசதி கோரப்பட்ட கே. அக்ரஹாரம், தற்சமயம் பேருந்து நிறுத்தம் செய்து வரும் கே.அக்ரஹாரம் கிராஸ் ரோடிலிருந்து 0.5 கி.மீ. தூரத்திலேயே உள்ளடங்கி உள்ளது. மேற்படி தூரம் நடைபயண தூரமாகவே கருதப்படுவதால் பெண்ணாகரத்திலிருந்து சின்னப்பநல்லூர் செல்லும் நகரப் பேருந்துகளை கே.அக்ரஹாரம் வழியாக இயக்க இயலாத நிலை உள்ளது.

67—

## பேருந்து வசதி

**வினா எண் 30808—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் பேருந்தில் ஏதாவது இரண்டு பேருந்துகளை தருமபுரி, இண்டூர், டி.அக்ரஹாரம், மாங்கரை, நூலஅள்ளி, பருவதனஅள்ளி, பெண்ணாகரம் வழியாக இயக்கி மாங்கரையைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெற அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 4]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தருமபுரி முதல் மாங்கரை வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (தருமபுரி) 2 நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 6 நடைகள் இயங்கி வருகின்றன. ஏற்கெனவே இயங்கி வரும் தருமபுரி முதல் ஒகேனக்கல் வரை செல்லும் நேரடி புறநகர்ப் பேருந்துகளை மாங்கரை, நூலஅள்ளி வழியாக தடத்தை மாற்றி இயக்கினால், தடத்தின் நீளம் அதிகரிப்பது மட்டுமல்லாமல் பயணக் கட்டணமும் கூடுதலாகும். இதனால் ஏற்கெனவே நேரடிப் பேருந்தில் பயணம் செய்பவர்கள் பாதிப்படைவார்கள். மற்றும் நேரடிப் பயணிகள் யாரும் இந்த சுற்றுத் தடத்தில் பயணம் செய்யவும் விரும்பமாட்டார்கள். மேலும் மாங்கரையிலிருந்து பெண்ணாகரம் செல்ல விரும்புபவர்கள் மாங்கரை கிராஸ் ரோடு வந்து தருமபுரியிலிருந்து பெண்ணாகரம் செல்லும் பேருந்துகளில் பயணம் செய்யலாம். எனவே ஏற்கெனவே இயங்கி வரும் தருமபுரி—ஒகேனக்கல் (வழி) பெண்ணாகரம் நேரடிப் பேருந்துகள் சுற்றுப் பாதையில் மாங்கரை வழியாக இயக்க இயலாத நிலை உள்ளது.

68—

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 30809—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து ஏரியூர், பூச்சூர், பழையூர் வழியாக மேச்சேரிக்கு செல்ல கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரப்பட்ட வழித்தடத்தில் தற்சமயம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (தருமபுரி), பேருந்து தடம் எண் 74ஏ-ன் மூலம் பெண்ணாகரத்திலிருந்து மேச்சேரிக்கு 2 நடைகளும் மற்றும் ஏரியூரிலிருந்து மேச்சேரிக்கு 6 நடைகளும் இயக்கி வருகின்றன. இத்தடத்தில் பயணிகளின் கொள்ளளவு 94 விழுக்காடுகள் வருவதால் கோரப்பட்ட தடத்தில்

தற்போது இயக்கப்படும் நடைகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, தற்சமயம் கோரப்பட்ட வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

69—

### நகர இணைப்புப் பேருந்து

**வினா எண் 31752—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமத்தின் வழியாகச் செல்வதற்கு அரசு நகர இணைப்புப் பேருந்து ஒன்றை இயக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மல்லப்புரம் கிராம பொதுமக்கள் நகர இணைப்புப் பேருந்து வசதி கிடைக்கப் பெறும் வகையில் தற்போது குஜிலியம்பாறை-ஈசநத்தம் (வழி) மல்லப்புரம் 2 தனி நடைகளும், குஜிலியம்பாறை-ஆர். வெள்ளோடு (வழி) மல்லப்புரம் 4 தனி நடைகளும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திண்டுக்கல்), நகரப் பேருந்துகள் மூலம் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் திண்டுக்கல்-கரூர் (வழி) குஜிலியம்பாறை, மல்லப்புரம், பள்ளப்பட்டி தடத்தில் தனியார் புறநகர் பேருந்து மூலம் 2 தனி நடைகள் இயக்கிக் கொண்டிருக்கின்றன. மேற்கண்ட நகர இணைப்புப் பேருந்துகள் மூலம் மல்லப்புரம் கிராம மக்கள் குஜிலியம்பாறை, ஈசநத்தம், வேடசந்தூர், பள்ளப்பட்டி, கரூர், திண்டுக்கல் ஆகிய ஊர்களுக்கு பயணம் செய்கின்றனர். மல்லப்புரம் கிராமப் பொதுமக்களுக்கு தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானது. எனவே, புதிய நகர இணைப்புப் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.



70—

### பேருந்து வழித்தடம் நீட்டிப்பு

**வினா எண் 31758—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கரூரிலிருந்து ஆலமரத்துப்பட்டி வரை வரும் நகரப் பேருந்தின் வழித்தடத்தை ஏ. கொல்லப்பட்டி வழியாக பண்டிதகாரனூர் வரை நீட்டித்துத் தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தற்போது கரூர்—ஆலமரத்துப்பட்டி (வழி) ராயனூர் கொரவப்பட்டி, சுந்தராராபட்டி, விஜயபுரம் வழியாக நகரப் பேருந்து இயங்கும் வழித்தடம் தூரம் 27.3 கி.மீ. ஆகும். ஆலமரத்துப்பட்டியிலிருந்து ஏ. கொல்லப்பட்டி வழியாக பண்டிதகாரனூர் வரை தட நீட்டல் கோரும் பகுதியின் தூரம் 9.2 கி.மீ. ஆகும். நகரப் பேருந்திற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தூரமான 35.0 கி.மீ.க்கு மேல் அதாவது கரூர்-பண்டிதகாரனூர் நகர வழித்தட தூரம் 36.5 கி.மீ. என்பதால் நகரப் பேருந்தை நீட்டித்து இயக்க வழிவகை இல்லை.

71—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 31760—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், லந்தக்கோட்டைக்கு கரூரிலிருந்து புலியூர் வழியாக அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை கரூரிலிருந்து காலை 7, 9, 11, 12 மணிகளுக்கும் மாலை 2, 3, 4 மணிகளுக்கும், இரவு 7, 8, 9 மணிகளுக்கும் விட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூரிலிருந்து லந்தக்கோட்டைக்கு கீழ்க்கண்டவாறு நகரப் பேருந்துகளை அரசுப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது:

1. காலை 7-05 வெள்ளியனை, லந்தக்கோட்டை வழியாக காலியாளம்பட்டி.

2. மதியம் 12-00 மணி வெள்ளியனை, லந்தக்கோட்டை வழியாக மாமரத்துப்பட்டி.

3. மாலை 6-10 மணி வெள்ளியனை, லந்தக்கோட்டை வழியாக காலியாளம்பட்டி.

4. இரவு 8-05 மணி வெள்ளியனை வழியாக லந்தக்கோட்டை, மேலும் கரூரிலிருந்து புலியூர், உப்பிடமங்கலம், ஜெகதாபி வழியாக பி. உடையாப்பட்டி, சுக்காம்பட்டி, மாமரத்துப்பட்டி, காலியாளம்பட்டி, மணப்பாறை ஆகிய ஊர்களுக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி, 5 பேருந்துகள் மூலம் தினசரி 30 நடைகள் இயக்கப்படுகின்றன. இது தவிர தனியார் துறை நகரப் பேருந்து ஒன்றின் மூலம் கரூர்-பழனி செட்டியூர் (வழி) புலியூர், உப்பிடமங்கலம், ஜெகதாபி, லந்தக்கோட்டை வழியாக தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, லந்தக்கோட்டை கிராமம் தற்போது போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, கோரிக்கை நேரங்களில் பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**72—**

## பேருந்தை நீட்டித்து இயக்குதல்

**வினா எண் 32238—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், பெரியதாழை கிராமத்திற்கு ராதாபுரம்-தோப்புவிளை வரை இயங்கும் தடம் எண் 9-ஐ நீட்டிக்க தமிழ்நாடு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



2000 ஏப்ரல் 4]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 9, திசையன்விளையிலிருந்து குட்டம்வரை இயக்கப்பட்ட பேருந்தாகும். இதனை சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தோப்புவிளை வரை நீட்டித்து இடைவெளி நேரமின்றி கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி தற்பொழுது இயக்கப்பட்டு வருகிறது.

திசையன்விளை-உவரி (வழி) இடையன்குடி—1 சுற்று

திசையன்விளை-ஆனைகுடி (வழி) முதுமொத்தாமொழி தங்கம்மாள்புரம்-2 சுற்றுக்கள்

ராதாபுரம்-உவரி (வழி) ஆத்தங்கரை பள்ளிவாசல் இடையன்குடி-3 சுற்றுக்கள்.

ராதாபுரம்-திசையன்விளை (வழி) ஆத்தங்கரை பள்ளி வாசல், இடையன் குடி-3 சுற்றுக்கள்

ராதாபுரம்-தோப்புவிளை (வழி) கூடக்குளம்-2 சுற்றுக்கள்.

தோப்புவிளையிலிருந்து பெரியதாழை சுமார் 1.8 கி.மீ. தொலைவில் உள்ளது. தோப்புவிளை வரை இயக்கப்படும் தடம் எண் 9-ஐ பெரியதாழை வரைக்கும் நீட்டித்து இயக்கும் பட்சத்தில் கால அட்டவணையை மாற்ற நேரிடும். இதனால் ஏற்கெனவே பயன்பெற்று வரும் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படும். திசையன்விளை - பெரியதாழை என தற்போது தனியார் மற்றும் மதுரை கோட்டம்-2 மூலம் 18 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. தவிர பிரதான கடற்புரச் சாலையில் அமைந்துள்ள பெரியதாழைக்கும் மதுரை கோட்டம் 2-ஐச் சார்ந்த நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகளால் 32 சுற்றுக்கள் பேருந்து வசதியுள்ளது. மேலும், மதுரை கோட்டம் 3-ஐ சார்ந்த பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. பெரிய தாழைக்குப் போதுமான பேருந்து வசதிகள் இருப்பதால், தடம் எண் 9-ஐ நீட்டித்து இயக்கும் தேவை எழவில்லை.

[2000 ஏப்ரல் 4

73—

## பேருந்து வசதி

**வினா எண் 32239—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) நகரப் பேருந்துகள் தடம் எண் 5ஜி, 27 ஆகியவற்றை ஐ.ஆர்.டி., பாலிடெக்னிக், கௌசானல்புரம், ஆயன்குளம் கிராமம் வழியாக கொங்க சுந்தான் பாறை கிராமத்திற்கு இயக்கினால் ஏராளமான மக்கள் பயன் பெறுவார்கள் என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் கூறப்பட்டுள்ள தடம் எண் 5 ஜி., மற்றும் 27 ஆகிய இரண்டு நகரப் பேருந்துகளும் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து பல்முனை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளாகும். ஐ.ஆர்.டி., பாலிடெக்னிக் ஆகியவை திருநெல்வேலி, நாகர்கோவில் பிரதான சாலையிலும், ஆயன் குளம் கிராமம் மேற்படி சாலையிலிருந்து பிரிந்து சுமார் 1.0 கி.மீ. தூரத்தில் உட்புறமாக அமைந்துள்ளது. ஐ.ஆர்.டி., பாலிடெக்னிக் சென்று வர வசதியாக இரு நகரப் பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 8 சுற்றுக்கள் மற்ற பேருந்து வசதிகள் நீங்கலாக தனியாக இயக்கப்பட்டு வருகிறது. கௌசானல்புரத்தில் குடியிருப்புப் பகுதி ஏதும் கிடையாது. உயர்நிலைப் பள்ளி ஒன்று மட்டுமே அமைந்துள்ளது. பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளின்றி கல்வி ஸ்தாபனங்களை மட்டுமே கொண்டுள்ள இவ்விரு வழித்தடங்களுக்கும் பிரதான சாலையில் ஏற்கெனவே இயக்கப்பட்டுவரும் நகர மற்றும் வெளியூர் பேருந்து வசதிகளே போதுமானது. ஆயன்குளம் கிராமம் 1000-க்கும் குறைவாக மக்கள் தொகை கொண்டதால் இக்கிராமத்திற்கு முன்னுரிமை கொடுத்து பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை. மேலும், வினாவில் கூறப்பட்டுள்ள தடம் எண் 5ஜி 10/27 ஆகியவை பல்முனை வழித்தடங்கள் பல்வேறு குடியிருப்புப் பகுதிகள் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. தடம் மாற்றி இயக்கினால் தற்பொழுது பயனடைபவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, தடம் எண் 5 ஜி 10/27 நகரப் பேருந்துகளை வினாவில் கேட்டுள்ளபடி தடம் மாற்றி இயக்க இயலாது.



2000 ஏப்ரல் 4]

74—

## பேருந்து உதிரி பாகங்கள்

**வினா எண் 32704—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு அரசு கடைப்பிடிக்கும் விதிமுறைகள் என்ன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உதிரிபாகங்கள் வாங்குதல் சம்பந்தமாக "கொள்முதல் கொள்கை" உயர் மட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் அதன்படி பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் பொருட்களின் தரம், விலை ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கும் கீழ்க்கண்ட கொள்முதல் முன்னுரிமை வரிசை பரிந்துரைக்கப்பட்டுள்ளது:

(1) வாகன உற்பத்தியாளர்.

(2) வாகன உற்பத்தியாளர் தரத்துக்கு ஏற்ற அசல் பாகங்கள் உற்பத்தி செய்பவர்.

(3) அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பின் விலைப்பட்டியல் அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்.

மேற்கண்ட உற்பத்தியாளர்கள் உதிரி பாகங்கள் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தரமுடியாத சூழ்நிலையில் அவசரத் தேவைக்காக மற்ற உற்பத்தியாளர், மற்ற விற்பனையாளரிடமிருந்து ஒப்பந்தப் புள்ளி மூலம் வாங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் கொள்கைக்கு மாறுபட்டு செய்யப்படும் கொள்முதல் விவரங்கள் இயக்குநர் குழுமத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

75—

### மகளிர் பேருந்து இயக்குதல்

**வினா எண் 32715—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டியிலிருந்து வெள்ளாளப்பட்டி, கருப்பூர் 5 ரோடு வழியாக சேலம் பழைய பஸ் நிலையத்திற்கு ஒரு மகளிர் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகர எல்லைக்குள் மகளிர் பயணிகள் அதிகம் பயணம் செய்வதால், கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி சமூக விரோதிகளால் மகளிருக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்த்திட மகளிர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தேக்கம்பட்டி, வெள்ளாளப்பட்டி, கருப்பூர் போன்ற கிராமப் பகுதிகளில் மகளிர் மட்டும் தனியாக அதிகம் பயணம் செய்ய வாய்ப்பில்லை. எனவே, கோரிக்கைத் தடத்தில் மகளிர் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

76—

### பேருந்து வசதி

**வினா எண் 33096—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகம், கன்னியாகுமரி, பணிமனைக்குட்பட்ட தடம் எண் 566 (அஞ்சு கிராமம் - இராமநாதபுரம்) நெல்லை மாவட்டம் இராமநாதபுரம் ஊராட்சிக்குட்பட்ட பாப்பான்குளம் கிராமம் வழியாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது இயக்கப்பட்டு வரும் தடம் எண் 566-ன் பாதையை பெத்தரங்கபுரத்திலிருந்து காக்கரை பாப்பான்குளம் வழியாக தடமாற்றம் செய்து இயக்கினால், தனி நடை ஒன்றிற்கு 1.5 கி.மீ. தூரம் அதிகமாகும்.



மேலும் காக்கரை முதல் பாப்பான்குளம் வரையிலான 2.5 கி.மீ. நீளமுள்ள சாலை, பேருந்து இயக்குவதற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி பேருந்தைக் கேட்கப்பட்டுள்ளவாறு பாப்பான்குளம் கிராமம் வழியாக தடமாற்றம் செய்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

77—

### சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 31078—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலையில் குறுகிய வளைவுப் பகுதியில அடிக்கடி விபத்து நடக்கும் பகுதி என்று தட்டி வைக்கப்பட்டுள்ள பகுதியில் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்திற்கு எதிரிலுள்ள தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் அனுமதியும், நிதியும் பெற்று முன்னுரிமையின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலையின் குறுகிய வளைவுப் பகுதிகள் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தின் எதிரில் உள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் கி.மீ. 3.5/500 முதல் 3.5/800 வரையுள்ள பகுதியில் ஓடுதளத்தின் அகலம் குறைந்தபட்சம் 10 மீட்டரும், வளைவுப் பகுதியில் 15.70 மீட்டரும் இருக்கின்றது. இந்த அளவுகள் தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு உகந்ததாகவே இருப்பதால், தற்போது அகலப்படுத்தும் கேள்வி எழவில்லை.

78—

## சிறு சேமிப்பு

**வினா எண் 17176—திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் (Tiny Deposit) தினசரி சிறுசேமிப்பு வசூல் செய்யும் முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தினசரி சிறுசேமிப்பு வசூல் செய்யும் முறை அமலில் இருந்து வருகிறது. தமிழகத்திலுள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நீலகிரி, சேலம், சென்னை, வேலூர், தருமபுரி, புதுக்கோட்டை, மதுரை, ஈரோடு மற்றும் திருவண்ணாமலை ஆகிய 9 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தினசரி சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

79—

## நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 22836—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சிந்தாமணியில் பகுதிநேர நியாயவிலைக் கடை மற்றும் 27-ஆவது வார்டு ஆசாத் நகரில் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை ஆகியவை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சிந்தாமணி கிராமம் தற்போது இயங்கிவரும் தாய்க் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்திருப்பதால் இக்கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் தென்காசி நகரம் 27-ஆவது வார்டு ஆசாத் நகரில் 180 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தாய்க் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்துள்ளதாலும், இப்பகுதியில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடையோ அல்லது முழுநேர நியாயவிலைக் கடையோ அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

## கூட்டுறவு வங்கிக்கு கட்டட வசதி

**வினா எண் 30391—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமாலூர் ஒன்றியம், செம்பியக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருமாலூர் ஒன்றியத்தில், செம்பியக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்ற பெயரில் வங்கி எதுவும் செயல்படவில்லை. ஆனால், செம்பியக்குடி கிராமத்தில் குலமாணிக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி முன்பு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது, இவ்வங்கி குலமாணிக்கம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வங்கிக்குக் கட்டடம் கட்ட காலி அடிமனை வாங்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான முன்மொழிவு அவ்வங்கியின் நிர்வாகத்திடம் கோரப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 4

81—

### கூட்டுறவு வங்கி தரம் உயர்த்துதல்

**வினா எண் 30543—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மத்தியக் கூட்டுறவு வங்கியை 'ஏ' கிரேடு தரம் உயர்த்த சட்டப்படி போதுமான தகுதிகள் இருப்பதால் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 1-4-1998 முதல் கன்னியாகுமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 'ஏ' வகுப்பு வங்கியாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

82—

### பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 26385—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பால் விநியோகம் செய்யாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் எத்தனை உள்ளன?

*(ஆ)* அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழகத்திலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 2,250 சங்கங்கள் பால் விற்பனை செய்யப்படாமல் செயலிழந்து உள்ளன. அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை ஏதுமில்லை.



2000 ஏப்ரல் 4]

83—

### நலத்திட்டப் பணிகளுக்கு அலுவலகங்கள்

**வினா எண் 33328—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 1994-ல் உருவாக்கப்பட்ட கட்டுமானப் பணி கட்டடத் தொழிலாளர் கழகத்தில் பதிவு பெற்றுள்ள 1.75 கோடி தொழிலாளர்களுக்குரிய நலத்திட்டப் பணிகளைச் செயல்படுத்த தற்போதுள்ள அலுவலகங்கள் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், கூடுதல் கிளை அலுவலகங்களை வட்டத் தலைநகரங்களில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* 22-11-1999 அன்று நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் எட்டாவது கூட்டத்தில் முடிவெடுத்துள்ளபடி இவ்வாரியப் பணிகளை கவனிப்பதற்கென 29 மாவட்டங்களில் தேவையான பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் வாரியத்தின் நிதிநிலைமைக்கேற்ப வாரியப் பணி மேற்கொள்வதற்கு பணியிடங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

84—

### ஓய்வு இல்லம்

**வினா எண் 33331—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கென தனியாக ஓய்வு இல்லம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

228779

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வு இல்லம் கட்டுவது குறித்து தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**85—**

**விசைத்தறியாளர்கள் கடன்**

**வினா எண் 29834—திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டத்தில் நலிவடைந்துள்ள விசைத்தறியாளர்களின் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

பல்லடம் வட்டத்தில் நலிவடைந்துள்ள விசைத்தறியாளர்களின் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றி வழங்க இயலாது.

இத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு அரசு உற்பத்தித் திட்டங்கள் மூலம் இலவச வேட்டி, சேலை மற்றும் சீருடை உற்பத்தித் திட்டம் வழங்கி, தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

பல்லடம் வட்டத்தில் 500 நபர்கள் தமது சொந்தப் பொறுப்பில் நிலவள வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று தொழில் செய்து வருகின்றனர். தங்களது சொந்தப் பொறுப்பில் பெற்ற கடனுக்கு அரசு பொறுப்பு ஏற்க இயலாது. கடன் பெற்ற விசைத்தறி நெசவாளர்களே கடன் வழங்கிய நிதி நிறுவனங்கள், வங்கிகளை அணுகி நீண்டகாலக் கடனாக மாற்றித் தருமாறு கோரலாம்.

**86—**

**அடுக்கு மாடி விடுகள் கட்டுதல்**

**வினா எண் 28270—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு பொதுப் பணித் துறையின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 373, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-2-1979-ல் மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடம் இவற்றில் மட்டும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களை செயற்படுத்துமாறு ஆணை பிறப்பித்துள்ளது. பெண்ணாகரம், தருமபுரி மாவட்டத்தில் ஒரு தாலுகா தலைமையிடம் என்பதால் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை செயல்படுத்தவில்லை. இருப்பினும், இப்பகுதியில் அரசு அலுவலர்களிடமிருந்து வாடகைக் குடியிருப்புகளுக்குப் போதிய தேவையும் அரசுக்குச் சொந்தமான தக்க நிலம் மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையும் இருப்பின், அரசின் அனுமதியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆவன செய்ய இயலும்.

**87—**

**முத்திரைத்தாள்**

**வினா எண் 31216—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலி முத்திரைத்தாள்கள் மற்றும் கோர்ட் ஸ்டாம்புகள் விற்பனை செய்வதைத் தடுக்க கண்காணிப்பும், கடுமையான நடவடிக்கையும் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 4

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) போலி முத்திரைத்தாள்கள் மற்றும் நீதிமன்ற வில்லைகள் விற்பனை செய்வதைத் தடுக்க பதிவுத் துறையின் சிறப்பு விழிப்புக் குழுவும், மாவட்டப் பதிவாளர், துணைப் பதிவுத் துறைத் தலைவர் போன்ற அலுவலர்களும் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணித்து வருகின்றனர்.

(ஆ) ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இவ்வினா எழவில்லை.

**88—**

**கயிறு தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 32323—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பகுதி கயிறு தொழிலாளர்களுக்கு தேங்காய் மட்டை நார் ஊறவைப்பதற்கு கொல்லங்கோடு கிராமம் புல எண் 571-ல் 79.5 ஏக்கர் நிலம், நிலமாற்றம் செய்யக் கேட்டு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த கருத்துரு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது என்றும், கொல்லங்கோடு கிராமம், புல எண் 571-ல் உள்ள ஏ.வி.எம். கால்வாய் புறம்போக்கு நிலம், கால்வாய்க்காக ஒதுக்கப்பட்ட இடம் எனவும், இத்தகைய நீர்நிலை புறம்போக்கு நிலங்களைப் பிற உபயோகங்களுக்கு மாற்றம் செய்வதற்கு



2000 ஏப்ரல் 4]

அரசு தடை விதித்து ஆணைகள் பிறப்பித்துள்ளதால், கொல்லங்கோடு கயிறு தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்க இயலாத நிலை உள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**89—**

**மின்னணு தொழிற்பேட்டை**

**வினா எண் 33221—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மின்னணு தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மின்னணு தொழிற்பேட்டையில் நான்கு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி அமைக்கப்பட்டுள்ள நான்கு தொழிற்சாலைகளில் மூன்று தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மற்ற ஒரு தொழிற்சாலை, போதிய சந்தை வாய்ப்பு இல்லாததால் தற்போது இயங்கவில்லை.

**90—**

**எழுதுபொருள்**

**வினா எண் 30487—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் துறைகளுக்கு வழங்கும் எழுதுபொருட்கள் தரமுள்ளதாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2000 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் காகித வகைகள் பொது ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள் மூலம் நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு தரமானது என தெரிந்தெடுக்கப்பட்ட எழுதுபொருட்களே அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் கூடிய தரமான படிப்பெருக்கித் தாட்கள், மைக்குழல்கள், கார்பன் தாட்கள் போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றன. தவிர, பிற இனங்களை, நடைமுறையிலுள்ள விதிகளின்படி, அந்தந்தத் துறைகளே கூட்டுறவு அங்காடிகள் மூலம் கொள்முதல் செய்துகொள்கின்றன.

**91—**

**விற்பனை நிலையங்கள் தொடங்குதல்**

**வினா எண் 30488—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மூலம் வெளியிடப்படும் அரசு வெளியீடுகள் எளிதில் கிடைக்க விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அண்ணா சாலையில் கதவிலக்கம் 817-ல் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உள்ளது. மேலும், ஒரு துணை விற்பனை நிலையம், உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ளது. பிற மாவட்டங்களில் அரசு வெளியீடுகள் அரசு அங்கீகாரம் பெற்ற முகவர்கள்



2000 ஏப்ரல் 4]

மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கருவூலங்கள் மூலமாகவும் பணிப் பதிவேடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், பொதுமக்களுக்குத் தேவைப்படும் அரசு வெளியீடுகளுக்கு உரிய தொகை அவர்களிடமிருந்து கேட்புக் காசோலை அல்லது பணவிடை மூலம் பெறப்பட்டு, இங்கிருந்து அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமையிடத்திலும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் தொடங்கும் சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**92—**

**தட்டச்சு இயந்திரங்கள்**

**வினா எண் 30490—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் துறையிடம் உள்ள பழைய தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்களை உடல் ஊனமுற்றோர்கள், விதவைகள் ஆகியோருக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு எழுதுபொருள் நூல் விதி 112-ன்படி, ரெமிங்டன் மற்றும் அண்டர்வுட் தட்டச்சுப் பொறிகளின் பயன்பாட்டுக் காலம் 18 ஆண்டுகளும், ஏனைய நிறுவனங்களின் தட்டச்சுப் பொறிகளின் பயன்பாட்டுக் காலம் 15 ஆண்டுகளும் ஆகும். மேற்படி இயந்திரங்களின் பயன்பாட்டுக் காலம் முடிவுற்றபின், அவை மேலும் உபயோகிக்கத் தகுதியற்றவை எனக் கழிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு கழிவு நீக்கம் செய்யப்பட்ட தட்டச்சுகள் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 4

கேள்வியில் குறிப்பிட்டுள்ளபடி உடல் ஊனமுற்றவர்/விதவைகள் ஆகியோருக்கு பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களை இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ வழங்க தற்போது நடைமுறையிலுள்ள விதிகளில் இடமில்லை.

93—

**எழுதுபொருள் வழங்குதல்**

**வினா எண் 31870—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் எழுதுபொருட்கள் தற்பொழுது இருப்பதைவிட கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

அரசு அலுவலர்களுக்கு தேவைப்பட்டியலின் அடிப்படையில் முந்தைய மூன்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட எழுதுபொருட்களின் சராசரியின்படி இருப்பில் உள்ள எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு தேவைப்பட்டியலின் இருப்பில் உள்ள எழுதுபொருட்கள் 11-3-1999-ல் வழங்கப்பட்டன. மேலும் 1999-2000 ஆம் ஆண்டுக்கான தேவைப்பட்டியல் இதுவரை பெறப்படவில்லை. தேவைப்பட்டியல் பெறப்பட்ட பின்னர் மூன்றாண்டு சராசரி உபயோகத்தின் அடிப்படையில் இருப்பில் உள்ள எழுதுபொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

94—

**முதியோர் இல்லம் தொடங்குதல்**

**வினா எண் 21048—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 4]

(அ) வேலூர் மாவட்டம், வேலூரில் முதியோர் இல்லம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் முதியோர் இல்லங்கள் ஏதும் அரசால் நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லங்கள் நடத்துவதற்கு தனியார் தொண்டு நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்படுகிறது. தற்போது, வேலூரில் தொண்டு நிறுவனங்கள் ஏதும் முதியோர் இல்லம் நடத்துவதற்கு மானியம் கோரி விண்ணப்பிக்கவில்லை. அவ்வாறு தொண்டு நிறுவனங்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டால், விதிமுறைகளுக்குட்பட்டு அரசு மானியம் வழங்கப்படும்.

95—

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 32117—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் தற்போது அளித்துவரும் 3 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து 5 சதவீதமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் தற்போது அளித்துவரும் 3 சதவீத இட ஒதுக்கீட்டினை 5 சதவீதமாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

96—

## நவீன பொதுக் கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 25190—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வாலிபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் நவீனப் பொதுக் கழிப்பிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் வட்டம், நெருப்பெரிச்சல் கிராமம், வாலிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்) மதிப்பீட்டில் நவீனக் கழிப்பிடம் 31-12-1999 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

97—

## கறவை மாடுகள் வழங்குதல்

**வினா எண் 25488—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் சங்கங்களிலுள்ள ஆதிதிராவிடர் உறுப்பினர்கள் தாட்கோ மூலம் 50 சதவிகித மானியத்தில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு கறவை மாடுகள் வழங்க கடன் வழங்கப்பட்டது?



விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டிற்கு தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்கு நிதி அனுமதிக்கப்படவில்லை. ஆனால் நடப்பு நிதியாண்டிற்கு (1999-2000) தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்கு சிறப்பு மைய நிதியுதவி அனுமதிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, சேலம் மாவட்டத்திற்கு 185 பயனாளிகளுக்கு கறவை மாடு ஒன்றிற்கு மானியமாக ரூ. 4,000 வீதம் (33 சதவீதம் மானியம்) 370 கறவை மாடுகள் வழங்குவதற்கு ரூ. 14.80 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

98—

## ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் கட்டுமானப் பணிகள்

**வினா எண் 28453—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அதன் தற்போதைய முன்னேற்ற விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 5 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) 5 கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

[2000 ஏப்ரல் 4

| வ.எண் | வேலையின் பெயர் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | ஆசனூர் உண்டுறைவிடப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல். | கூரை வேயப்பட்டது. |
| 2. | தாளமலை உண்டுறைவிடப்பள்ளி விடுதி | ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பணி தொடங்கப்பட வேண்டும். |
| 3. | கொடுமுடி மாணவியர் விடுதிக் கட்டடம் | ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட வேண்டும். |
| 4. | பருகூர் உண்டுறைவிடப் பள்ளிக்குக் கட்டடம் | கடைக்கால் மண் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. |
| 5. | சுந்தரக்கரடு பெருமாள் பாளையம் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி | தாட்கோ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டடப் பணி (Lintal Level) நிலவு மட்டம் வரை கட்டப்பட்டுள்ளது. |

**99—**

## ஆதிதிராவிடர்களுக்கு நிலம்

**வினா எண் 30994—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சி புதுப்பாளையத்தில் க.ச. 362 நிலத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட நிலம் எடுக்கும் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், புதுப்பாளையத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கும்பொருட்டு க.ச. 362 காலையில் தொடரப்பட்ட நில ஆர்ஜித நடவடிக்கைகள் நில



2000 ஏப்ரல் 4]

உரிமையாளரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 16-12-1998 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மேற்படி காலைக்குப் பதிலாக அதே நில உரிமையாளருக்கு பாத்தியப்பட்ட க.ச. 379-1 மற்றும் 380-2 காலைகளில் 0.69.5 எக்டேர் பூமியை நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நில ஆர்ஜிதம் செய்து, புதுப்பாளையத்தைச் சேர்ந்த 52 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுவிட்டன என கோவை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**100—**

## பருத்தித் துணி உற்பத்தி

**வினா எண் 26417—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த நிதியாண்டில் பருத்தித் துணி உற்பத்திப் பிரிவில் நட்டம் ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பருத்தித் துணி உற்பத்திப் பிரிவின் செயல்திறனை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால், உரிய நேரத்தில் வங்கியிடமிருந்து நிதியுதவி பெற இயலாததாலும், வாரியத்தின் நிதிநிலைமை சரி இல்லாத காரணத்தாலும், பருத்தித் துணி உற்பத்தியில் சரிவு நிலை ஏற்பட்டது. இதனால் 1997-98 ஆம் நிதியாண்டில் பருத்தித் துணி உற்பத்திப் பிரிவில் நட்டம் ஏற்பட்டது. தற்போது பருத்தித் துணி உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு நெசவாளர்களுக்குத் தேவைப்படும் அச்சு மற்றும் விழுதுகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்தும் நெசவாளர்கள் அதிகமாக சேர்க்கப்பட்டும் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அலகுகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் நேபாளி தறி அலகுகளில் உள்ள தறிகளுக்குத் தேவையான உதிரி பாகங்களை கொள்முதல் செய்தும் பருத்தித் துணி உற்பத்தியை அதிகரிக்க வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001* ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு) திரு. அப்பாவு உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர்

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே நான் பேசுவதற்கு முன்பு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாளை காலை திருவனந்தபுரத்திற்குச் சென்று திருவனந்தபுரத்தில் கேரள முதலமைச்சரோடு முல்லைப் பெரியாறு அணையைப் பற்றிய பேச்சு நடத்த இருப்பதாக பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன். முல்லைப் பெரியாறு அணை என்பது 100, 120 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓர் அணை என்பதோடு அப்போதிருந்த அரசாங்கங்கள் 999 ஆண்டுகளுக்கு அந்த அணைக்காக agreement போட்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால் இன்னொரு 999 ஆண்டுகளுக்கு அந்த agreement-ஐ நீட்டிக்கலாம் என்றும்கூட அந்த ஒப்பந்தத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

152 அடி தண்ணீர் என்பது நிரந்தரமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஒரு கட்டாயத்தின் காரணமாக, சட்டத்தின் காரணமாக உறுதி செய்யப்பட்ட ஒன்று. இதில் முதலமைச்சர் அவர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்ற சந்தேகத்தை இன்று காலையிலே இந்து போன்ற பெரிய பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. 152 அடி என்பதில், 100 அடி தண்ணீர் பயன்படாத கிணற்றுக்குள் இருக்கிற தண்ணீர் போன்றது. வெறும் 52 அடி தண்ணீரைத்தான் தென் மாவட்டங்கள் எல்லாம் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே போய்ப் பேசி அதில் ஏதாவது 1 அடி, 1/2 அடி குறைத்தால்கூட அது தென் மாவட்ட விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பாகும் என்பதை இந்த நேரத்திலே நான் எச்சரிக்க விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 4] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. 145 அடிக்குக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளப்போகிறார்கள் என்ற ஓர் செய்தி இந்து பத்திரிகையில் இன்று வந்திருக்கிறது. அப்படி ஏதாவது ஓர் அடி குறைத்தால்கூட அது தென் மாவட்ட மக்களுக்கு நாம் செய்கிற மிகப் பெரிய ஒரு துரோகமாகும் என்பதை இந்த நேரத்தில் நான் கடுமையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் 152 அடிக்கு ஒரு ½ அடி கூட குறைக்கக் கூடாது என்பதில் அழுத்தமாக இருக்க வேண்டும். அவர்கள் அதை மறுத்துவிட்டால் பிறகு சட்ட ரீதியாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமே தவிர, இதில் போய் எந்தவிதமான compromise-க்கும் இடமில்லை என்பதை முதலிலேயே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய நிதிநிலை அறிக்கை. முதலமைச்சர் அவர்கள் 60 ஆண்டு கால அரசியல் அனுபவம் பெற்றவர்; 40 ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர்; 4-வது முறையாக முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள்; இப்படிப்பட்ட ஓர் அனுபவம் வாய்ந்த முதலமைச்சர், வருகின்ற தேர்தலை மனதில் வைத்து ஒரு மிக மலிவான தேர்தல் அறிக்கையை — நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறபோது நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்.

முற்பகல் 10-35

ரேஷன் அரிசி, மண்ணெண்ணெய் விலை உயர்வு பற்றியெல்லாம்கூட நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் இன்று ஏதோ வேறு வேறு அரசுகள் போன்று ஒரு சூழ்நிலையை இந்த பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு என்பது இன்று டெல்லியில் இருக்கின்ற பாரதிய ஜனதா அரசினுடைய ஓர் அங்கம். இவர்களைக் கேட்காமல் அவர்கள் அரிசி விலையை உயர்த்தியிருக்க மாட்டார்கள், மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியிருக்க மாட்டார்கள், gas விலையை உயர்த்தியிருக்க மாட்டார்கள். ஆனால், இங்கே நம்முடைய தமிழ்நாட்டு மக்களை ஏமாளிகளைப் போல நினைத்து, மத்திய அரசுக்கு இவர்கள் கோரிக்கை வைப்பது போன்ற ஒரு சூழ்நிலையை இங்கே உருவாக்கியிருப்பது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்புகூட Steel Plant சம்பந்தமாக நாங்கள் ஒரு கோரிக்கை வைத்தோம். இங்கே நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானம்கூட

நிறைவேற்றினார்கள். ஆனால் அந்த Steel ஆலை மறுபடியும் தனியாருக்குப் போகாமல் தடுக்கப்பட்டுவிட்டதா என்கிற செய்தி இன்னும் வரவில்லை.

அதைப்போல, மண்ணெண்ணெய் என்பது ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடியது. கிட்டத்தட்ட 100 மடங்கு விலையை உயர்த்தி, மத்திய அரசு அறிவித்திருக்கிறது. முன்பு 2½ ரூபாயாக இருந்தது இப்போது 5 ரூபாய். (குறுக்கீடு) மடங்கு. per cent வித்தியாசம் இருக்கிறது. சரி. 100 சதவிகிதம் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதன் காரணமாக இன்று ஏழை எளிய மக்கள் மத்தியில் மிகப் பெரிய அதிருப்தி நிலவுகிறது. நம்முடைய அரசாங்கத்தை நான் என்ன கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்னால், இப்படி நம்முடைய ஏழை, எளிய மக்களுக்கு விரோதமான காரியங்களை மத்திய அரசு செய்துகொண்டே போகுமானால், நாம் அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, இந்த மன்றத்திலேயே ஒரு தீர்மானம் போட்டு, மண்ணெண்ணெய் விலையைக் குறைக்க வேண்டும், gas விலையைக் குறைக்க வேண்டும், சேலம் Steel ஆலையைத் திரும்ப அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளுக்காக ஒரு தேதியை நிர்ணயம் செய்து இந்தத் தேதிக்குள் இவற்றையெல்லாம் செய்யவில்லை என்றால், நாடு தழுவிய கடையடைப்பு போன்ற மிகப் பெரிய போராட்டத்தில் இந்த அரசு ஈடுபடும் என்பதை வெளிப்படையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வடசென்னை கடல் அரிப்பைப் பற்றி புதிதாகக் கண்டுபிடித்ததைப்போல கண்டுபிடித்து, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நெதர்லாந்துக்குச் சென்று அங்கே அவர்களோடு ஓர் ஒப்பந்தம் போடப்படும்--போடப்பட்டிருப்பதாகக்கூடச் சொல்லவில்லை--என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் 4 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு புதிதாகக் கண்டுபிடித்ததைப்போல சொல்லியிருப்பது மிகவும் வேதனை அளிக்கக்கூடியதாகும்.

நம்முடைய வடசென்னை என்பது இன்று எந்த சூழ்நிலையில் இருக்கிறது என்று சொன்னால்—கடந்த 4 ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு வடசென்னை—திருவொற்றியூர் கடற்கரை சாலையில் M.R.L., M.F.L., Ennore Foundary போன்ற தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்துள்ளன. துறைமுகப் போக்குவரத்துத் துறைக்கான Containers ஏற்றிச் செல்லும் ஆயிரக்கணக்கான வண்டிகளும் இந்தச் சாலையில்தான் போக வேண்டியிருக்கிறது. மிகப் பெரிய போக்குவரத்தின் காரணமாக,



வடசென்னை மக்கள் இன்று பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், கடற்கரைச் சாலை உடைந்து, உடைக்கப்பட்டு, கடல் அரிப்பு ஏற்பட்டு, நம்முடைய வடசென்னைப் பகுதி மக்களுக்கு ஒரு பெரிய நரக வேதனையாக இருப்பதை, இவ்வளவு நாட்களாகக் கண்டுகொள்ளாமல், கடைசியாக உங்களுடைய ஆட்சி முடியப்போகிற இந்த நேரத்தில் உல்லாசப் பிரியரான நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு போனதாகவும் அவர்கள் ஏதோ அங்கே பேசி வந்திருப்பதாகவும் தெரிவித்திருப்பது இந்த அவைக்கு ஓர் ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

பிறகு கணினியைப் பற்றிப் பேசினார்கள். கணினி என்பது இந்த நூற்றாண்டில் தமிழக அரசினுடைய மிக முக்கியமான ஒரு பிரச்சினை ஆகும். நம்முடைய மாண்புமிகு ஐ. கணேசன் அவர்கள் நேற்று மிக விரிவாக நம்முடைய மேயர் அவர்கள் சென்னை நகரத்தில் சிறப்பான முறையில் கணினிகளை எல்லாம் ஏற்படுத்தி, பள்ளிக்கூடங்களை எல்லாம் மிகச் சிறப்பான முறையிலே நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை மிக மகிழ்ச்சியோடு சொன்னார்கள். திரு. கணேசன் அவர்கள் சொன்னது உண்மைதானா என்பதை அறிவதற்காக, நான் சென்னை மாநகராட்சியின்கீழ் வரும் நெசப்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு நேற்று போய்ப் பார்த்தேன். ஏனென்றால், மேயர் ஒரு நல்ல இளைஞர். இந்த நகரத்திற்குப் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நாங்களெல்லாம் விரும்புகிறோம். நெசப்பாக்கம் உயர்நிலைப் பள்ளியில் 12 வகுப்பறைகள், ground floor-ஐச் சேர்த்து 4 மாடி. கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குக் கதவு கிடையாது. சன்னல் கிடையாது, கைப்பிடிச் சுவர் கிடையாது. உயர்நிலைப் பள்ளி அது. 1,500 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். 1,500 மாணவர்களையும் இரண்டு shift-ஆகப் போட்டு — ஏனென்றால் பக்கத்திலே வேறு எந்தப் பள்ளிக்கூடமும் இல்லை என்ற காரணத்தினாலே, இரண்டு shift-ஆகப் போட்டு — காலையில் மேல் வகுப்புகளும், மாலையில் கீழ் வகுப்புகளுமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் மேலாக, ஆசிரியர்கள் கிடையாது, விளக்குகள் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நம்முடைய சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கூடங்கள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்

நம்முடைய சென்னை மாநகர மேல்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கு 425 கணிப்பொறிகளை வாங்கியிருக்கிறார்கள். வாங்கியதை நான் தவறு என்று சொல்லவில்லை. நான்கூட நம்முடைய அரசின் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. அரங்க. தெய்வமணி அவர்களைக்கூட, நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன். இந்த 666 பள்ளிக்கூடங்களுக்குக் கணினியை நாம் கொடுப்பதாக நம்முடைய பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநகராட்சிக்கும் அதிலே சேர்ந்திருக்கிறதா என்று கேட்டேன். அவர் சொன்னார், "மாநகராட்சிக்கும் எங்களுக்கும் சம்பந்தம் கிடையாது; அதை அவர்களே வாங்கிக்கொள்கிறார்கள்" என்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே என்ன அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், கணினி வாங்குவது தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், கணினியை வாங்கி அதை முறையாக நம்மால் பயன்படுத்த முடியாது.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் தமிழ்நாடு முழுவதும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியைக் கொண்டுவர வேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, அந்த அடிப்படையில் கொண்டு வருவதாக இருந்தால், கணினிப் பொறியை விலைக்கு வாங்குவதில்லை என்றும், அதற்கு மாறாக, கணினிக் கல்வியை வழங்கக்கூடிய நிறுவனங்களிடத்திலே contract முறையிலே ஒப்படைப்பது என்று, 600 பள்ளிக்கூடங்களிலே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. மாநகராட்சி மன்றத்தில் அதற்கு முன்னாலேயே கணினி வாங்க வேண்டுமென்று தீர்மானித்து அவர்கள் செயல்பாடு, அவர்களுடைய முறைகளுக்கு ஏற்ப அது தொடங்கப்பட்டுவிட்டது. ஆகவே, ஒன்றுக்கொன்று முரண்பாடு அல்ல. கணினி வாங்குவது குற்றம் என்று சொல்லவில்லை. கணினி வாங்குவதைவிட, contract மூலமாக ஒப்படைத்தால், அவர்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுகிற மாற்றத்திற்கேற்ப புதிய கணினிகளைக் கொண்டு, தகுந்த கல்வியை எதிர்காலத்திலே வழங்க முடியும் என்ற முறையில் contract வழங்கப்பட்டதே தவிர, வாங்குவதே தவறு என்றல்ல? அரசுப் பள்ளிக்கூடங்களிலேகூட, ஏற்கெனவே வாங்கிக் கொடுத்து, பல இடங்களிலே கணினிக் கல்வி ஒவ்வொரு வகையில் நடத்தப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நானும் வாங்குவது தவறு என்று சொல்லவில்லை. 425 கணினிகள் வாங்கியபிறகு, குறிப்பிட்ட சில பள்ளிக்கூடங்களிலே சென்று பார்த்தேன். திருவான்மியூர் மாநகராட்சிப் பள்ளி, லாயிட்ஸ் ரோடு மாநகராட்சிப் பள்ளி, இருசப்பகிராமிணி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, இந்தப் பள்ளிகளிலேயெல்லாம் கணினியைக் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால், ஓர் இருட்டறையில், தூசி படிந்த நிலையில், மோசமான நிலையில் பராமரித்து வருகிறார்கள். ஆசிரியர்களே கிடையாது. படிப்பதற்கான எந்த வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்கிறேனே தவிர, கணினியை வாங்கியது தவறு என்று நான் சொல்லவில்லை. பிறகு நம்முடைய பேராசிரியர் சொன்னதுபோல, 666 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொன்னதுபோல, ஓர் agency மூலமாக, NIIT நிர்வாகத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல்படி, ஒரு பள்ளிக்கு 17 இலட்சம் ரூபாயை நம்முடைய அரசு கொடுக்கிறது NIIT-க்கு. அவர்கள் அதை sub-contract விட்டு, 13 இலட்சம் ரூபாய்க்கு சில பள்ளிகளில் கொடுத்திருக்கிறார்கள். அந்த sub-contract எடுத்தவர், 12-க்குக் குறையாமல், ஒவ்வொரு பள்ளிக்கும் கணினி கொடுக்க வேண்டும். இரண்டு, மூன்று என்று இஷ்டம் போல கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் முறையாகப் பள்ளிகள் நடத்தப்படவில்லை. ஆகவே, இது ஆரம்பத்திலேயே மிக மோசமாக இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் இந்த நேரத்திலே சொல்கிறேன்.



முற்பகல் 10-45

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, contract, sub-contract என்ற இரண்டு நிலை கிடையாது. ஒரே நிலையில், யார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்களோ, எந்தப் பள்ளிக்கூடத்திற்கு வழங்குகிறார்களோ, அவர்களுக்கு நேரடியாகவே contract தரப்படுகிறது. மேற்பார்வை பொறுப்புதான் NIIT மூலமாகத் தொடர்ந்து ஒப்பந்தக்காரர் முறையாக கணினி அமைக்கிறார்களா, வகுப்பு நடத்துகிறார்களா, ஆசிரியர்கள் வருகிறார்களா என்று பார்க்கப்படுகிறது. அப்படி 8, 10 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் செம்மையாக அதை நிறைவேற்றவில்லை என்பது காணப்பட்டு, அவர்களுக்கும் எச்சரிக்கை தரப்பட்டு, இரண்டு மாதங்களுக்குள் அது சரி செய்யப்படாவிட்டால், அந்தக் contract நீக்கப்படும்; அடுத்த ஆண்டில் வேறு contract வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், கணினி என்பது, ஆரம்பத்திலேயே இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலையில் வந்துவிடக் கூடாது என்பதற்காக எச்சரிக்கையாக நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஊரிலே சிமென்ட் 190 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த நேரத்திலே, எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய தலைவர்களிலே ஒருவரான திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இது மிகக் கொடுமையான விலை; அண்டை மாநிலங்களிலே 110 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறபோது, தமிழகம் ஏன் இப்படி ஒரு கொடுமையான நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறது என்று கேட்டபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விரும்பினால், அங்கேயிருந்து கொண்டு வந்து தாராளமாக அதை விற்றுக்கொள்ளலாம் என்று ஓர் உத்தரவாதம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையிலே, சிமென்டை நாங்கள் வெளியிலேயிருந்து வாங்கி வந்து, 125 ரூபாய்க்கு இங்கே விற்றோம். அப்போதுகூட, நம்முடைய. முதலமைச்சர் "உங்களுக்கு கட்சிக்கு 60 ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது" என்றுகூடத் தகவல் என்று சொன்னார். இல்லை, இல்லை, இலாபம் வந்திருக்கிறது என்று நான் சொன்னேன். இதுசம்பந்தமாக, பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியை நான் இங்கே படிக்கிறேன்.

``An investigation by the Director General of Investigation and Registration has revealed the existence of a cartel among certain cement companies which has been detrimental to the interests of consumers" according to Mr. Justice A.N. Divecha, Chairman, Monopolies and Restrictive Trade Practices Commission.

Mr. Justice Divecha told press persons here today— எந்த ஊரிலே— மதுரையிலே—சொல்லியிருக்கிறார்—"that the cartel included a cement company in Tamil Nadu." Though the cement manufacturers have vehemently denied the existence of a cartel, the M.R.T.P.C. had ordered an enquiry based on the preliminary investigation report submitted to it by the Director General of Investigation and Registration என்று ஒரு மிகப் பெரிய உண்மையை இங்கே, வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். Cartel என்பது ஒரு பெரிய சூதாட்ட கும்பல் போன்று சிலர் சேர்ந்து கொண்டு தமிழக மக்களை கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்கள். கீழே தொடர்ந்து வருகிறது:



The investigation had also revealed that ``in the case of a particular manufacturer the profits had zoomed by 800 percent in a single year".

ஒரு வருடத்திலே 800 சதவிகிதம் கொள்ளையடித்திருக்கிறார்கள். ஒரு கம்பெனி கொள்ளையடித்திருக்கிறது. He did not want to elaborate on the case, as the matter was *sub judice* என்று சொல்லியிருக்கிறார்கள். சிமென்ட் பிரச்சினையில், ஒரு தனி நபருக்காக நம்முடைய அரசாங்கமே வளைந்து கொடுக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டை நான் ஏற்கெனவே இங்கே சொன்னேன்.

நம்முடைய மத்திய அரசாங்கம் ஒரு நியாயமான கோரிக்கையில், எல்லா மாநில முதலமைச்சர்களும், நிதியமைச்சர்களும் கலந்து கொண்ட மாநாட்டில் ஒரு முடிவெடுத்தார்கள். என்ன முடிவெடுத்தார்கள் என்று சொன்னால், இந்த Factory-களுக்கு எல்லாம், 5 வருடம், 7 வருடம், 10 வருடம், 15 வருடங்கள் என்று Holiday period என்று சொல்லக்கூடிய, அதாவது விற்பனை வரி கொடுக்காமல் அவர்கள் தொழில் நடத்துவதற்குக் கொடுக்கின்ற சலுகைகளை இரத்து செய்துவிட வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்தது.

அதற்காக எல்லோரும் சேர்ந்து, 2002ஆம் ஆண்டு வரை தொழிலைத் தொடங்குபவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை கொடுப்பது; அதற்குப் பிறகு தொழில் தொடங்குபவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்ற ஒரு முடிவெடுத்து, எல்லா மாநில அரசுகளும், அதேபோல், 23-1-2000 இல் நம்முடைய தமிழக அரசும் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. என்ன உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தச் சட்டப்படி, அதாவது இந்த 23-1-2000-க்குள்ளாக, ஏதாவது ஒரு வகையில் அரசை அவர்கள் அணுகி இருக்க வேண்டும். தொழில் தொடங்குகிறோம் என்று அணுகி இருக்க வேண்டும். 2002-க்குள்ளாக, உற்பத்தியை அவர்கள் தொடங்கிவிட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு, 7 ஆண்டுகாலம் வரிச் சலுகை அளிப்பது என்று நம்முடைய அரசு ஓர் உத்தரவு போட்டது. இந்த உத்தரவு போட்டபிறகு 7-2-2000 அன்று மறுபடியும், ஓர் உத்தரவை நம்முடைய அரசு போட்டிருக்கிறது. இல்லை, இல்லை, நாங்கள் முதலிலே போட்டது தப்பு, என்கிற வகையில் அதிலே, இந்தச் சில தொழில்கள், பெரிய தொழில் அதிபர்கள், தொழில் தொடங்கியிருப்பவர்களுக்கு, பாதிப்பு வருகின்ற வகையில் இன்னொரு சட்டம் போட்டிருக்கிறார்கள். இல்லை, இல்லை, 23-1-2000 அன்று மிஷினரியை நீங்கள் வாங்கி இருக்க வேண்டும், 2002 வரையில்லை, 2001-லேயே நீங்கள் Production தொடங்க வேண்டுமென்று இன்னொரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இவ்வாறு செய்தால் நம்முடைய அரசினுடைய மரியாதை என்னவாகும் என்பதை

இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், மத்திய அரசாங்கம் Guidelines கொடுத்து, எல்லோரும் சேர்ந்து, எல்லா மாநிலங்களும் சேர்ந்து, ஒத்துக்கொண்ட ஒரு சட்டத்தை தமிழக அரசும் ஏற்றுக்கொண்டு போட்ட ஒரு சட்டம். அதே நேரத்தில் இப்போது மேற்கு வங்காளத்திலே, இந்தச் சட்டத்தை மத்திய அரசு சொன்னபடி போட்டு இருக்கிறார்கள். நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திரா அரசு என்ன சொன்னது என்றால், இல்லை, இல்லை, எங்களுக்கு நிறைய தொழில் வரவேண்டும், இந்தச் சட்டப்படி நாங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க தாயாராக இல்லை என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். கர்நாடகாவைப் பொறுத்தவரையில், மத்திய அரசினுடைய Guidelines-படி நாங்கள் நடக்கிறோம் என்று அவர்கள் ஒரு G.O. போட்டிருக்கிறார்கள். நம்முடைய கேரள அரசுகூட ஓராண்டு என்று சட்டத்தைப் போட்டுவிட்டு, சட்டமன்றத்தில் எல்லோரும், நம்முடைய நாட்டிற்கு தொழிலே வராது என்று சொன்னபிறகு, அதைத் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழக அரசு, ஒரு உள்நோக்கத்தோடு, ஓர் தனி நபருக்கு, பெரிய இலாபம் வர வேண்டுமென்கின்ற...

முற்பகல் 10-50

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தொழில் வர வேண்டும், வர வேண்டாம் என்கின்ற அந்த வாதத்தின் அடிப்படையிலே அல்ல. முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு விதிமுறை வகுத்தது உண்மைதான். அது அமைச்சரவைக் கூட்டத்திலே எடுத்த முடிவு. அதற்குபிறகு, எங்களுக்குக் கிடைத்த தகவல், கேரள அரசு, இதற்கு மாறாக வேறு ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது என்று. அப்படியானால், கேரள அரசின் சட்டத்தைப் பார்ப்போம் என்று வாங்கிப் பார்த்தோம். கேரள அரசு கம்யூனிஸ்ட் அரசாங்கம். இங்கே நாம் போட்ட சட்டம் ஏதோ முதலாளிகளுக்கு ஆதரவானதாக ஆகிவிடக்கூடாது, அதன் காரணாக, முதலாளிகள் அல்லது அதிபர்கள் கட்டவேண்டிய ஏறத்தாழ 200 கோடி ரூபாய் வரி அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே, கேரள அரசைப் பின்பற்றலாம் என்று கேரள அரசு போட்டிருக்கிற விதிமுறைகளைப் பின்பற்றி, மீண்டும் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே, அந்த முடிவு எடுக்கப்பட்டதே தவிர, அதிலே யாரும், தனிப்பட்டவர் யார் என்றால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவருடைய பெயரையே குறிப்பிட்டுச் சொல்லலாம். அதை வாதத்திற்குக்கூட வைத்துக்கொள்ளலாம்.



திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தனியார்களுக்காக வாதாடவில்லை. இந்த நாட்டில் தொழில் வர வேண்டும், பெரிய தொழில்கள் வர வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறல்ல. கேரள அரசாங்கம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல முதலிலேயே அந்தச் சட்டத்தைப் போட்டார்கள். ஓர் ஆண்டு முடிந்தவுடன், தொழிலைத் தொடங்கிட வேண்டுமென்று, பிறகு, சட்டமன்றத்தில் பல சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லாம் அவர்களுடைய ஆலோசனையின்படி, இப்படியெல்லாம் நீங்கள் சட்டம் போட்டால், ஒரு தொழில் அதிபர்கூட நமக்கு வர மாட்டார்கள் என்று சொன்னபிறகு, சட்டமன்றத்திலேயே, அந்தச் சட்டத்தைத் திருத்தி, முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து, இந்த G.O.-வைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொழில் அதிபர்கள் என்று சொன்னால், இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான பேருக்கு வேலை கொடுக்கக்கூடிய மிகப் பெரிய தொழில் அதிபர்கள் அவர்கள் எல்லாம் இந்த ஊரிலே, நீங்கள் இந்த மாதிரி சட்டம் போட்டார்கள் என்றால், இந்த ஊரைவிட்டே போய்விடுவார்கள். பக்கத்திலே, கர்நாடகா இருக்கிறது, கேரளா இருக்கிறது, ஆந்திரா இருக்கிறது. அங்கேயெல்லாம் போய்விடுவார்கள். நான், இந்த நாட்டு மக்களுடைய நலனைக் கருதிச் சொல்கிறேனே தவிர, தனி நபர்களுக்காக, தனி தொழில் அதிபர்களுக்காக பேசக்கூடியவன் அல்ல என்பதை நான் இங்கே ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அடுத்ததாக நெசவு ஆலை. நான்கூட சமீபத்திலே குடியாத்தம் போய் இருந்தேன். குடியாத்தம் என்பது முழுக்க முழுக்க நெசவாளர்கள் வாழ்கின்ற ஊர். அங்கே அவர்களுடைய உற்பத்தியை எல்லாம் வாங்குவதற்கு ஆளே இல்லை என்பதற்காக அந்த ஊரை விட்டே அத்தனைபேரும் வெளியேறி ஆந்திரப் பகுதிக்குச் சென்று கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 500 குடும்பங்கள் அன்றைக்குப் போய் விட்டன என்று தகவல் சொன்னார்கள்.

அடுத்து இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் இப்போது கடுமையான வறட்சி நிலவுகிறது. குடிதண்ணீர் கிடையாது. விவசாயம் எல்லாம் பாழ்பட்டுப் போய்விட்டது. அவர்கள் கேரளாவிற்குச் சென்று

மரவள்ளிக் கிழங்கை வெட்டி பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருகாலத்தில் வந்தாரை எல்லாம் வாழ வைத்த தமிழகத்தில் இருந்து இப்போது பிழைப்புக்காக அடுத்த மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை இரண்டு தினங்களுக்கு முன்பு பார்த்து, 'என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், மக்கள் எல்லாம் போய்க்கொண்டிருக்கிறார்கள், குடிக்கத் தண்ணீர் இல்லை, என்று கேட்டபோது, '2 கோடி ரூபாய் வறட்சி நிவாரண நிதி நான் அரசிடம் கேட்டிருக்கிறேன், அதை விரைவில் வாங்கிக் கொடுங்கள்' என்று சொன்னார்கள். இந்த நேரத்திலே அதை நான் ஒரு கோரிக்கையாக வைத்து, நம்முடைய இராமநாதபுரம் மாவட்டம் போன்ற வறட்சி மாவட்டத்திற்கு உடனடியாக வறட்சி நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஓர் அருமையான தொழில். 'டிசகால், கேசகால்' என்று விவசாயிகளை வாழ வைக்கக்கூடிய ஒரு நல்ல தொழில் கடந்த 3 ஆண்டுகளாக நம்முடைய தமிழக அரசினுடைய கிடப்பிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அவர், வெளிநாட்டிலிருந்து நல்ல நுணுக்கங்களையெல்லாம் பெற்று மத்தியப் பிரதேசத்தில் இந்தத் தொழிலைத் தொடங்குவதற்காகச் சென்றவர், தமிழ்நாட்டில் நாம் தொடங்க வேண்டுமென்று இங்கே உள்ளவர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இங்கே வந்து 18,000 கோடி ரூபாயில் தொடங்குகிறேன் என்று சொன்னார். இதிலே என்ன ஒரு பெரிய சமாச்சாரம் என்று சொன்னால், இந்த 'டிசகால், கேசகால்' என்பது நம்முடைய கரும்புச் சக்கையிலிருந்து எடுக்கக்கூடிய ஓர் அருமையான எரிபொருள். அந்த எரிபொருளை பயன்படுத்துவதன் மூலம் பெட்ரோலில் 20 சதவிகிதம் கலக்கலாம், டீசலில் 40 சதவிகிதம் கலக்கலாம். அதன் மூலம் நம்முடைய அன்னியச் செலாவணி மிச்சப்படுவதோடு, இந்த நாடு பூராவும் இருக்கின்ற கரும்புகள் அத்தனையையும் பயன்படுத்த முடியும். அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், நீங்கள் 700 ரூபாய்க்கு இப்போது அரசாங்கத்தோடு போராடிக்கொண்டிருக்கிறீர்கள். எனக்கு licence-ஐ இந்த அரசு கொடுக்குமேயானால், நான் அவர்களுக்கு 2,000 ரூபாய் கரும்புக்கு விலை கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று இந்த அரசுக்கு எழுதியிருக்கிறார். அதுமட்டுமல்ல. வறட்சி மிகுந்த இராமநாதபுரம் போன்ற...



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் சொல்கின்ற அந்தத் திட்டம் இந்தியாவிலே எங்கு வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம், தமிழ்நாட்டிலும் ஆரம்பிக்கலாம். அதற்கெல்லாம், இப்பொழுது licence தேவையில்லை. எல்லா licence-ஐயும் decentralise செய்து விட்டது மத்திய அரசாங்கம். எனவே, மாநில அரசிடம் licence கேட்கிறாரா, மத்திய அரசாங்கத்திடமிருந்து licence கேட்கிறாரா? என்ன licence கேட்கிறார், எதற்காக licence கேட்கிறார்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய N.O.C. என்று சொல்லக்கூடிய licence-க்காக 3 ஆண்டுகளாக இங்கே அவர் காத்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய மத்திய அரசாங்கம்கூட ஒவ்வொரு மாநில அரசாங்கத்திற்கும் Letter எழுதியிருக்கிறது. இந்த 'டிசகால், கேசகால்'-ஐ நீங்கள் தாராளமாக அனுமதியுங்கள், அதன் மூலம் இந்த நாட்டில் பெட்ரோல் உபயோகத்தைக் குறைப்பதற்கு வசதியாக இருக்கும். அதுமட்டுமல்ல, அந்த ஆராய்ச்சியிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், கரும்பு, தண்ணீர் இருக்கிற இடத்தில் மட்டுமல்ல, வறட்சி மிகுந்த மாவட்டங்களிலேகூட கரும்பு விவசாயத்தை நாங்கள் பண்ணுகிறோம் என்று அவர்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நல்ல தொழில் 18,000 கோடி ரூபாய்—உங்களிடமிருந்து அவர் பணம்கூடக் கேட்கவில்லை—பணத்தையெல்லாம் வெளிநாட்டிலிருந்து நான் கொண்டு வருகிறேன். இந்த நாட்டு தமிழ் மக்களை வாழ வையுங்கள் என்றுதான் கேட்டு இருக்கிறார். 3 ஆண்டு காலமாக அதைக் clear பண்ணிக் கொடுப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம் 'இருக்கிறது என்பதை தயவுசெய்து இங்கே விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகின்ற அந்தத் திட்டத்தைக் குறித்து ஓரளவிற்கு நானும் படித்துப் பார்த்தேன். அந்தத் திட்டத்தைப் படித்துப் பார்க்கும்போது, அது செயல் முறையிலே நிச்சயமாக நடைமுறைப்படுத்த முடியுமா என்றுகூட எனக்கே புரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவரே சொல்கிறார். இராமநாதபுரம் மாவட்டத்திலே தண்ணீர் இல்லாத பகுதியிலேகூட கரும்பு உற்பத்தி செய்து அதற்கு நல்ல விலை கொடுக்க முடியும் என்று தெரிவித்ததாக. உள்ளபடியே

வட ஆற்காடு மாவட்டம் போன்ற தண்ணீர் இருக்கின்ற மாவட்டங்களிலேயே கரும்பிற்கு சில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். பயிரிட்ட கரும்புகூட சாவியாகப் போய்விடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலையில் எப்படி கரும்பை உற்பத்தி செய்ய முடியும் என்று அவர் சொல்கிறார், எதிர்க்கட்சித் தலைவர் எப்படி அதை நம்புகிறார் என்பதை விளக்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசோதனை மொரிஷியஸ் தீவிலும் இஸ்ரேலிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகிறது. மழையே பெய்யாத ஒரு நாடு இஸ்ரேல் நாடு. அதைப்போன்ற மொரிஷியஸிலும் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. ஆனால் இந்த நடைமுறை இரண்டு நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வெற்றிகரமாக வந்திருக்கிறது என்பதை தமிழக அரசு அறியுமா? அதன் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர், அந்தத் தொழிலதிபரை நீங்கள் அழைத்துப் பேசினீர்களா? பேசுவதற்காகவாவது ஒரு வாய்ப்பை அவருக்கு அளியுங்கள் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவர் அவ்வளவு விவரங்கள் வைத்திருக்கிறார். உங்களிடம் பணமோ கேட்கவில்லை. எல்லாவிதமான.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்தத் தொழிலதிபர் ஏறத்தாழ ரூ.16 ஆயிரம் கோடி முதலீடு செய்வதாகச் சொல்கிறார், N.R.I. அதுகூட (குறுக்கீடு) ரூ.18 ஆயிரம் கோடி முதலீடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார். உங்களுக்கு என்ன resources இருக்கிறது, அதற்கு என்ன ஆதாரங்கள் என்று கேட்டு, அவரைச் சந்தித்தபோது, மூன்று முறை இதோ கொண்டு வருகிறேன், இதோ கொண்டு வருகிறேன் என்று சொல்லிச் சென்றவர் சந்திக்கவும் இல்லை, அதைப் பற்றிய விவரங்களையும் தரவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த விவரங்களையும் தரவில்லை அவர்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** என்ன விவரம் இருக்கிறது என்று நீங்கள் கேட்டதற்குப் பதில் கொடுத்து, அந்தப் பதிலினுடைய 'copy'யை என்னிடம் கொடுத்திருக்கிறார். நான் அதை முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒரு பதில் கொடுத்து விட்டால், அதையே வைத்து திருப்தி அடைந்துவிட முடியாது. அந்தப் பதிலில் இருக்கின்ற சந்தேகங்களைக் கேட்டு மறுபடியும் பதில் தேவை என்று கேட்கும்போது, அதற்கும் பதில் அனுப்ப வேண்டும். அதற்கெல்லாம் சரியான முகாந்திரங்கள் சொல்லவில்லை. எனவேதான் நாங்கள் அதிலே அதிக சிரத்தை காட்ட முடியவில்லை.

அது மாத்திரமல்ல. இது ஒன்று கரும்பிலேயிருந்து, இன்னொன்று சோளத்திலேயிருந்து இந்த உற்பத்திகள் செய்யப்படுகின்றன. ஆனால் இதை துர்விநியோகப்படுத்துவதற்கும் வழி இருக்கின்றது. சாராயம் காய்ச்சுவதற்கும்கூட இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதனால்தான் இதிலே எல்லாவிதமான விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டிய பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. 3 வருஷம், 4 வருஷம் ஆனால்கூட பரவாயில்லை. அது வருவது உயர்ந்ததாக இருக்க வேண்டும், நல்லதாக இருக்க வேண்டும், தூய்மையான தொழிலாக இருக்க வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் அவரைக் கூப்பிட்டே பேசவில்லையே? பிறகு இவ்வளவு விவரங்கள் சொல்வதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது? கூப்பிட்டுப் பேசி உங்களுடைய தகுதி என்ன, சக்தி என்ன, பணம் எப்படிக் கொண்டுவருவாய் என்று கேட்டு—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதிகாரிகள் மட்டத்தில் கூப்பிட்டுப் பேசப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதிகாரிகள் மட்டத்திலேகூட அவரை அழைத்துப் பேசவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுக் கடனைப் பற்றி இங்கே நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு கருத்தை சொன்னார்கள், நாங்கள் NABARDலே கேட்டோம். NABARD லே அரசாங்கம் எந்தவிதமான கடன் நிவாரணமும் தரக் கூடாது என்று சொன்னார்கள், என்று நான் விசாரித்த வரையில் அந்தமாதிரி அவர்கள் சொல்லவில்லை. அவர்களுக்கு வேண்டியது

பணம்தான். இப்போது தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் மிகுந்த கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். கடன் தொல்லையிலே மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இந்த தண்ட வட்டியை மட்டும் நீக்கினால் போதாது. தயவுசெய்து முழுமையான வட்டியையும், தண்ட வட்டியையும் நீக்குவதோடு — நான்கூட இன்னொரு யோசனையை கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். முழுமையாக அசல் பூராவையும் நீக்க வேண்டுமென்று நான் கேட்க மாட்டேன்—அசலை மூன்று தவணையாகப் பிரித்து, மூன்று ஆண்டுகளுக்கு எந்தவிதமான வட்டியும், தண்ட வட்டியும் இல்லாமல் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் இங்கே ஓர் உறுதிமொழியைக் கொடுக்க வேண்டும். விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும், வாழ வைக்க வேண்டுமென்று நான் இந்த அரசை மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், விவசாயிகள் எல்லாம் மிகுந்த வேதனையில் இருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு உறுதிமொழி கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, நீலாங்கரை என்ற ஒரு பகுதி இருக்கிறது, சென்னையிலே. யாராவது போய்ப் பார்த்தீர்களா என்று தெரியவில்லை. துபாய்க்குப் போக வேண்டியதே இல்லை. நீலாங்கரைக்குப் போனாலே போதும். அந்த நீலாங்கரையில், உதயசூரியன் அவின்யூ, கதிரவன் அவின்யூ என்று இரண்டு அவின்யூக்கள் இருக்கின்றன. அடா அடா அந்த வீடுகளை எல்லாம் பார்த்தீர்களென்றால் ரூ.5 கோடி பெறும் ஒவ்வொரு வீடும் என்று சொல்கிறார்கள். நான் கோடியும் பார்த்ததில்லை, ஒன்றையும் பார்த்ததில்லை, ஒவ்வொரு ஏக்கரிலேயும் பிரமாதமான வீடு கட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போய் வீட்டைப் பார்த்தீர்கள் இல்லையா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் போய் அந்த வீட்டையெல்லாம் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு ஏக்கரிலேயும் வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். எல்லாம் இந்த அரசுக்கு வேண்டியவர்கள்தான் கட்டுகின்றார்கள். வீடு கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சட்டத்தை மீறி கட்டி இருக்கிறார்கள். மத்திய சர்க்கார், Supreme Court எல்லாம் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதாவது கடலிலிருந்து high tide என்று சொல்லக்கூடிய 500 மீட்டருக்கு அப்பாலேதான் வீடுகள் வர வேண்டும் என்பது ஒரு பொதுவான சட்டம். ஆனால் அங்கே கடல் அலையிலேயே வீடு கட்டியிருக்கிறார்கள். இது இந்த அரசாங்கத்திற்கு தெரிந்தே செய்கின்ற மிகப் பெரிய ஒரு மோசடி.



*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அவர் சொல்கின்ற அந்தப் பகுதி மட்டுமல்ல, திருவான்மியூரிலிருந்து ஏறக்குறைய கடற்கரை ஓரம் முழுவதுமே 20 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டப்பட்டு அங்கே பலர் பங்களாக்கள் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆட்சி வந்து ஒன்றும் தனியாக அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது எப்படி? அதாவது மத்திய அரசாங்கம் ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. 500 மீட்டருக்கு அப்பாலேதான் வீடுகள் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதை மீறி கட்டினார்கள் என்றால் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். யார், எப்படி கேட்காமல் வீடு கட்டியிருக்க முடியும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

பிறகு நம்முடைய மாண்புமிகு கோ.சி. மணி அவர்களுடைய தலைமையில்—இப்போதும் தலைமைதான், இல்லை என்று நான் சொல்லவில்லை—20, 30 ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கம் என்ற ஒரு பொது நலச் சங்கத்தைத் தொடங்கி நல்ல முறையில் இலாபம் ஈட்டி ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம், 30 இலட்சம் என்று இலாபம் வந்து கொண்டு இருந்த நேரத்தில் பத்திரிகைகளில் எல்லாம் அந்தத் தலைவரே அறிவித்து இருக்கிறார். 20 இலட்சம் இந்த வருஷம் இலாபம் என்று. ஆனால் அந்த Board Meeting-லே 20 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் நடக்கின்ற இந்தக் குளறுபடிகளை, ஊழல்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது சொன்னால் உடனே சொல்வார். என்ன இது நேயர் கடிதம் வாசிக்கிறீர்களா என்று கேட்பார். இப்போது அவருக்காக ஒரு - நேயர் கடிதத்தை நான் வாசிக்க விரும்புகின்றேன். (சிரிப்பு) அதாவது நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பு ஏற்ற பிறகு என்ன சொன்னார் என்றால் இந்த அரசாங்கம் இனிமேல் Tender விடுவதில் எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லாமல் Open Tender ஆக இருக்கும் என்று சொன்னார். Contractors and Builders Association அமைப்பினர் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சருக்குக் கொடுத்த கடிதத்தைத்தான் என்னிடமும் கொடுத்திருக்கிறார்கள். என்ன

சொல்கிறார்கள் என்றால் இந்த அமைச்சர் என்ன பண்ணியிருக்கிறார் என்றால் இப்போது Tender-ரே கிடையாது; Single Tender-லே கொடுத்துக்கொண்டு இருக்கிறார். Prove பண்ண முடியும். முதலமைச்சரைப் பார்க்க வேண்டும் என்று அவர் பல தடவை முயற்சி பண்ணியிருக்கிறார். அமைச்சர்தான் தடுத்தாரோ, அதிகாரிகள்தான் தடுத்தார்களோ, முதலமைச்சரைப் பார்க்கவே அவர்கள் விடவில்லை. ஆகவே அவருடைய சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். பல பொதுப் பணி வேலைகள் Tender இல்லாமல் Single Tender-ஆக நடந்து கொண்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை நான் வைக்க விரும்புகிறேன். பிறகு, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் 3 டிவிஷன்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tender விடாமல் செய்கிறார் என்று சொன்னார். பிறகு single tender என்கிறார். இதுமாதிரி இல்லாமல் ஏதாவது குறிப்பிட்டுச் சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நேற்றுகூட எனக்கு ஒரு செய்தி வந்தது. பெரம்பலூர் மாவட்டத்திலே 11 இலட்சம் ரூபாய்க்குக்கூட single tender வந்திருக்கிறது என்று. உடனடியாக அந்த அதிகாரியைக் கூப்பிட்டு single tender-ஐ நாங்கள் encourage செய்யவில்லை; உடனடியாக அதை cancel செய்யுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆகவே டெண்டர் விடவில்லை என்கிறீர்கள்; விட்ட tender single என்கிறீர்கள். எந்த இடத்தில் யார் விட்டது என்று சொன்னால் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** எந்தெந்த இடங்களிலே single tender விடப்பட்டிருக்கிறது என்பது பற்றி Detail-ஆக ஒரு ரிப்போர்ட்டே வைத்திருக்கிறேன். நான் முதலமைச்சரிடம் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதை நான் படித்துவிடுகிறேன். பொதுத் துறையில் கட்டடப் பராமரிப்புக்கு estimate போடப்படுகிறது. தமிழக அரசின் கொள்கை முடிவு Nomination ஒழிப்பது. Open Tender முறையை அமல்படுத்துவது. ஆனால் அதிகாரிகள் சுயநலத்திற்காக Opentender கைகழுவிவிட்டு Nomination முறையை மறைமுகமாகப் புகுத்தி வருகிறார்கள். உதாரணமாக தலைமைச் செயலகம், மருத்துவமனை, சட்டமன்ற விடுதி இங்கேயெல்லாம் open tender கிடையாது என்று அவர் அழுத்தம் திருத்தமாக முதலமைச்சருக்காக எழுதிய கடிதம்தான் இது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் maintenance works பற்றிச் சொல்கிறாரா அல்லது tender



பற்றிச் சொல்கிறாரா? சில நேரங்களில் - maintenance work-ஐ urgent-க்கு சில நேரங்களில் Offer work-ஆகக் கொடுப்பார்கள். ஆனால் tender என்பது, ஒரு வேலைக்கு அவர்கள் பணி செய்வதற்காகக் கேட்கப்படுகின்ற ஒப்பந்தப்புள்ளி. ஆகையினாலே maintenance என்பது வேறு; tender வேலை என்பது வேறு. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நாளைக்கே திடீரென்று அவசரம், அவசரமாக ஒன்று செய்ய வேண்டும் என்றால், அதற்கு tender போட முடியாது. அது maintenance work-லே வரும். வெள்ளை அடித்தல் போன்றவற்றைச் சிற்சில இடங்களில் செய்வார்கள்.

*முற்பகல் 11-10*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** Maintenance என்றால் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாயா? 10 கோடி, 5 கோடி—

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் அந்தச் challenge-ஐ ஏற்றுக்கொள்கிறேன். 10 கோடி, 5 கோடிக்கு Maintenance விட்டார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தயவுசெய்து 10 கோடிக்கு எப்போது nomination work கொடுத்தார்கள், 5 கோடிக்கு எப்போது கொடுத்தார்கள் என்று சொல்லட்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சென்னை நகரம் 3 டிவிஷன்களாக இருக்கின்றன. அந்த 3 டிவிஷன்களுக்கும், ஆண்டுக்கு 10, 10 கோடி. தென் சென்னைக்கு 10 கோடி ரூபாய்; மெரினா டிவிஷனுக்கு 10 கோடி ரூபாய்; வட சென்னைக்கு 20 கோடி ரூபாய். இந்தக் கோடிக்கணக்கான ரூபாய் வேலைகளுக்கு tender விடாமலேயே single tender-ல் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை ஆதாரத்தோடு நான் வைக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் எந்தெந்த வேலைகளை யார், யாருக்குக் கொடுத்தார் என்று கேட்டார். அந்த விவரத்தைச் சொல்லாமல் மறுபடியும் பொதுவாகவே சொல்லிக்கொண்டிருப்பது நல்லதல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலேகூட சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே ஒரு Maintenance வேலை 10 இலட்சம் ரூபாய்க்கு மேலே நடைபெற்றது. குழிகள் எல்லாம் கட்டப்பட்டு, அதன் பிறகு பிரித்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதுவும் tender விடப்படாமலேயே single tender-ஆக அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அது அமைச்சருடைய கவனத்திற்கு வந்ததா? அதற்கு அவருடைய பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே செய்யப்பட்ட maintenance work, கழிகள் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். tender விட்டு, syndicate அமைத்துகொண்டு பல பேர்கள், 'நீ போடாதே, நான் மட்டும் போடுகிறேன், என்று சொல்வது ஒரு வகை. ஆனால், tender விடாமல் ஒருவரைக் கூப்பிட்டு 'இந்த வேலையை நடத்து' என்று சொல்வது ஒரு வகை. அது Nomination. அதிலே, இரண்டிலே எது நடந்தது என்று அழகிரி சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற செய்தி, Nomination ஆகக் கொடுத்தார்கள் என்பது. அமைச்சர் அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியுமல்லவா? அவரல்லவா பதில் சொல்லவேண்டும். நான் கேள்வி கேட்கிற இடத்திலேதான் இருக்கிறேன். பதில் சொல்ல வேண்டியது நீங்கள்தான். எனவே, நீங்களே பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நாட்டிலே ஆயிரக்கணக்கான வேலைகள் நடக்கின்றன. ஆயிரக்கணக்கான வேலைகளையும் அமைச்சர் அறிந்து வைத்திருக்க முடியாது. குற்றச்சாட்டுச் சொன்னவர்கள், இது என்று சொன்னால் நான் அதிகாரிகளைக் கேட்டுச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கு மீண்டும் நான் வருகிறேன். கிட்டத்தட்ட 10 கோடி, 10 கோடி, 20 கோடி, ஆக 40 கோடி ரூபாய்க்கு என்று நீங்கள் சொன்னது Madras maintenance. அந்த 40 கோடி ரூபாய்க்கு tender விடவில்லை. Nomination என்று சொல்கிறீர்கள். தயவு செய்து அதை நீங்கள் நிரூபியுங்கள் இந்த மன்றத்தில். சுமார் 40 கோடி ரூபாய்க்கு nomination work கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதற்குள்ள ஆதாரத்தைச் சொல்லட்டும்; நிரூபிக்கட்டும். நான் பதில் சொல்கிறேன். எந்தத் தண்டனைக்கும் நான் தயார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நானும் எந்தத் தண்டனைக்கும் தயார். இதற்கு நாம் ஒரு date வைத்து எல்லோரையும் கூப்பிட்டு விசாரிப்போம்.



**Hon. Thiru Duraimurgan:** I accept the challenge. 40 கோடி ரூபாய்க்கு சென்னையிலே, தெற்கு, மத்திய, வடக்கு ஆகிய 3 பகுதிகளாகக் (கட்டடங்கள்) பிரிக்கப்பட்டிருப்பதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்த 40 கோடி ரூபாயும் tender முறை இல்லாமல் Nomination முறையிலே தரப்பட்டது என்று சொல்கிற வாதத்தை அவர் சொல்லியிருக்கிறார். தலைவர் அவர்களே, அதற்குள்ள ஆதாரத்தை அவர் காட்ட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் ஆதாரத்தைக் காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆமாம், இப்போதே கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்? ஒரு Committee போடுங்கள்.... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நான், பேரவைத் தலைவர் இருப்பதே உங்களுக்கு ஞாபகம் இல்லையா? நீங்கள் எல்லோருமே நேருக்கு நேராகவே பேசிக்கொண்டிருக்கிறீர்களே! மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ரொம்பப் பழுத்த அரசியல்வாதி. எத்தனையோ முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து இருக்கிறார். ஆதாரத்தோடு பேச வேண்டும் என்பது ஒரு விதி. ஆதாரத்தைப் பேரவைத் தலைவரிடம் காட்டிவிட்டுப் பேச வேண்டும் என்பது ஒரு விதி. அதை மறந்துவிட்டுப் பேசக் கூடாது.

**திரு. ச. அழகிரி:** I am on a point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக் கோட்டங்களில் நடைபெறுகின்ற Maintenance வேலைக்கு நீங்கள் Nomination மூலமாகக் கொடுத்திருக்கிறீர்கள் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. அதற்கு எங்களிடம் எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. காரணம் என்னவென்றால், ஆதாரங்களெல்லாம், கோப்புகளெல்லாம் அரசாங்கத்தின் கையில்தான் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் எங்களிடம் வந்து சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறோம். இதற்கு ஆதாரத்தைக் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள் இல்லை என்று நிரூபியுங்கள். நிரூபிக்க வேண்டியதுதான் அரசாங்கத்தினுடைய கடமை.

**Hon. Thiru Duraimurugan:** Mr. Speaker Sir, I am not bothered about what he says now. I am standing on what the Leader of the Opposition says. சென்னை மாநகரத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 40 கோடி ரூபாயை tender முறை இல்லாமல், tender விடாமல், Nomination முறையிலே

தரப்பட்டிருக்கிறது என்பது அவர் சொன்ன குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டிற்கு அவர் ஆதாரம் காட்ட வேண்டும். ஏனென்றால் இது சாதாரணமானதல்ல. 40 கோடி ரூபாயை tender முறை இல்லாமல் Nomination-லே கொடுத்தார்கள் என்று சொன்னால், அது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகப் பெரிய குற்றச்சாட்டு. சாதாரணக் குற்றச்சாட்டு அல்ல. இதற்கு இந்த அவையிலே நீங்கள் எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர் ஆதாரம் காட்ட வேண்டும். ஏனென்றால் இவ்வளவு பெரிய செய்தி நாட்டு மக்களுக்கு, பத்திரிகை மூலம் போகுமானால் மிகப் பெரிய விபரீதத்தை ஏற்படுத்தும். நான் இப்போதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தச் சவாலை ஏற்றுக்கொள்கிறேன். தயவுசெய்து ஆதாரத்தை 40 கோடி ரூபாய்க்கு tender முறை இல்லாமல் Nomination-லே கொடுத்ததற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

*முற்பகல் 11-15*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதைப் பல தடவை சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். யாரும் சத்தம் போடக்கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார வேண்டும். நான்தான் உங்களிடம் சொன்னேன். நீங்கள் என்னைத் திரும்பியே பார்க்கமாட்டேன் என்கிறீர்கள். உங்களை மாதிரி மூத்த சட்டமன்ற உறுப்பினர் இப்படிக் குற்றச்சாட்டுச் சொல்லுகிறபோது ஆதாரத்தைக் கொண்டுவந்து என்னிடம் காண்பித்துவிட்டுத்தான் பேச வேண்டும் என்ற விதி இருக்கிறது. உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் இப்போது பேசிக் கொண்டு இருக்கும்போது, ஆதாரம் இருக்கிறது என்கிறீர்கள். அப்படியென்றால் அதையாவது என்னிடம் முதலிலே வந்து காண்பிக்க வேண்டாமா நீங்கள்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சபாநாயகர் அவர்களிடம் நான் இப்போது கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். அவர்களே முடிவு பண்ணிச் சொல்லட்டும். அடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டும்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இன்றே அந்த ஆதாரத்தைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார். இன்றே வாங்கி நாளையதினமே நீங்கள் அதற்கான தீர்ப்பை வழங்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இது என் பொது வாழ்விற்கு விடப்பட்ட சவால். இது பத்திரிகையில் நாளைக்கு வருமானால்— நான் 40 ஆண்டு காலம் இந்த அரசியலில் இருந்திருக்கிறேன்—எனக்கு மிகப் பெரிய அவப்பெயரை ஏற்படுத்தும். அருள்கூர்ந்து அந்த ஆதாரத்தைத் தருகிற வரையில்— அவர் நிரூபிக்க வேண்டும்— அதுவரையிலே எந்தச் செய்தியும் பத்திரிகையிலே வரக்கூடாது. காரணம், இவர்கள் தூற்றி வாரிவிட்டுப் போய்விடுவார்கள். நாளைக்குப் பத்திரிகையிலே 40 கோடி ஊழல் பொதுப் பணித் துறையிலே என்று வரும். நான் ஊர், ஊராகப் போய் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? திருப்பி என்னால் இப்படிப் பேசமுடிய வேண்டும் அல்லவா? நான் பொறுப்புள்ள அமைச்சராக, அந்தக் கண்ணியத்தைக் காப்பாற்ற விரும்புகிறேன். அருள்கூர்ந்து 40 கோடிக்கு Nomination கொடுத்ததற்கு ஆதாரம் காட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திருப்பித் திருப்பி எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொல்கிறேன். இந்த மரபு உங்களுக்குத் தெரியாதது அல்ல. பல முறை, நான் பல உறுப்பினர்களிடம் சொல்லும்போது நீங்கள் இருந்திருக்கிறீர்கள். இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னாலே ஆதாரத்தோடு சட்டமன்றத்திற்கு வந்தீர்கள் என்றால் என்னுடைய அறையிலே வந்து இந்தக் குற்றச்சாட்டிற்கு இதுதான் ஆதாரம் என்று காண்பித்துவிட்டு, பிறகு நீங்கள் பேச வேண்டும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்வதிலே ஒரு நியாயம் இருக்கிறது. இப்படி நீங்கள் காட்டிய ஆதாரத்திலே ஒன்றுமில்லை என்று நான் முடிவு எடுத்துவிட்டேன் என்றால், பத்திரிகையிலே வந்ததை எப்படித் தடுப்பது? அதை நீங்களே சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை நம்பிக் கொடுத்த Contractors Association-லே என்ன நினைப்பார்கள்? என் மரியாதை என்ன ஆவது? ஆகவே தயவுசெய்து (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால், நம்முடைய அமைச்சருடைய மரியாதை கெட்டுப் போகும் என்று அவர் சொல்வது நியாயம். என்னை நம்பி ஒரு குற்றச்சாட்டுக் கொடுத்தவர்களுடைய மரியாதை என்ன ஆவது? ஆகவே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்கள் மரியாதையைத்தான் காப்பாற்றலாமே ஒழிய, உங்களை நம்பி யாரோ பேசியவர்களுடைய மரியாதைக்கு எல்லாம் நான் பொறுப்பல்ல.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** என்னை நம்பிக் கொடுத்த ஒரு குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டியது என்னுடைய கடமை. ஆகவே அதை நான் நம்முடைய சபாநாயகர் அவர்களிடத்தில் கொடுத்துவிடுகிறேன். அதை நீங்கள் பார்த்து நாளைக்கு இல்லையென்றால்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அவையினுடைய மரியாதை பாதிக்கப்படக்கூடாது. அவையினுடைய மரியாதைதான் அனைவருடைய மரியாதையையும் காப்பாற்றுவது. இந்த அவையிலே தரப்படுகிற எந்தப் புகாராக இருந்தாலும் தகுந்த ஆதாரத்தோடு முன்கூட்டி சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் சொல்லப்படுமானால், அந்தக் கருத்து நிரூபிக்கப்படுகிற அளவுக்கு, ஆதாரம் முழு அளவிற்கு நிரூபிக்கப்பட முடியாவிட்டாலும்கூட, அதனுடைய அடிப்படை ஆதாரங்கள் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்படுகிற வரையில் அவையினுடைய குறிப்பேட்டில் அது இடம்பெறக் கூடாது என்று அவையினுடைய மரியாதையைக் காப்பாற்றத் தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். இது பட்டிமன்றம் இல்லை, உட்காருங்கள்.. *(குறுக்கீடுகள்)* நான் தீர்பபுக் கொடுக்கப்போகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்த ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுத்தான் பேசியிருக்க வேண்டும். அதனால் அவைக் குறிப்பிலே "எதிர்க்கட்சித் தலைவர் ஒரு புகார் சொன்னார். அதற்கு உண்டான ஆதாரத்தைப் பேரவைத் தலைவரிடம் காண்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார், அவர் கொடுத்த ஆதாரத்தைப் பார்த்த பிறகு 2 நாட்களிலே நான் தீர்ப்புச் சொல்வேன்" என்ற அளவிலே தான் இந்தச் செய்தி பத்திரிகையிலே வரவேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அப்படியல்ல . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தீர்ப்புச் சொன்ன பிறகு நீங்கள் பேசக்கூடாது என்பது விதி. நான் தீர்ப்புச் சொல்லிவிட்டேன்.

*முற்பகல் 11-20*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய சபாநாயகருடைய தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெடுஞ்சாலைத் துறையில் 100 கோடி ரூபாய்க்கு வேலை செய்துவிட்டு, பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் எல்லாம் இப்போது கடன்பட்டு நிற்கிறோம் என்று வேதனையோடு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையில் 100 கோடி ரூபாய்க்கு அவர்கள் இப்போது வேலை செய்துவிட்டு, Bill வராமல் அவஸ்தைப்படுகிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அதையும் நம்முடைய...

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கிராமத்திலே சொல்வார்கள், 'மானாங்கானியான குற்றச்சாட்டு' என்று அப்படித்தான் சொல்கிறார். 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என கோடிக்கணக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேலை செய்தவர்களுக்குக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் பணம் கொடுக்கும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அதனாலே பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது நியாயம் இல்லாத குற்றச்சாட்டு.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பணம் கொடுத்துவிட்டால் சந்தோஷம். இதுவரை கொடுக்கவில்லை. கொடுக்காததாலேதான் இந்தக் குறைகளைச் சொல்கிறேன். அடுத்ததாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்ததாக, நம்முடைய அரசு, ஓய்வு பெற்றவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத்தைக் கொடுத்துவிட்டோம் என்று பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறது. ஆனால், அந்த ஓய்வூதியம் பெறுகின்ற அப்பாவி வயதானவர்கள் —70 வயது, 80 வயது, 90 வயது, நாளைக்கேகூட இரண்டு பேர் போய்விடுவார்கள்—என்ன சொல்கிறார்கள் என்றால், நிலுவைத் தொகையை வழங்க அரசு நிதித் துறையில் ஆணையிட்டிருப்பது, ஓய்வூதிய நிலுவைத் தொகைக்கு மட்டும்தான். பிறகு, commutation of pension நிலுவை, விடுப்புச் சம்பள நிலுவை, gratuity நிலுவை என்று இவையெல்லாம் எங்களுக்குச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். 'ஒட்டுமொத்தமாக நாங்கள் கொடுத்துவிட்டோம்' என்று இந்த அவையிலே நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது எங்களுக்குப் பல துன்பங்களை ஏற்படுத்துகிறது. காரணம், எங்களுக்குப் பணம் வந்துவிட்டது என்று— அவர்களுடைய உறவினர்கள் இருக்கிறார்கள் இல்லையா—அவர்கள் வயது சென்றவர்கள், பாவம்—அந்த உறவினர்கள் எல்லாம் 'உங்களுக்கு நிறையப் பணம் வந்துவிட்டது' என்று தொல்லை கொடுக்கிறார்கள். ஆனால், உண்மை அது அல்ல என்று எழுதியிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)*

கடைசியாக ஒன்று. தமிழருக்காக நாங்கள் வாழ்கிறோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அதைக்கூட நான் இதுவரை உண்மை என்றுதான் கருதிக்கொண்டிருந்தேன். ஆனால், இப்போது டி.வி.-யிலே பொதிகை டி.வி. என்று ஒரு சேனல் வருகிறது. சில நாட்களுக்கு முன்பு நான், நம்முடைய முன்னாள் கவர்னராக இருந்த பாரத ரத்னா சி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றிக்கூட ஓர் அருமையான பேட்டி பார்த்தேன். எனக்கே ரொம்பக் கண்ணீர் வந்துவிட்டது. அவர் இந்த நாட்டில் வாழ்ந்த வாழ்வு, அவர் இந்த நாட்டிற்காக உழைத்த உழைப்பு, அவர் மத்திய அரசில் அமைச்சராக இருந்து, 1967 ஆம் ஆண்டு தோற்று வெளியே வந்த நேரத்தில் சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்று யோசனை பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது A.B.T. மகாலிங்கம் அவர்கள், 'எங்களுடைய கம்பெனியிலிருந்து உங்களுக்கு நாங்கள் பணம் தருகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள் அதற்கு இவர் சொல்லியிருக்கிறார், 'நான் சும்மா வாங்கமாட்டேன், எனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுங்கள்' என்று கேட்டிருக்கிறார். அப்படிப்பட்ட உயர்ந்த மனிதருடைய வாழ்க்கை வரலாறு மிக அருமையாக அந்தப் பொதிகை டி.வி.-யிலே வந்தது. ஆனால் அந்தப் பொதிகை டி.வி.யை கிராமங்களிலே பார்ப்பதற்கு வாய்ப்பே



கிடையாது. ஏன் வாய்ப்பு இல்லையென்று சொன்னால் சன் டி.வி. தடுக்கிறது என்று சொல்கிறார்கள். சன் டி.வி.-க்கு வருகின்ற விளம்பரங்கள் எல்லாம் இந்தப் பொதிகை டி.வி.-க்கு வந்துவிட்டால் என்ன செய்வது என்று, ஒரு சதியைச் செய்து சன் டி.வி.-க்காரர்கள், அந்தப் பொதிகை டி.வி.-யை சாதாரண கிராமங்களுக்குச் செல்கின்ற சேனலில் வரவிடாமல் தடுக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொதிகை டி.வி. யாரால் நடத்தப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பொதிகை டி.வி. மத்திய அரசாங்கத்தினுடையது. மத்திய அரசாங்கத்திலேயிருக்கின்ற செல்வாக்கு மிக்க சன் டி.வி-யினுடைய உரிமையாளர்கள் அதைத் தடுக்கிறார்கள் என்ற ஒரு செய்தி நமக்கு வந்துகொண்டிருக்கிறது. அதைப் பொய்யாக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நாளைக்கே அது கிராமங்களுக்கு வருகின்ற, அதாவது தூர்தர்ஷன் என்று சொல்லக்கூடிய அதே வழியில், அதே சேனலில் பொதிகை டி.வி.-யையும் வரவழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் மிக்க ஒரு சிறந்த முதலமைச்சர் ஆவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், உங்களுடைய அரசாங்கத்தைப் பற்றியும் மக்கள் மத்தியிலே பல செய்திகள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நான் வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர்கள் அத்தனை பேரும், சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட, நீங்கள் உங்களுடைய சொத்துக் கணக்கை இந்த அவையிலே காட்டி, நீங்கள் தூய்மையானவர்கள் என்று எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-25*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்தில், விவாதங்களுக்குப் பதில் அளிக்கின்ற நாளான இன்று, என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு

முன்பு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாளையதினம், கேரள மாநிலம், திருவனந்தபுரம் சென்று அந்த மாநில முதலமைச்சர், அன்பிற்குரிய நண்பர் நாயனார் அவர்களைச் சந்தித்து, முல்லைப் பெரியாறு அணைக்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கின்றார். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வாழ்த்தைத் தொடர்ந்து அவர் பேசிய வார்த்தைகள் எல்லாம், கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்தைப் போலத்தான் எனக்குத் தெரிந்தது. ஏனென்றால், கிருஷ்ண பரமாத்மாபற்றி அவர்களுக்குத் தெரியும். (சிரிப்பு) கிருஷ்ண பரமாத்மா எப்படிப்பட்டவர் என்று எல்லோருக்கும் தெரியும். வாழ்த்துகின்ற மாதிரி இருக்கும், ஆனால் அதற்குள்ளே சாபம் அடங்கியிருக்கும். அதுதான் கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்து. நான் எப்பொழுதும் கிருஷ்ண பரமாத்மாவுடைய வாழ்த்தை நம்புகிறவன் அல்ல. இருந்தாலும் நம்புகிறேன். அவர்கள் 'நீ போ, உன்னை வாழ்த்துகிறேன்; ஆனால் நீ திரும்பி வரும்போது 152 அடிவரை நீரைச் சேமித்துவிட்டு வந்தால்தான் நான் ஒத்துக்கொள்வேன். இல்லாவிட்டால் தமிழ்நாட்டிற்கு அதைவிடத் துரோகம் கிடையாது' என்று சொன்னார்கள்.

·எதிர்க்கட்சித் தலைவர் எப்போதும் அவசரப்பட்டுப் பேசுகின்றவர் அல்ல. இருந்தாலும் கொஞ்சம் யோசித்து அவர் பேசியிருக்கலாம். இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், 145 அடி கொடுக்கலாம் என்று மத்திய சர்க்காரே சொல்லி, அதனால் ஒன்றும் அந்த அணை கெட்டுப் போய்விடாது, அந்த அணை பலமாகத்தான் இருக்கிறது என்று சொல்லி, அந்த முடிவைக் கேரள அரசு ஏற்றுகொள்ளாத ஒரு சூழ்நிலை. அது நாயனாருடைய எண்ணம் என்றுகூட நான் சொல்லமாட்டேன். அங்குள்ள அரசியல் சூழ்நிலை. அண்டை மாநிலங்களோடு ஏற்படக்கூடிய உறவைக் கெடுப்பதே ஆங்காங்கு எழுகின்ற அரசியல் சூழ்நிலைகள்தான். அந்த வகையில் நாயனார் அவர்கள் எதையும் உடனடியாகச் சொல்ல இயலாத அளவுக்கு அரசியல் நெருக்கடி அவருக்கு அங்கே இருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

இதுபோன்ற நேரங்களில் உண்மை என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த முல்லைப் பெரியாறு அணை பலமாக இருக்க வேண்டுமேயானால், ஒரு baby dam கட்ட வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது. ஆனால் அதுவும் தற்போது தடைப்பட்டிருக்கிறது. அதற்கும் சேர்த்துத்தான் இந்தப் பேச்சுவார்த்தை. baby dam கட்டினால்தான் 152 அடி தண்ணீரைத் தேக்க



முடியும். இல்லாவிட்டால் முடியாது. 145 அடி வரை ஒத்துக்கொண்டு, baby dam கட்டிய பிறகு 152 அடி தண்ணீரைத் தேக்குவது என்கின்ற ஒரு சமரச நிலையும் அதிலே இருக்கின்றது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொத்தாம்பொதுவில், '152 அடி என்று வராவிட்டால் நீ துரோகி' என்று (குறுக்கீடு) அவருக்கு ஆசை இருந்தால் சொல்லட்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தயவுசெய்து முதலமைச்சர் அவர்களை, 'துரோகி' என்ற அந்த வார்த்தையை நான் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அப்படிச் சொல்லியிருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். நீங்கள் திரும்பும்போது 152 அடியோடு வர வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை. துரோகம் செய்வதாகப் பொருள் என்று நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அப்படிச் சொல்லியிருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்கள் விருப்பம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 152 அடி என்பது எப்பொழுது சாத்தியப்படும் என்றால், baby dam முடித்திருக்க வேண்டும். நாமும் நியாயத்தைப் பார்க்க வேண்டும். baby dam கட்டாமல், 152 அடி என்று சொல்வது முறையல்ல. ஆனால் baby dam கட்டுவதற்கு ஏற்கெனவே சாத்தியக்கூறுகள் எல்லாம் ஏற்பட்டு, அதைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். கட்டும்பொழுது கேரள அரசு அதைத் தடுத்துவிட்டது. அப்படித் தடுத்ததை நிறுத்திக் கொண்டு, கட்டுவதற்கான அனுமதியும் தந்து 145-அடிக்கு அவர்கள் உடனடியாக ஒப்புதல் தருவார்களேயானால் அதைப் பற்றிப் பேசலாம். 152 அடி என்பதுதான் நம்முடைய குறிக்கோள். ஆனால் கிடைப்பதையும் விட்டுவிட வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-30*

**திரு. கே. சுப்பராயன்:** Point of order. பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பேசியதை ஒட்டி பதில் அளிக்கிறார்கள். நான் ஒரு மிக முக்கியமான பிரச்சினையைத் தங்கள் மூலம் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், நாளை நடைபெற இருக்கின்ற பேச்சுவார்த்தையின் தன்மைக்கு உள்ளே நாம் போவது என்பது விவேகக் குறைவானதாக அமைந்து விடக்கூடும். பிரச்சினை

முடிவுக்கு வருவதற்கு அதுவேகூட ஒரு எதிர்மறை அம்சமாகத் தோன்றிவிடக்கூடும் என்பதால், அருள்கூர்ந்து இந்த விவாதத்தை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போவதுதான் புத்திசாலித்தனம். புத்திசாலித்தனமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சுப்பராயன் அவர்களுக்கு இந்தப் புத்திசாலித்தனம் முன்பே வந்திருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டு இருக்கும்போது இந்தப் புத்திசாலித்தனம் சுப்பராயன் அவர்களுக்கு வந்து இருக்குமேயானால் நான் மகிழ்ந்து இருப்பேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இருந்தாலும் தாமதமாக வந்த புத்திசாலித்தனத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கை வெளிவந்தவுடனேயே இதைப் பற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைக்காரர்களிடத்தில்.....

**திரு. என்.ஆர். அழகராஜா:** Point of clarification, Sir,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தால் நிச்சயம் வெளியேற்றுவேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** "நிதிநிலை அறிக்கை, ஏற்கெனவே செயல்படுத்திக் கொண்டிருக்கிற எந்தப் பயனும் இல்லாத நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், உழவர் சந்தை, சமத்துவபுரம் ஆகிய திட்டங்களைப் பற்றித் தெரிவிப்பதாக இருக்கிறதே தவிர, புதிதாக எந்தத் திட்டமும் அறிவிக்கவில்லை. மொத்தத்தில் இந்த அறிக்கை மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கேற்ப ஒரு திட்டமும் இல்லாத, உப்பு சப்பு இல்லாத நிதிநிலை அறிக்கை" என்று பேட்டி கொடுக்கிறபோது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எந்தப் பயனும் நமக்கு நாமே திட்டத்தால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால், உழவர் சந்தையால், சமத்துவபுரத்தால் இல்லை என்று கூறியிருப்பதுதான் எனக்கு வியப்பூட்டுகிற பகுதிகளாகும். சமத்துவபுரத்தால் எந்தப் பயனும் இல்லை என்று இப்போது சொல்வதும், இதே அவையிலே மாண்புமிகு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களால் புகழ்ந்து போற்றப்பட்ட, பேசப்பட்ட நமக்கு நாமே திட்டத்தால் எந்தப் பயனும் இல்லை என்று சொல்வதும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எங்கள் ஊருக்கு இன்னும் விஸ்தரித்துக் கொடுங்கள் என்று கேட்கிற அளவுக்கு நல்ல திட்டம் என்று தமிழ் மாநில



காங்கிரஸ் நண்பர்களாலேயே பாராட்டப்பட்ட திட்டங்கள் எதிர்க்கட்சித் தலைவரால் எந்தப் பயனும் இல்லாத திட்டங்கள் என்று கூறப்பட்டிருப்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

நம்முடைய அருமை நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசும்போது, இதிலே எதுவுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். இதில் எதுவுமே இல்லை என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், தோழமைக் கட்சிகளாக இருந்து எதிர்க் கட்சியா அல்லது எதிரிக் கட்சியா என்ற இரு நிலைகளுக்கு இடையிலே உள்ளவர்கள் எல்லோருமே இதைப் பற்றி, ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். நானும் மீண்டும் ஒரு முறை—'ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்கிறார்களே!' என்று மீண்டும் ஒரு முறை—நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.

50 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படவிருக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்திட தொலைநோக்குத் திட்டம்; 21 ஆம் நூற்றாண்டிற்கு தமிழகத்தை அழைத்துச் செல்ல உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை—Biotechnology. Biotechnology என்பது சாதாரணமானதல்ல. இப்போது வளர்ந்து வருகிற விஞ்ஞானத்தில், குளோனிங் என்கிற முறை வந்திருக்கிறது. அதுவரையிலே வரக்கூடிய ஒரு technology தான். Biotechnology. வரும் நிதியாண்டில் எஞ்சிய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு கலை மற்றும் தொழில் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சித் திட்டம்; தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோருக்குக் கடன் வழங்க ஊக்க மூலதன நிதி—Venture Capital Fund; கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை போன்ற நகரங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள், Earth Stations வரும் ஆண்டில் அமைத்துத் தர முடிவு; அனைத்து வட்டாட்சி அலுவலகங்களும் முழுமையாகக் கணினிமயமாக ஆக்கப்படும்; அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் கணினி வசதி செய்யப்படும்; வரும் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும்; பழங்குடியினர் நலனைக் கவனிக்கத் தனியாக இயக்ககம் உருவாக்க முடிவு; இளைஞர்களுடைய விளையாட்டு மேம்பாட்டுக்கென தனியாக ஒரு துறை அமைப்பு; ஆதரவற்ற முதியோர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 150 ரூபாய் என்பது 200 ரூபாயாக உயர்வு; அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகள் வீடு கட்டி அனுபவித்து வருபவர்களுக்கு அந்த இடத்தை உரிமையாக்கி வீட்டுமனை பட்டா வழங்குதல்; 6ஆம் வகுப்பிலே பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு

ஏற்கெனவே இந்த அரசு வழங்குவது போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த 30 ஆயிரம் மாணவிகளுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் வழங்கும் திட்டம்.

முற்பகல் 11-35

அதேபோல 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 60 ஆயிரம் மாணவியருக்கு ஓராண்டுக்கு 500 ரூபாய் வீதம் ஊக்கத் தொகை; ஊனமுற்றோர்களுடைய வேலைவாய்ப்பை அதிகரித்திட 6 பயிற்சி மையங்கள் அமைத்து 300 பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக அளித்தல்; மேலும் 6 மையங்களில் ஆய்வுக்கூடப் பரிசோதனை, X-Ray பரிசோதனை, E.C.G., E.E.G., இதர நவீனப் பரிசோதனைகளை மேற்கொள்ள 300 பேருக்குப் பயிற்சி; சமூக சீர்திருத்தத் துறை மூலமாக மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை மீட்க பிரச்சாரம் செய்திட முடிவு; 60 வயதிற்குள் இறக்க நேரிடும் நெசவாளர்கள் குடும்ப ஓய்வு நிதி 5 ஆயிரம் ரூபாயாக உயர்வு. 60 வயதைத் தாண்டிய நெசவாளர்கள் பயன் பெற மாத ஓய்வூதியத் தொகை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்வு; பத்திரிகையாளர்களுடைய ஓய்வூதியம் 1500 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்வு; பத்திரிகையாளர் பணிபுரியும்போது இறந்துவிட்டால் வழங்கப்படும் நிதி 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்வு; மாவட்டத் தலைமையிடங்களில் அரசு அலுவலர்களுக்கு 2144 வாடகைக் குடியிருப்புகள்; புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைமையிடங்களிலும், திருப்பூர் போன்ற நகரங்களிலும் புதிதாக சார்பு நகரங்கள் (Satellite Towns) உருவாக்க முடிவு; சத்துணவு பெறும் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்ட 18 பைசா என்பது இனி 23 பைசாவாக உயர்த்த முடிவு; மகளிர் திட்டங்களை ஒருங்கிணைத்து 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம். உலகத் தரம் வாய்ந்த காஞ்சிபுரம் பட்டு, தஞ்சாவூர் தட்டு போன்ற பொருட்களுக்கு 'வணிகச் சின்னம்' அமைத்து, உலக அளவில் market ஏற்படுத்தித் தர முடிவு; கைவினைப் பொருட்களுக்கு 'பூமாலை' என்னும் வணிகச் சின்னம் அமைத்து, அவற்றை விற்பதற்கு ஏதுவாக விற்பனை மையங்கள்; இந்தப் பூமாலையைத்தான் த.மா.கா. உறுப்பினர் இராமன் அவர்கள் பேசும்போது 'யார் காதில் பூமாலை சுற்றப் பார்க்கிறீர்கள்' என்று சொன்னார்கள். பூமாலை சுற்றுகிற அளவுக்கு இராமன் காது அவ்வளவு பெரிய காது அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.



24-10-2001 அன்று மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200 ஆவது ஆண்டை நினைவு கூர்ந்திட அரசு சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி; சாமி சிதம்பரனார், மயிலை சீனி வெங்கடசாமி, கவிஞர் முடியரசன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் குடும்பத்திற்குத் தலா 10 இலட்சம் காப்பு நிதி; திருச்சி தலைக் காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக அறிவிப்பு. மாநிலமெங்கும் இளைஞர்களை ஊக்குவிக்க விளையாட்டுப் பயிற்சிகள், போட்டிகள் அறிவிப்பு; பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு நிவாரணம் காண உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு.

வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்து அறிவியல் அலுவலர்களாக மாற்ற முடிவு; ஓசூரில் மலர்ப் பூங்கா, சென்னைக்கருகே ஆடை தயாரிக்கும் பூங்கா, கடலூரில் தொழில் பூங்கா, நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பத் தொழில் பூங்கா, 3000 ஏக்கரில்; வரும் நிதியாண்டில் மாத்திரம் 696 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு; வரும் நிதியாண்டில் ஆயிரம் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகட்ட முடிவு; 10 இடங்களில் மீனவர் அங்காடி முதல்கட்டமாக அமைக்கப்படும்; தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளுடைய பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேச முடிவு; குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு மற்றும் கொடிங்கால் வடிகால் அகலப்படுத்தப்படும். உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும்.

முற்பகல் 11-40

தூர் வாருவதற்கு இந்த ஆண்டும் 50 கோடி ரூபாய்; ஆலந்தூர் மாடல் பாதாள சாக்கடை வசதித் திட்டத்தைப் பரவலாக்கத் திட்டம்; 6 ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள் நியமனம்; 4 ஆயிரம் காவல் துறையினர், தீயணைப்புப் பணியாளர்கள் நியமனம்; மாநில அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு குறித்து வெள்ளை அறிக்கை; நான்கு மாவட்டங்களில் ஊரகத் தூய்மை இயக்கம்; சொந்தக் கிராமங்களில் கல்விக்கூடங்கள், மருத்துவமனை அமைக்க முன்வருபவர்கள் பெயர் சூட்ட ஒப்புதல்; மாவட்டத் திட்டக் குழுக்கள் இனி மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் தலைமையிலே இயங்க முடிவு; தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்; கன்னியாகுமரியில் இரப்பர் தொழிற் பூங்கா. அபிஷேகப்பட்டியில் கால்நடைப் பண்ணையைச் சீர்திருத்தி மேம்பாடு செய்தல்; மதுரை மாநகரில் உயர்நீதிமன்றக் கிளை; வணிகர்களுக்கான

பல்வேறு சலுகைகள் வரிக் குறைப்பு, வரி நீக்கம்; திரைப்படத் துறைக்கு வரிச் சலுகைகள்; இவ்வளவும் அடங்கியுள்ள இந்த நிதிநிலை அறிக்கை எதுவுமே இல்லாதது, ஒன்றுமே இல்லாதது என்று பேசப்பட்டதுதான் எனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய அருமை நண்பர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா ஞானசேகரன் அவர்கள், அவர்களுடைய உரையின் தொடக்கத்தில் ஒன்றைச் சொன்னார்கள். வரி இல்லாத பட்ஜெட், வரி இல்லாத பட்ஜெட் என்கிறீர்களே, 'இதோ, நான், இன்றைய முதலமைச்சர் அன்று பேசிய பேச்சைப் படித்துக் காட்டுகிறேன்' என்று, என்னுடைய பழைய பேச்சை இங்கே படித்துக் காட்டினார். அதற்கு நான் உதவியதற்காக எனக்கு நானே நன்றி கூறிக்கொள்கிறேன். 4-3-1966-ல் நான் ஆற்றிய உரையை மேற்கோள் காட்டினார். அந்த மேற்கோளில் முழுப் பேச்சையும் படித்துக் காட்டியிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். அதை நான் படித்துக் காட்டுகிறேன். (சிரிப்பு) அன்று அவர்கள் மேற்கோள் காட்டிய என்னுடைய பேச்சில்,

"வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே வரி போட்டால் அது பெரும் பிரச்சினை என எண்ணி, மிகத் தந்திரமாக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே, போட வேண்டிய வரியை எல்லாம் போட்டு—இரண்டு மாதங்களுக்கு முன்பே, போட வேண்டிய வரியை எல்லாம் போட்டுவிட்டு' என்று நான் பேசியதை ஞானசேகரன் படிக்கும்போது சொல்லவில்லை, அதை மாத்திரம் விட்டு விட்டுப் படித்திருக்கிறார். "இந்த மன்றத்தினுடைய பெரும்பான்மையான ஒப்புதலையும் பெற்று, அந்த வரிகள் இன்றையதினம் நடமாடிக்கொண்டிருக்கிற நேரத்தில், வரி இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு வாதத்தை ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுப்பிக் கொண்டிருப்பது உள்ளபடியே விந்தையாக இருக்கிறது." உடனே, அந்த நடவடிக்கைக் குறிப்பிலே கனம் பக்தவத்சலம் குறுக்கிட்டு, "மேலும் வரி இல்லை என்பதுதான் வாதம்" என்று சொல்கிறார். அப்போது நான் தொடர்ந்து பேசுகிறேன்.

"திரு. மு. கருணாநிதி: மேலும் வரி இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார். தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கூறுவதைப்போல்தான் 'மேலும் வரி இல்லை' என்று கூறுவது இருக்கிறது. தோட்டா இல்லாத துப்பாக்கி என்றால், தோட்டாவே போடப்படாத துப்பாக்கி என்ற பொருளும் அல்ல. இருந்த தோட்டாக்கள், ஏழை



எளியவர்கள் என்ற புள்ளிமான்களை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டு, இப்போது தோட்டா இல்லாத காலித் துப்பாக்கியாகக் காட்டப்படுகிறது. மேலும் வரி இல்லை என்று கூறப்படுகிறது. இரண்டு திங்களுக்கு முன்பாக ஏறத்தாழ 8 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டுவிட்டு, 'மேலும் வரி இல்லை' என்று தோட்டா இல்லாத துப்பாக்கி காட்டப்படுகிறது" என்று பேசியிருக்கிறேன். தோட்டா இல்லாத துப்பாக்கிதான் என்பதற்காக அதை எடுக்காமல் விட்டுவிட்டார் ஞானசேகரன். ஆனால், அந்த 8 கோடி ரூபாய் வரி என்பது 1966-ல் போட்டபோது—அது இப்போது கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் மதிப்பு என்பதை மறந்துவிடக் கூடாது—1966-ல் வருவாய்க் கணக்கில் மொத்த வருவாயே தமிழ்நாடு அரசாங்கத்திற்கு 170 கோடி ரூபாய்தான். அதிலே 8 கோடி ரூபாய் என்பது இன்றைய அளவிலே கணக்குப் பார்த்தால் 800 கோடி ரூபாய் வரி அப்போது போடப்பட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பே வரி போட்டாகிவிட்டது. அதைத்தான் நான் அன்றைக்குச் சொல்லி இருக்கிறேன்.

அதை எடுத்துக்காட்டிய அவர், நீங்கள் வரி போடவில்லையா என்றார். நாங்கள் போடவில்லையே, எங்கே போட்டோம்? உடனே, பேருந்துக் கட்டணம், சொத்து வரி என்று சொன்னார்கள். சொத்து வரி என்பது த.மா.கா.-வும் ஆளுகிற உள்ளாட்சி மன்றங்களில் போடப்படுகிற வரியே தவிர, அது திராவிட முன்னேற்றக் கழக அரசு போடுகிற வரியல்ல. அது ஞானசேகரனுக்குத் தெரியும். இருந்தாலும் பேச்சு வேகத்திலேயோ அல்லது ஒன்று சொல்லிப் பார்ப்போம் என்றோ அவர் அன்றைக்கு விறுவிறுப்பாகவே பேசியிருக்கிறார். பேருந்துக் கட்டணம் உயர்த்தியிருக்கிறீர்கள் என்றார். அது வரி அல்ல. கட்டணம் வேறு, வரி வேறு. மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள் என்று சொன்னார்.

பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டாலும் நியாயம் நம் பக்கம் இருப்பது நன்றாகத் தெரியும். புறநகர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரை, ஆந்திராவில் ஒரு கிலோமீட்டருக்கு 30 காசு; கர்நாடகத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 24 காசு; கேரளாவில் ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு; மராட்டியத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 30 காசு; குஜராத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 25.56 காசு; ராஜஸ்தானில் ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு; ஒரிசாவில் ஒரு கிலோமீட்டருக்கு 26 காசு; அரியானாவில் 1 கிலோமீட்டருக்கு 35.36 காசு; தமிழகத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 22 காசுதான்.

முற்பகல் 11-45

விரைவுப் பேருந்துக் கட்டணம் என்று எடுத்துக்கொண்டால் ஆந்திராவில் ஒரு கிலோமீட்டருக்கு 42 காசு; கர்நாடகாவில் 29.50 காசு; கேரளாவில் ஒரு கிலோமீட்டருக்கு 34.50 காசு; மராட்டியத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 39.10 காசு; குஜராத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 35.70 காசு; ராஜஸ்தானிலே ஒரு கிலோமீட்டருக்கு 34 காசு; ஒரிசாவிலே ஒரு கிலோமீட்டருக்கு 28 காசு; அரியானாவில் 1 கிலோமீட்டருக்கு 42.20 காசு; தமிழகத்திலே ஒரு கிலோமீட்டருக்கு 25 காசு; இதையும் மறந்துவிடக் கூடாது.

அதேபோல அரிசி விலையில் என்ன உயர்த்திவிட்டோம்? (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்; பேருந்துக் கட்டணத்தைப் பற்றி மட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் இந்த அவையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 2001 வரை நாங்கள் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவே மாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது 2001-க்கு முன்பாக, 2000-லே உயர்த்தி இருக்கிறார் என்பதை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதலில் உயர்த்திய நேரத்தில் குறைக்கச் சொன்னபொழுது, இதைவிட 2001 வரையிலும் உயர்த்தமாட்டோம் என்று சொன்னேன். பிறகு அந்தக் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டது. அதை மறந்துவிட்டுப் பேசக்கூடாது; முறையல்ல.



அரிசியைப் பொறுத்தவரையில் கர்நாடகாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு கிலோ 6 ரூபாய் 40 காசு; வறுமைக் கோட்டுக்கு மேலேயுள்ளவர்களுக்கு 12 ரூபாய் 75 காசு. கேரளாவிலே 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 12 ரூபாய் 40 காசு. ஆந்திராவில் 3 ரூபாய் 50 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 12 ரூபாய் 50 காசு. மேற்கு வங்கத்தில் 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 13 ரூபாய் 95 காசு. மராட்டியத்திலே 6 ரூபாய் 40 காசு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு 13 ரூபாய் 95 காசு. தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தாலும் 3 ரூபாய் 50 காசு; வறுமைக் கோட்டுக்கு மேலேயிருந்தாலும் 3 ரூபாய் 50 காசு; இதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து வரி விதிப்பு என்று பார்த்தால், கடந்த 4 ஆண்டுகளில் வரி விதிப்பு, வரிக் குறைப்பு என்று பார்க்கும்போது, வரி விதிப்பு என்பது தாங்கக்கூடியவர்களுக்குத்தான் விதிக்கப்பட்டு இருக்கிறது; தாங்க இயலாதவர்களுக்கு, நடுத்தெரு நாராயணர்களுக்கு, சாதாரண, சாமானிய மக்களுக்கு, வர்த்தகர்களுக்கு—இவர்களுக்கெல்லாம் வரிக் குறைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு எவ்வளவு இனங்களுக்கு வரி குறைக்கப்பட்டது, எத்தனை இனங்களுக்கு வரி அறவே நீக்கப்பட்டது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது; மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1996-97-ல் 353 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1997-98-ல் 143 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1998-99-ல் 81 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1999-2000-ல் 25 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. இப்போது, 2000-2001-ல் 76 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டு, மொத்தம் 678 கோடி ரூபாய் மதிப்பிற்கு வரிச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையிலே கணக்கிட்டால், இந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 2700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிட முடியாது.

1996-97 ஆம் ஆண்டில் பருப்பு, மஞ்சள், மிளகாய், வெல்லம், கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டி போன்ற 14 பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. சமையல் எரிவாயு, டீசல் உள்ளிட்ட 30 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் பருத்தியினால் ஆன பின்னலாடைகள், மாட்டுத் தீவனம், நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள், கயிறு போன்ற 24 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. யூரியா, தேங்காய் மற்றும் கொப்பரைகள், பருத்தி, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், வணிகச் சின்னமுடைய நெய் மற்றும் வெண்ணெய் உள்ளிட்ட 34 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

(முற்பகல் 11-50)

1998-99 ஆம் ஆண்டில் சமையல் எண்ணெய், காசினிக்கீரை, கணினி மென்பொருள் உள்ளிட்ட 6 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. மசாலாப் பொடிகள், ஐஸ்கிரீம் போன்ற 8 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

1999-2000 ஆண்டில் சூரிய ஒளியிலே இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப் பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம் போன்ற 10 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. கணினிகள், தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர்கள், வணிகச் சின்னம் இட்ட ரஸ்க், வாழ்த்து அட்டைகள், சாம்பிராணி வில்லைகள் உள்ளிட்ட 54 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு, 2000-2001-ல் நித்திய கல்யாணி இலை மற்றும் வேர், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி, அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை, தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் உள்ளிட்ட 10 இனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. மொசைக் கற்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள், அனைத்து வகை மின்சக்திக் கருவிகள், உபகரணங்கள், வறுகடலை போன்ற 15 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

இந்த அளவிற்கு வரிக் குறைப்பு, முழு வரி விலக்கு தந்த கழக அரசு இந்த 5 ஆண்டுகளில் எந்தெந்த இனங்களுக்கு வரி விதித்தது என்று பார்த்தால், 1996-97 இல் மது வகையறாக்களுக்கு Vend Fee விதித்து 75 கோடி ரூபாய், அதுவரை எங்கேயோ போய்க்கொண்டிருந்த வரியை அரசு கஜானாவில் சேர்த்தோம்.



1997-98 ஆம் ஆண்டில் பான் மசாலாவிற்கு வரி விகிதம் 11 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும் பரிசுச் சீட்டுகளின்மீது வரி உயர்த்தப்பட்டது. மதுபானங்களுக்கு ஆயத் தீர்வையும், Vend Fee-யும் உயர்த்தப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளுக்கு வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணி வகைகள் மற்றும் சிகரெட்டுக்கும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கும் வரி விதிக்கப்பட்டது. கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கைப் பூங்காவில் உள்ள ஒவ்வொரு கேளிக்கை இனத்திற்கும் செல்வோர்களிடம் வசூலிக்கப்படும் தொகைமீது 20 விழுக்காடு கேளிக்கை வரியாக விதிக்கப்பட்டது. இவ்வரித் தொகையைப் பூங்காவின் உரிமையாளர் ஏற்க வேண்டும். இவ்வகையில் வரும் வருவாயில் 90 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

1999-2000 ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பான் மசாலாவிற்கு வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும் இந்தியாவிலே தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை பானங்களுக்கு 12-11-1999 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக வரி விகிதம் உயர்த்தப்பட்டது.

23-1-2000 முதல் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் நடைமுறைய எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார். அந்த விஷயம், அதை நான் ஏற்கெனவே குறித்து வைத்திருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை சொல்வது நலமென்று கருதிச் சொல்லுகிறேன். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்—விற்பனை வரியில் சமச்சீர் தளமுறை நடைமுறைப்படுத்த வேண்டி வந்த வகையில் தமிழ்நாட்டில் சில பொருட்களின்மீது வரி விகிதங்களை உயர்த்த வேண்டி வந்தன. காற்றூட்டப்பட்ட பானங்கள், ஆகாய வானூர்திகள், திரைப்படத் தயாரிப்புக்கான உபகரணங்கள், மின்னணு விளையாட்டுப் பொருட்கள், மத்தாப்பு மற்றும் பட்டாசு வகைகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், P.V.C. பொருட்கள் போன்ற 19 பொருட்கள்மீது இருந்த 11 விழுக்காடு வரி விகிதம் 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும், சந்தனக் கட்டைக்கு 8 விழுக்காடாக இருந்த வரி விகிதம் 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. சந்தன எண்ணெய்க்கு 4 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக வரி உயர்த்தப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மற்றும் தேய்ந்த, பழுதடைந்த நகைகள்மீது இருந்த 0.5 விழுக்காடு வரி விகிதம் 1 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் பீடி நீங்கலாக, சிகரெட் போன்ற ஆடம்பரப் புகையிலைப் பொருட்களுக்கு அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல 5 விழுக்காடு ஆடம்பர வரி புதியதாக விதிக்கப்பட்டது. மதுபானங்கள்மீது ஆயத் தீர்வை உயர்த்தப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை ரூ.29-ம் அதற்கு மேலும் உள்ள மென்பானங்களுக்கான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக 1-4-2000 முதல் உயர்த்தப்பட்டது.

சமையல் எண்ணெய் போன்றவற்றிற்கு எல்லாம் வரிவிகிதம் ஏற்றப்படவில்லை. இதில் சமச்சீர் வரியை தமிழக அரசு ஏற்று ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்தும் எந்தப் பொருள்கள் மீதும் வரி போடப்படவில்லை, மாறாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது அல்லது குறைக்கப்பட்டுள்ளது என்பதைத்தான் நான் சொன்ன இந்தப் புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன.

முற்பகல் 11-55

இப்படி வரியைக் குறைக்கின்றீர்கள், வரியை விலக்கிவிடுகின்றீர்கள், பற்றாக்குறை இருப்பதையும் காட்டுகின்றீர்கள், இதை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று அன்றைக்கு நம்முடைய நண்பர் டாக்டர் இராமன் அவர்கள் கேட்டார்கள். மிகுந்த அக்கறையோடு, இந்த அரசின்மீதுள்ள கவலையோடு அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்காக நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 665 கோடி ரூபாயாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறீர்களே பற்றாக்குறை, இதைச் சரிக்கட்ட என்ன செய்யப் போகிறீர்கள், சில நாள் கழித்து வரி போட்டு மக்களை நசுக்கப் போகிறீர்களா என்று கேட்டார். அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை. ஏனென்றால் கடந்த காலத்தில் நாங்கள் போட்டிருக்கிற வரிகள் மக்களை நசுக்குகின்ற வரிகள் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாகவே உணர்வார்கள்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை 790 கோடியாக இருக்கும் என்று நான் படித்தபோது இதே கேள்விதான் கேட்கப்பட்டது. அப்போது 790 கோடி ரூபாய் பற்றாக்குறை என்கிறீர்களே, எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கேட்கப்பட்டது. ஆனால் அந்தப் பற்றாக்குறை சரிக்கட்டப்பட்டு 159.90 கோடியாக அது குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிவீர்கள். இது எப்படி இயன்றது என்றால் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை சந்தன மரங்களை ஏலம் நடத்துவதன் மூலமாக 36 கோடி ரூபாய் மாத்திரமே வருவாய் கிடைக்குமென்ற மதிப்பீட்டிற்கு மாறாக 77.7 கோடி



ரூபாய் சந்தன மர ஏலத்திலே கிடைத்திருக்கிறது. வரிகள் மூலமாக 260 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு பற்றாக்குறையை சரிக்கட்ட என்ன வழி என்று மாமன்றத்திலே கேட்கப்பட்டது, எதிர்க்கட்சி உறுப்பினர்களால். நீதிமன்றங்களில் நிலுவையிலே உள்ள வழக்குகளில் வருவாய் வசூல் சட்டம் ஆகியவற்றால் ரூபாய் 6,327 கோடி பல்வேறு வரிகளில் நிலுவையாக உள்ளது. அரசுக்கு வர வேண்டிய வரி வசூலில் நிலுவை 6,327 கோடி ரூபாய். இந்த நிலுவைத் தொகையை வசூலிப்பதில் முனைப்பான நடவடிக்கை எடுப்பதன் மூலமாகக் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

11-வது நிதி கமிஷன் அறிக்கை வரும் ஜூன் மாதத்திற்குப் பிறகுதான் தாக்கல் செய்யப்பட உள்ளது. அது தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் மாநிலங்களுக்கு எவ்வளவு கூடுதல் நிதி கிடைக்கும் என்று தெரியும். அப்போது தமிழகத்திற்குக் கூடுதலாக நிதி கிடைக்கும். அதனைக் கொண்டு இந்தப் பற்றாக்குறையை ஓரளவுக்குக் குறைக்க முடியும் என்று நான் கருதுகின்றேன். மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு மொத்த வரி வருவாயிலே 29 சதவீதம் பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசியல் சட்டத் திருத்தம் வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட உள்ளது. அத்திருத்தம் கொண்டுவரப்பட்ட பிறகு அதன் காரணமாகவும் தமிழக அரசுக்குக் கூடுதல் நிதி வர வாய்ப்புள்ளது. அதனாலும் நமது பற்றாக்குறையை ஓரளவிற்குச் சரிக்கட்ட இயலும்.

தமிழ்நாட்டில் நிலுவையிலே உள்ள வணிக வரியைக் கூடுதலாக வசூலிக்க கடும் முயற்சிகள் மேற்கொண்டு, அதன் காரணமாகவும் இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இயலும்.

மத்திய அரசு அண்மையில் ரேஷன் அரிசி விலையை உயர்த்தியபோது தமிழக அரசு அந்த உயர்வை மக்கள் மீது திணிக்காமல் 300 கோடி ரூபாய் மானியமாக அந்த விலை உயர்வு காரணமாக தர ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது அனைத்து மாநிலங்களும், மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி விலை உயர்த்தப்பட்டதைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசோடு வாதிட்டுக்கொண்டு இருக்கின்றன. அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமேயானால், தமிழக அரசு தருவதற்கு ஒப்புக்கொண்ட 300 கோடி ரூபாய் மானியம் மிச்சப்படுவதற்கு நமக்கு வாய்ப்புள்ளது. அதன் காரணமாகவும் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவாதத்தில் பேசிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் செல்வி ராணி அவர்கள் மொத்த வருவாயில் 10 விழுக்காடு மட்டுமே மக்களுக்கு நேரடியாகச் செலவு செய்யப்படுகிறது என்று

குறிப்பிட்டார்கள். அது தவறான கருத்து. 2000-2001-க்கு மதிப்பிடப்பட்டுள்ள மாநிலத்தின் மொத்த வருவாய் 18,406 கோடி ரூபாய். அதிலே 10 விழுக்காடு என்பது, செல்வி ராணி அவர்கள் சொன்னதைப்போல, 1,840 கோடி ரூபாய்தான். ஆனால் வருவாய்க் கணக்கிலே பொது விநியோகத் திட்டத்திற்கு 1,700 கோடி, முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கு 200 கோடி, இலவச வேட்டி, சேலை திட்டத்திற்கு 104 கோடி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழை திருமணத் திட்டத்திற்கு 50 கோடி, நமக்கு நாமே திட்டத்திற்கு 30 கோடி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 75 கோடி, இலவச மின்சாரத்திற்காக அரசு தரும் 250 கோடி, மாணவர்களுக்கான பஸ் பாஸ் 80 கோடி, இப்படி மக்களுக்கு நேரடியாகச் செலவு செய்யப்படும் திட்டங்களுக்கு 4,326 கோடி ரூபாய் என்கிறபோது 10 சதவீதம் என்று கூறியது தவறான தகவல் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இது 10 விழுக்காடு அல்ல; 23.50 விழுக்காடாகும். மேலும் வெளிச்சந்தைக் கடன், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன், மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற கடன் ஆகியவற்றின் மூலம் குடிநீர்த் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு 1,867 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, உறுப்பினர் பெற்ற தகவல் தவறானது என்று மீண்டும் ஒரு முறை தெரிவிக்க விரும்புகின்றேன்.

நண்பகல் 12-00

நம்முடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கும் சம்பளம் குறித்த செலவு இதிலே குறிப்பிடப்படவில்லை, எல்லாப் புத்தகங்களையும் புரட்டிப் பார்த்துவிட்டேன் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் புரட்டிப் பார்க்காத புத்தகம் ஒன்றும் இருக்கிறது. இந்தப் புத்தகத்தை அவர்கள் புரட்டிப் பார்த்திருந்தால் உண்மை நிலையைத் தெரிந்திருக்க முடியும். நிதிநிலைக் குறிப்பின், வரவு செலவுத் திட்ட வெளியீடு 72 Appendix to the Budget Memorandum—அதிலே அரசு ஊழியர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு அளிக்கும் சம்பளம், Revenue Account-லே எவ்வளவு என்கின்ற விவரம் எல்லாம் இருக்கிறது. Revenue Account-லே மாத்திரம் ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கு நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், இல்லவே இல்லை என்று சொன்னார். இவ்வளவு பெரிய தொகையை எப்படி விட்டுவிட முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, அரசு



அலுவலர்களுக்கு அளிக்கின்ற சம்பளச் செலவு 8,487 கோடி ரூபாய், ஓய்வூதியப் பயன்களுக்கான செலவு 2,420 கோடி ரூபாய். இந்த இரண்டு இனங்கள் மாநிலத்தின் மொத்த வருவாயில் 66.2 விழுக்காடு. மாநிலத்தின் வரி மற்றும் வரியல்லாத Tax and Non-Tax Revenues—வருவாயில் இது 103 விழுக்காடாகும் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதிகச் செலவு, அதிகமாக அரசு ஊழியர்களுக்குத் தந்துவிடுகிறோம் என்ற அந்தக் குற்றச்சாட்டுக்காக அல்ல. திட்டம் என்றால், நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அரசு ஊழியர்களுடைய சம்பளமும் சேர்த்துத்தான் திட்டச் செலவு. அரசு. ஊழியர்கள் அல்லாமல் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. ஆகவே, திட்டத்திற்காக, ஒரு கிணறு வெட்ட, ஒரு குளம் வெட்ட, ஒரு ஏரி வெட்ட இவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்கிறோம் என்றால் அதை வெட்டுவதற்காகப் பயன்படுகின்ற, பணியாற்றுகின்ற அந்த ஊழியர்களுக்குத் தருகின்ற சம்பளத்தையும் சேர்த்துத்தான் திட்டச் செலவு. எனவே, அதைத் தனியாகப் பிரித்துப் பார்த்து, ஆகா! அரசு ஊழியர்கள் அரசாங்க வருமானத்திலே பாதிக்கு மேலே எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று கூறுவது சரியல்ல என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இத்தகைய செலவுகளுக்கு இடையே இந்த நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்பதை Planning Commission Deputy Chairman Mr. K.C. Pant அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இது Hindu பத்திரிகையில் 31-3-2000 அன்று வெளிவந்த செய்தி :

"Concerned over the tendency of the States to make exaggerated projections of revenue mobilisation figures to get enhanced Central assistance and to include populist schemes, the Deputy Chairman of the Planning Commission, Mr.K.C. Pant has written to most of the Chief Ministers to correct the situation. Notable exceptions to this communication are the Tamil Nadu Chief Minister Mr. M. Karunanidhi, the Karnataka Chief Minister Mr. S.M. Krishna and Gujarat Chief Minister Mr. Keshubhai Patel."

அதாவது "மக்களைக் கவரும் மலிவான திட்டங்களை அறிவித்திடவும், மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியுதவியைப் பெற்றிடவும், மாநில அரசுகள் நிதி ஆதாரங்களைத் திரட்டி உருவாக்குவதாகச் சொல்லி மிகைப்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களை அளித்துவரும் போக்கைக் கண்டு மிகுந்த கவலை கொண்டுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத்

தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்கள் பெரும்பாலான முதலமைச்சர்களுக்கு அந்தப் போக்கைக் கைவிட்டு திருத்திக்கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதியுள்ளார்கள். அப்படிக் கடிதம் எழுதப்பட்ட முதலமைச்சர்களுக்கு விதிவிலக்கானவர்கள் தமிழக முதல்வர் மு. கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக முதல்வர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா, குஜராத் முதல்வர் திரு. கேசுபாய் பட்டேல் என்று 'Hindu' பத்திரிகையிலே ஒரு செய்தி.

*பிற்பகல் 12-05*

அதைத் தொடர்ந்து, Economic and Political Weekly, *12-2-2000*, அதிலே ஒரு கட்டுரைப் பகுதியில்,

"Overall, Tamil Nadu could be considered as one State which is most successful in reducing regional disparities in economic and social development even when there was substantial variation in the natural endowments in different parts of the State. This was achieved by a combination of public policies and private initiatives." அதாவது, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயுள்ள இயற்கை வளத்தில் மிகுந்த வேறுபாடு காணப்பட்டாலும்கூட, அவற்றிற்கிடையேயுள்ள பொருளாதார மற்றும் சமூக வேறுபாடுகளைக் குறைப்பதில் பெருவெற்றி கண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் முயற்சிகளையும், பொதுமக்களுக்கான அரசின் கொள்கைகளையும் ஒருங்கிணைத்ததன் காரணமாக, இந்த வெற்றி சாத்தியமாயிற்று என்று Economic and Political Weekly என்கின்ற ஒரு பிரபலமான பத்திரிகை குறிப்பு எழுதியிருக்கின்றது.

இதிலே, இந்த அறிக்கை பற்றி உரையாற்றிய நம்முடைய அருமை நண்பர் அழகிரி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள், வெளியிலேயிருந்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இங்கே அவருடைய வாரிசாக இருந்து பேசிக்கொண்டிருக்கிற சுந்தரம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், தம்பி கணேசன் அவர்கள், என்னுடைய நீண்டநாள் நெருங்கிய நண்பர் சுதர்சனம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் உரையாற்றிய சந்தானம் அவர்கள் (குறுக்கீடு) Forward Block கட்சியைச் சேர்ந்த சந்தானம் அவர்கள், இரண்டு பேருமே பாட்டாளிகள்தான்— இவர்களெல்லாம் விவசாயிகளுக்கு ஒன்றுமேயில்லை, ஒன்றுமேயில்லை என்று சொன்னார்கள். நான்கூட, சந்தானம் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். யானைப் பசிக்கு சோளப்பொரி மாதிரியாகத்தான் விவசாயிகளுக்குத் திட்டம் இருக்கிறது என்று அவர் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அதை அவர் சொன்னாரோ, இல்லை, அவர் பெயரிலே போட வேண்டுமென்று போட்டார்களோ தெரியாது; பத்திரிகை வந்ததும் எடுத்துவைத்துப் படித்துப் பார்த்தேன். சரி, சோளப்பொரியாவது போட்டார்களே என்று திருப்தி அடைகிறவர்களும் சிலபேர் இருப்பார்கள்.



இதிலே, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், சாதாரண ஏழையெளிய மக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாத, கடந்தகால நிதிநிலை அறிக்கையின் மலிவுப் பதிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையை முதலமைச்சர் கருணாநிதி சமர்ப்பித்திருப்பது என்பது, தமிழகத்தின் சாபக்கேடு" என்று சொன்னார்கள். இங்கே சுந்தரமும் அதையே சொன்னார். கிட்டத்தட்ட, அதே வார்த்தைகள் இல்லாவிட்டாலும், மலிவுப் பதிப்பு போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவருக்கு ஒரு உறுதி, கோபமாகப் பேச வேண்டும் என்கின்ற ஓர் ஆர்வம்; கோபமாகப் பேச வேண்டும் என்றாவது காட்டிக்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் அவருக்கு. முயற்சி பண்ணுகிறார்; வரமாட்டேன் என்கிறது. (சிரிப்பு) ஏன் தெரியுமா? என் மேலேயோ அல்லது தி.மு.க. மேலேயோ, தி.மு.க. ஆட்சி மேலேயோ உண்மையிலேயே வெறுப்பு இருந்தால்தானே கோபம் வரும்? ஏனென்றால், இதே இடத்திலே உட்கார்ந்து, *1996-97*-லே, "காமராஜர் ஆட்சி, காமராஜர் ஆட்சி என்கிறோம்; இப்போது நடப்பதே காமராஜர் ஆட்சிதான்" என்று சொன்னார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, முதலிலே நீங்கள் *1996*-லே ஆட்சிக்கு வந்தபோது ஒரு வருடம் நன்றாக இருந்தது. உண்மையிலேயே நான் பாராட்டினேன். (சிரிப்பு). அந்த ஓராண்டு ஆட்சியை வைத்து, இது காமராஜர் ஆட்சி போல இருக்கிறது என்று சொன்னேன். ஆனால், அப்பொழுதே நான் வாபஸ் வாங்கிக் கொண்டேன். இது காமராஜர் ஆட்சி இல்லை, மக்கள் விரோத அரசு என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வெளிப்படையாகவே சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நீங்கள் தொடர்ந்து சொல்லாமல், வாபஸ் வாங்கிக்கொண்டதற்கும் நன்றி. தொடர்ந்து சொன்னால்தான் எங்களுக்கு ஆபத்து. எனவே, ஒரு வருடம் வரையிலேயும் நல்ல ஆட்சியாக இருந்தது; அதன்பின்பு மோசமான ஆட்சியாகப் போய்விட்டது என்பது எதிர்க்கட்சித் தலைவருடைய கணிப்பு. நான் யாரையும் அப்படிப் பார்ப்பதில்லை. நீங்கள் வேறுபாட்டோடு பார்க்கிறீர்கள். அல்லது, வெறுப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையிலும் யாரையும் அப்படிப் பார்ப்பதற்கு எனக்கு மனது இல்லை. நான் பழகிவிட்டேன் என்றால், விரோதியானால்கூட அந்தப் பழகிய பாசம் என்னைவிட்டுப் போகாது. அது என்னுடைய தனிக்குணம்.

*பிற்பகல் 12-10*

நான் சொல்கிறேன் என்று தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மேற்கு வங்காளத்தில், C.P.M., C.P.I. என்று இரண்டு கூட்டணிக் கட்சிகள் இருக்கின்றன. ஆனால், அண்மையில் அவர்களுக்குள்ளே ஒரு சின்னத் தகராறு வந்தது. இப்போது என்ன ஆனது என்று தெரியாது எனக்கு. இராஜ்ய சபாவிற்கு 4 இடங்கள் காலியானது. அவற்றிலே 3 இடங்கள் C.P.M. எடுத்துக்கொண்டு, ஒரு இடத்தை C.P.I.-க்குத் தர வேண்டுமென்று கேட்டார்கள். நியாயமான கோரிக்கைதான். ஏனென்றால், ரொம்ப காலமான நட்பு; ரொம்ப காலமாக C.P.M., C.P.I. இரண்டு பேருமே அங்கே இருக்கிறார்கள். அந்த 4 இடங்களிலே ஒரு இடம் எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்டார்கள். C.P.M—ஜோதிபாசு அவர்கள் தலைமையிலேயுள்ள அந்த ஆளுங்கட்சி, அதை மறுத்துவிட்டது. அதனாலே, ஒரு மன வேறுபாடு ஏற்பட்டு, நாங்கள் வெளியிலே இருந்து ஆதரிக்கிறோம் என்று சொல்லி, வெளியே வரப்போவதாக ஒரு செய்தி முன்பு வந்தது. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், தயவுசெய்து. ஓர் இடத்திற்காக, கூட்டணி சேர்ந்து, பிரியக்கூடிய அளவிற்கு ஆளானார்கள். ஆனால், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சோதனை வந்தது, டெல்லியிலே. "நீங்கள் காங்கிரஸ் கட்சியிலே இருந்து, இராஜ்ய சபாவிற்கு வந்துவிட்டு, எதிர்த்து நடக்கிறீர்கள்; அதனாலே உங்களையெல்லாம் விலக்கப்போகிறோம்" என்ற ஒரு செய்தி வந்தது. சோதனை வந்தவுடன் வேறு வழியில்லை; இவர்கள் எல்லாம் விலகியாக வேண்டும்; அல்லது விலக்கப்பட்டாக வேண்டும் என்று செய்தி வந்தது. நான் உடனே, தலைவர் மூப்பனாருக்கு இங்கேயிருந்து டெல்லிக்கு Telephone செய்து, 'கவலைப்படாதீர்கள்; அந்த 3 இடங்களிலும், எங்களுடைய ஓட்டுகளைக் கொடுத்து நாங்கள் நிரப்புகிறோம்' என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனை எல்லாம் ஒன்றும் வரவில்லை. யாரோ ஒருவர் மனு எழுதினார். இவர்கள் தமிழ் மாநில காங்கிரசா, காங்கிரசா என்று ஒரு Petition போட்டார். உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'ஏன் இந்தமாதிரியெல்லாம் உங்களுக்கு ஒரு வார்த்தை வர வேண்டும்? நீங்கள் இராஜினாமா செய்துவிடுங்கள்; நாங்கள் அந்த இடங்களை அப்படியே கொடுத்துவிடுகிறோம்; அது எங்களுடைய இடம்தான்; கொடுத்துவிடுகிறோம்' என்று சொன்னார்கள். அதைக்கூட நான் இப்போது முதலமைச்சர் அவர்களுக்கு வருத்தம் வந்தாலும் பரவாயில்லை என்பதற்காக ஓர் உண்மையை வெளியே சொல்லித்தான் ஆகவேண்டும். தலைவர் மூப்பனார் அவர்களை நாங்கள் எல்லாம் சேர்ந்து கட்டாயப்படுத்தி, 'நீங்கள் உங்கள் இடத்திலே நில்லுங்கள்' என்று திரு. சிதம்பரம் உட்பட அத்தனைபேரும் கட்டாயப்படுத்தினோம். அப்போது சொன்னார்: "நான் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தயவால் நாடாளுமன்ற உறுப்பினராக வர விரும்பவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எனக்கு அந்த இடம் வேண்டாம்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, பிறகு, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓட்டால்தான் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகி வந்தார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இது, மூப்பனார் அவர்களை, அவருடைய கட்சியினுடைய முன்னோடிகளை அவமானப்படுத்துகிற காரியமாகும். அவர் மாத்திரம் தி.மு.க. சார்பில் வரமாட்டார்; பீட்டர் அல்போன்ஸ் வரலாம்; ஜெயந்தி நடராஜன் வரலாம்; (சிரிப்பு) அவருக்குள்ள மான உணர்ச்சி, இவர்களுக்கெல்லாம் இல்லையா என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யோசிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த தொடர்ந்த ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** போதும், நிறுத்திக் கொள்ளுங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கூட்டணி என்று சொல்கிறபோது, கொடுக்கல், வாங்கல் இருக்கலாம். அதைப்போய் இப்போது அசிங்கமாகச் சொல்வது, 'நான் கொடுத்த மிட்டாயைக் கக்கு' என்று சொல்வதுமாதிரி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மிட்டாயைக் கக்கு என்று சொல்லவில்லை; முழுக்க முழுங்குங்கள் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேற்கு வங்காளத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். திரு. ஜோதிபாசு அவர்களும், C.P.I. கட்சியினுடைய தலைமையும் பேசி, அந்தப் பிரச்சினைகள் எல்லாம் சுமுகமாக முடிந்துவிட்டன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதனால்தான் நான் பேசும்போது ஜாக்கிரதையாகச் சொன்னேன். அப்போது ஆரம்பமானது ஒரு தகராறு; இப்போது முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன், ஜாக்கிரதையாக. ஏனென்றால், அரசியலிலே எதுவும் நடக்கலாம் என்பது எனக்குத் தெரியும்.

விவசாயிகளினுடைய முன்னேற்றத்திற்கு, நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே இல்லை என்ற விவாதத்திற்கு, நான் கேட்கிறேன்; விவசாயிகளை எல்லாம், நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுத் தயாரித்தோமே, இது விவசாயிகளை அலட்சியப்படுத்தியதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வேளாண்மை, முந்திரி சாகுபடித் திட்டம், பாசனம், விவசாயிகளினுடைய நலன் என்ற 4 தலைப்புகளில், பக்கம் 12 முதல் பக்கம் 17 வரை, 5 பக்கங்கள் விவசாயிகளுக்காகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது, நிதிநிலை அறிக்கையில். விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் 13 சலுகைகள், அவர்களுடைய முறையீடுகளுக்கு, அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஏற்கப்பட்டு, அவை வழங்கப்பட்டு, விவசாயிகள் அளித்த மற்ற ஆலோசனைகளும், கோரிக்கைகளும் பரிசீலித்து உரிய முடிவு எடுக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்க, உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேளாண் பொருட்களைச் சேமித்து வைக்க, குளிர்பதனக் கூடங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் அறுவடைக்கான, சிமென்ட் தளங்கள் அமைக்கப்படும் என்றும், அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



*பிற்பகல் 12-15*

விவசாயிகளுக்கு சேமிப்போடு கூடிய ஈட்டுறுதித் திட்டம் வகுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. பாசன நீரைப் பயன்படுத்த குழுக்கள் அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களை மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்தும் ஏற்கப்பட்டிருக்கிறது.

12-3-2000 அன்று நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற விவசாயிகளுடைய கலந்துரையாடலின்போதுதான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயிகளுடைய சங்கத் தலைவர் வீரையன் பேசும்போது குறிப்பிட்டார்—அந்தப் பேச்சு அப்படியே record-ஆகி இருக்கிறது—அவர் சொன்னார், "இந்தக் கூட்டத்தினுடைய பிரதிபலிப்பாக, வரவு-செலவுத் திட்டத்திலே முதலமைச்சர் எதை அறிவிப்பார் என்று தமிழகமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த, அபராத வட்டியை முழுவதும் தள்ளுபடி செய்து, அசலையும், வட்டியையும் திருப்பிக் கொடுங்கள் என்று சொன்னாலே, பெரிய விடுதலை என்று விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; இம்மாதம் 24 ஆம் தேதி, அந்த அறிவிப்பு வரும் என்று எதிர்பார்ப்போடு தமிழகம் காத்திருக்கிறது என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்" என்று வீரையன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய விவசாய சங்கத் தலைவர் அந்தக் கூட்டத்திலே, அன்றைக்குப் பேசியிருக்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒவ்வொரு Point-க்கும் எழுந்து நிற்பது முறையல்ல. முதலமைச்சர் சொல்லியிருக்கிறார், இந்தப் பேச்சு record ஆகியிருக்கிறது என்று சொல்லித்தான் படிக்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள், வீரையன் அவர்களால் பேசப்பட்ட ஒரு கருத்தை மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, அங்கே ஒரு மனு கொடுக்கப்பட்டு, அந்த மனுவிலே, 5 ஏக்கரா வரையிலேயுள்ள, விவசாயிகளுடைய கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், அதற்கு மேல் இருக்கக்கூடியவர்களுக்கு, குறைந்தபட்சம் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுதான் அந்த மனுவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அன்றைக்குப் போதுமான நேரம்

இல்லாத காரணத்தினாலே, அந்தப் பிரச்சினையை, எங்களுடைய மனுவிலே நாங்கள் விளக்கியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எப்பொழுதுமே, ஒரு கோரிக்கை வைத்தால், அந்தக் கோரிக்கை முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதல்ல. இதையாவது நிறைவேற்றுங்கள் என்பதுதான் கோரிக்கையினுடைய முடிவாக இருக்கும். எனவே, வீரையன் அவர்கள் இதையாவது நிறைவேற்றுங்கள் என்கின்ற அளவிலேதான், அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்டார். நிலைமை அதுதான். அதற்குமேல் வட்டியைத் தள்ளுபடி செய்ய முடியாது. NABARD அதை ஏற்றுக்கொள்ளாது. NABARD நிறுவனத்தினுடைய agreement. நம்முடைய சுப்பராயன்கூடச் சொன்னார்கள், அன்றைக்கு ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த ஆட்சியிலேதான், "Under Development Action Plan, Memorandum of Understanding (MoU) was entered into by the State Government and the Apex Bank with NABARD on 24-12-1994 which contains several action points. One of the action points put forth under recovery performance reads as follows:-

"It also notes that NABARD's support will not be available to DCC Banks, TNSCB in the State, if any interest loan waiver is announced across the Board or any steps interfering with the recovery problem of Co-operative banks are initiated." இப்படி ஒரு ஒப்பந்தமே, கடந்த கால அரசால் போடப்பட்டு உள்ளது. இதற்குமேல் நான் என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான், அபராத வட்டியை மாத்திரமல்லாமல், சென்ற ஆண்டு 6.25 சதவிகிதம் அரசின் சார்பில் அந்தக் கடன் வட்டியிலே, அரசின் சார்பிலே ஊக்குவிப்புத் தொகையாக, அதைக் கட்டிவிட்டால், தருவது என்று அவர்களுக்குக் கொடுத்தோம். இதை இந்த ஆண்டு 7 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். உதாரணமாக, அது எப்படிச் செயல்படும் என்று கேட்டால், 1,000 ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள், அதற்கு 150 ரூபாய் வட்டி என்றால், நாம் தருவது 70 ரூபாய், அரசாங்கம் 70 ரூபாய் வரை கட்டிவிடும். 80 ரூபாயை விவசாயி கட்டினால் போதும். அதுதான் இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கிற ஏற்பாடு. இது பாக்கி மாநிலங்களிலேயெல்லாம் கடைப்பிடிக்கப்பட்டதா என்றால், கிடையாது. கேரளாவிலே, குறிப்பிட்ட நாளுக்குள் வட்டியையும், அசலையும் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு, அபராத வட்டி மாத்திரம்தான் தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்கு வங்கத்திலே அதுவும் இல்லை.



அபராத வட்டிகூட அங்கே தள்ளுபடி கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, நாம் இந்த அளவிற்குச் செய்திருப்பது பெரும் இழப்பிற்கு இடையே, பெரும் சங்கடத்திற்கு இடையே, சிரமத்திற்கு இடையேதான் செய்து இருக்கிறோம். இன்னொன்று. விவசாயிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதை கட்டணம்—Track Rent—இரத்து செய்யப்பட்டுவிட்டது. கரும்பு விவசாயிகளுக்கு, தனியார் கரும்பு ஆலை தர வேண்டிய கடன் பாக்கியை விரைவில் தீர்க்க ஆலை அதிபர்களை அழைத்துப் பேசுவோம் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு, பயிர் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும் என்பது விவசாயிகளுக்குச் செய்யப்படும் சாதனையா, அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன்.

பிற்பகல் 12-20

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் மடைவிட்டு மடை மூலம் பாசன வசதித் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

விவசாயத் தொழிலாளிகளுடைய நலனுக்காகத் தனியாக விவசாயத் தொழிலாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதைப்போலவே, நெசவாளர்களுக்கான நன்மைகள், திட்டங்கள் இவையும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், உங்களுக்கு அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதியில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் முந்திரி சாகுபடிக்கு ஏற்ற, அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப் பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலே முந்திரி சாகுபடி செய்ய முன்வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததையொட்டி, குத்தகைக்கான வழிமுறைகள் பற்றி சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சில கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இப்படிக் கேள்விகள் எழுப்புவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஏதோ வேண்டியவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காகத்தான் இந்த முந்திரி

சாகுபடித் திட்டம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அதெல்லாம் அந்தக் காலத்து கதைகள். உங்களுக்குத் தெரியும், மாமல்லபுரம் பழைய சாலையிலே, பையனூர் கிராமத்திலே தமது பங்களாவிற்குப் பக்கத்திலே சுமார் 2½ ஏக்கர் அரசு நிலத்தை திருமதி சசிகலா ஆக்கிரமிப்பு செய்து அந்த நிலத்திலே சுமார் 1 ஏக்கர் 25 சென்ட் பரப்பளவிலே அமைந்துள்ள குளத்தை—அந்தக் குளம் கிராமப் பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் குடிநீருக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த குளம்—அந்தக் குளத்தை ஆழப்படுத்தி நீச்சல் குளமாக மாற்றி அமைத்துக் கட்டுவதற்காக அதை ஆக்கிரமித்தார்கள். அந்த ஆக்கிரமிப்புகள், கழக ஆட்சியில் 11-2-1997 அன்று அகற்றப்பட்டு, குளத்தை பையனூர் கிராம பொதுமக்களும், கால்நடைகளும் பயன்படுத்துவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழிப்பள்ளம் கிராமத்தில் திருமதி ஜே. இளவரசி என்பவர், ஓடை, மடுவு மற்றும் குளம் என்று வகைப்பாடு செய்யப்பட்டிருந்த அரசுக்குச் சொந்தமான சுமார் ஆறரை ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து, முள்வேலியும், மதில் சுவரும் அமைத்திருந்தார். இந்த ஆக்கிரமிப்புகளும் 11-2-1997 அன்று அகற்றப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில், அதிலிவாக்கம் மற்றும் மேனகாபுரம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான 220 ஏக்கர் நிலத்தை "மெடோ அக்ரோ பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற தனியார் நிறுவனத்தின் சார்பில் கிருஷ்ணகுமார் என்பவர், பப்பாளி மரங்கள் வளர்ப்பதற்கும், அதன் அடிப்படையில் தொடங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், நில ஒப்படை கோரினார். அவை அனைத்தும் மேய்க்கால் புறம்போக்கு மற்றும் புஞ்சை அனாதீன நிலங்கள் ஆகும். அதில் 110 ஏக்கர் பரப்பளவில் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ், யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. அந்த மரங்களின் மதிப்பு 31 இலட்சத்து 25 ஆயிரத்து 963 ரூபாய். அந்த நிலங்கள் அனைத்தும் reserve forest-ஐ ஒட்டி அமைந்துள்ளபோதிலும், கிருஷ்ணகுமார் வசதி படைத்தவர் அல்ல என்பதால் நிலங்களை ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலித்துக்கொண்டு ஒப்படை செய்யவும், அந்நிலங்கள் சென்னையின் புறநகர்ப் பகுதியில் தடையாணை எல்லைக்குள் வருவதால், அதற்குரிய தடையாணையை விலக்கி ஒப்படை செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது. 110 ஏக்கர்



நிலப்பரப்பிலிருந்த சுமார் 31 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள யூகலிப்டஸ் மரங்களை வெட்டி எடுத்துவிட்டு, 200 ஏக்கருக்கு மேற்பட்ட அளவிற்கு நிலம் வழங்குவதால், தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டப் பார்வைக்குள் வரும் வாய்ப்புள்ளது என்ற நில நிர்வாக ஆணையாளரின் எச்சரிக்கையையும் ஒதுக்கிவிட்டு, அரசு கொள்கையின்படி தனிப்பட்ட நபர் மற்றும் நிறுவனங்களுக்கு பெரும் அளவிலான நிலத்தை ஒப்படை வழங்க இயலாது, குத்தகை அடிப்படையில்தான் நிலங்கள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற அரசு ஆணையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இரண்டு மடங்கு மார்க்கெட் விலை வசூல் செய்துகொண்டு, ஒப்படை செய்யலாம் என்று அ.தி.மு.க. அரசு 25-2-1995 அன்று ஆணை பிறப்பித்தது. கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த நில மோசடியை ஆய்வு செய்து, அதி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கிய நில ஒப்படை ஆணையை 31-12-1996 அன்று இரத்து செய்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நாங்கள் இப்போது அறிவித்திருக்கிற முந்திரி சாகுபடித் திட்டம், இது போன்ற காரியங்களுக்காக நிச்சயமாக அல்ல. அரசுக்குச் சொந்தமான நிலம் குத்தகைக்கு விடப்படுவதற்கு என்று ஏற்கெனவே விதிமுறைகள் வகுக்கப்பட்டு செயல்பாட்டிலே இருக்கின்றன. அதன்படி நிலத்தின் market விலையை அனுசரித்து அதன் அடிப்படையில் குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்படும். அந்த அடிப்படையிலோ அல்லது சாகுபடிக்கு என்று தேர்வு செய்யப்படும் நிலங்களின் market விலையை அனுசரித்து, உயர்ந்தபட்ச குத்தகைத் தொகை நிர்ணயம் செய்த பிறகு, எவ்வித ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாக tender அடிப்படையிலே அரசுக்குச் சொந்தமான நிலங்களை முந்திரி சாகுபடிக்கு குத்தகைக்காக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது வேண்டியவர்களுக்காக போடப்பட்ட திட்டமல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

கோவை குண்டுவெடிப்பு சம்பந்தமாக சுப்பராயன் அவர்கள் இங்கே நேற்றையதினம் பேசினார்கள். அங்கே இரண்டு சம்பவங்கள். நவம்பரிலே ஒரு சம்பவம். பிறகு பிப்ரவரியிலே ஒரு சம்பவம். இரண்டு சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. நீதியரசர் கோகுலகிருஷ்ணன் விசாரணை கமிஷன் பரிந்துரைத்த நிவாரண உதவிகள் என்னவாயிற்று என்பதைப்போல, அது விரைவில் தரப்படுமா என்ற கருத்துப்பட சுப்பராயன் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். கோகுலகிருஷ்ணனுடைய அறிக்கைகள், இரண்டு

இடைக்கால அறிக்கைகள் இரண்டு சம்பவங்களுக்காகப் பெறப்பட்டிருக்கின்றன. ஒரு இடைக்கால அறிக்கை நவம்பர், டிசம்பர் சம்பவத்திற்காக. இன்னொரு இடைக்கால அறிக்கை பிப்ரவரியில் திரு. அத்வானி வந்தபொழுது நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்காக என்று இரண்டு அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன. இரண்டும் இடைக்கால அறிக்கைகள். இப்பொழுது முழுமையான அறிக்கைகள் தரப்பட்டுவிட்டன. அந்த இடைக்கால அறிக்கைகளையொட்டி எடுத்துள்ள நடவடிக்கைகள் — இறந்தவர்களுடைய குடும்பத்திற்குத் தலா ரூ.2 லட்சம் வீதம் தரப்பட்ட நிதியுதவி ரூ. 52 லட்சம். காயமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 2.90 லட்சம். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்காக அரசு ஏற்றுக்கொண்ட சிகிச்சைச் செலவு ரூ.3.69 லட்சம். மசூதி மற்றும் கோயில்கள் சேதமடைந்ததற்கு தரப்பட்ட நிதியுதவி ரூ.1.67 லட்சம். சொத்து சேதமுற்றோருக்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ.164 லட்சம். மொத்தம் ரூ. 2,24,26,000. முதல் இடைக்கால அறிக்கையின்படி நவம்பர் மாத, டிசம்பர் மாத நிகழ்ச்சிக்காக.

அடுத்து, 14-2-1998 அன்று கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு சம்பந்தமாக தரப்பட்ட இடைக்கால அறிக்கையின்படி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் தரப்பட்ட நிதியுதவி ரூ.1.06 கோடி. காயமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.31.80 லட்சம். தனியார் மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றவர்களுக்காக அரசு ஏற்றுக்கொண்ட சிகிச்சைச் செலவு ரூ. 22.92 லட்சம். மசூதி/கோயில்கள் சேதமடைந்ததற்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ. 3.03 லட்சம். சொத்து சேதமுற்றோருக்குத் தரப்பட்ட நிதியுதவி ரூ. 1.12 கோடி. மொத்தம் ரூ.2,75,75,000. இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ.5 கோடி தரப்பட்டிருக்கிறது.

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து விசாரணைக்காக அமைக்கப்பட்ட நீதியரசர் கோகுலகிருஷ்ணன் விசாரணை ஆணையம் தனது அறிக்கையினை அரசுக்கு 31-1-2000 அன்று முழுமையாகச் சமர்ப்பித்து விட்டது. இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் சட்டப் பேரவையில் வைக்கப்பட்டு, இது குறித்து ஆணைகளும் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்தின்போது எழுப்பிய பிரச்சினை குண்டுவெடிப்பில் கிட்டத்தட்ட ஒருசில குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்தான், சொத்து



பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் பெரும் பகுதியினர் மனு போட்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு நட்ட ஈடு இன்னும் வழங்கப்படவில்லை. வழங்கப்படாத அனைவருக்கும் எப்போது நட்ட ஈடு வழங்கப்படும் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் நான் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டேன். இன்னும் Pending-ல் இருக்கிறவர்களுக்கு எந்தக் காலவரையறைக்குள் வழங்கப்படும் என்பதை அறிவிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதைத்தான் நான் என்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறேனே. இடைக்கால அறிக்கைகள்தான் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தரப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கையையொட்டி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் மிச்சம் தரப்பட வேண்டியது இருக்கிறது. முழுமையான அறிக்கை விரைவில் அவையிலே வைக்கப்படும். அதிலே எல்லா விவரங்களும் அடங்கியிருக்கும். அதற்குப் பிறகு மிச்சம் யார், யாருக்குத் தர வேண்டுமோ, அந்த எஞ்சிய தொகை மற்றவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, சிறு தொழிலதிபர்களை நான் கூட்டிய கூட்டத்திற்கு அழைக்கவில்லை என்று சுப்பராயன் அவர்கள் நேற்றைக்குச் சொன்னார்கள். அது சரியில்லை, தவறு. ஏனென்றால் அந்தக் கூட்டத்திற்கு — வணிகர்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்திற்கு—சிறு தொழிலதிபர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

(1) தலைவர், தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கம், TANSTIA.

(2) இந்திய சிறுதொழில் கழகங்களின் கூட்டமைப்பு (தெற்கு மண்டலம்).

(3) தமிழ்நாடு சிறிய மற்றும் குறுந்தொழில் எச்.டி.பி.எப். ஓவன் சாக்குகள்/பைகள் தயாரிக்கும் சங்கம்.

(4) தலைவர், தேசிய சிறு தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு.

(5) தலைவர், தமிழ்நாடு சிறு Tyre retreading பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம்.

(6) தமிழ்நாடு மெட்டல்வேர் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சங்கம்.

(7) தமிழ்நாடு மாநில கார்டு உற்பத்தியாளர்கள் சங்கம்.

(8) தென்னிந்திய பின்னலாடை உற்பத்தியாளர்கள் சங்கம்.

(9) கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் ஆகிய இந்தச் சங்கங்கள் எல்லாம் அழைக்கப்பட்டு அவர்களுடைய கருத்துகளும் கேட்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-30*

அவர் இன்னொன்றும் சொன்னார். வேளச்சேரியிலே கடந்தகால அரசு அமைத்த பெண்களுக்கான தொழிற்பேட்டையைக் கைவிட்டுவிட்டோம் என்று சொன்னார். திடீரென்று சுப்பராயன் அவர்கள், கடந்தகால அரசு அதை அமைத்தது, அதை அமைத்தது எல்லாவற்றையும் கெடுத்துவிட்டீர்கள் என்று பேசினார். என்னவென்று தெரியவில்லை எனக்கு. திடீரென்று அப்படிப் பேசினார். (சிரிப்பு) நான் அவருக்குச் சொல்லிக்கொள்கின்றேன். கடந்தகால அரசு அறிவித்தது, அறிவித்ததோடு சரி. பிறகு அது என்னவோ நிறைவேறவில்லை. ஆனால் இந்த அரசு அதே இடத்தில் என்ன அறிவித்திருக்கிறது என்றால், நிதிநிலை அறிக்கையில் 65-ஆவது பத்தியிலே இருக்கிறது; பார்த்தால் தெரியும். வேளச்சேரி அருகே இந்தியாவிலேயே முதல் முறையாக கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது. இது அடுத்த சில மாதங்களில் செயல்படத் தொடங்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. அதனைப் படித்தால் புரியும்.

தமிழ்நாட்டிலே சிறு தொழில்கள் நலிந்து போயிற்று, அழிந்து போயிற்று என்று சொன்னார்கள். அதற்கு சில பேர் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே இருந்துகூட 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தார்கள். அது யார், யார் என்று எனக்குத் தெரியும். (சிரிப்பு) ஆனால் தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் நலிந்த நிலையில் உள்ளதாக எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? சுமார் 50 ஆண்டுகாலமாக, நேற்று வரையிலும் பார்த்தீர்கள் என்றால் 1-4-1996 வரையிலும் பார்த்தால், 50 ஆண்டுகால சிறு தொழில் வளர்ச்சி, உருவான சூழ்நிலை இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் 2,34,400 சிறு தொழில்கள் பதிவாகியுள்ளன. ஆனால் இந்த 4 ஆண்டுகாலத்திலே 1996-97-லே 29,445, 1997-98-லே 31,159, 1998-99-லே 29,623, 1999-2000-லே 27,234 (பிப்ரவரி மாதம் 2000 முடிய) மொத்தம் 1,17,461 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை என்பதை நான் மிகுந்த பெருமிதத்தோடு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



உறுப்பினர் செல்லக்குமார் தினமணியிலே வந்த ஒரு செய்தியைச் சொன்னார். அதைத்தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஊக்குவிக்க மாநில அரசுகள் பல்வேறு வகையான வரிச் சலுகைகளை போட்டி போட்டுக்கொண்டு வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எல்லாம் மிக நன்றாக அறிவோம். இந்த முரண்பாடான நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து சமச்சீர் வரி விதிப்பு முறையைக் கொண்டு வருவது குறித்து 16-11-1999 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்களுடைய கூட்டத்திலே விவாதிக்கப்பட்டு படிப்படியாக சலுகைகளையெல்லாம் நீக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எனவே வரிச் சலுகை அளிப்பது குறித்து 23-1-2000 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து அரசு ஆணை நிலை எண் 12, வணிக வரித் துறை, நாள் 23-1-2000-ல் ஆணை வெளியிடப்பட்டது. ஏற்கெனவே அந்த ஆணையின்படி சலுகைகளை அனுபவித்து வரும் தொழிற்சாலைகள் தகுதிக் காலம் வரை தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும், இனிமேல் புதிதாகத் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு சலுகைகள் கிடையாது என்றும், ஏற்கெனவே கட்டுமானப் பணி தொடங்கி pipeline உற்பத்தியைத் தொடங்காத தொழிற்சாலைகள் 22-1-2002-க்குள் உற்பத்தியைத் தொடங்கியிருந்தால் அச்சலுகைகளைப் பெறலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஊக்க உதவிச் சலுகை புதிய தொழிற்சாலைகளுக்கு மட்டும் பொருந்துமா அல்லது விரிவாக்கம், மாற்றியமைப்பு செய்யும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்துமா என்பது குறித்து விளக்கம் தேவைப்பட்டது. எனவேதான் 3-2-2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுகுறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு அண்டை மாநிலமான கேரளாவிலே பின்பற்றப்படும் முறையையும் கருத்திலேகொண்டு ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் விரிவாக்கம், மாற்றுத் தொழிலிலே ஈடுபட்டு 23-1-2000 அல்லது அதற்கு முன்பாக தேவையான இயந்திரத் தளவாடங்களைப் பெற்றிருந்து அவை 22-1-2001 அல்லது அதற்கு முன்பாக தனது விற்பனை உற்பத்தியைத் தொடங்கியிருந்தால் மட்டுமே சலுகையைப் பெறலாம் என்ற முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவேதான் இரண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. எந்த முதலாளிக்கும், எந்த அதிபருக்கும் ஏதோ சலுகை செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல; இன்னும் சொல்லப்போனால் பெரிய முதலாளிகள் இதிலே பாதிக்கப்பட்டு அலைந்துகொண்டிருக்கிறார்கள், மறுபடியும் அதைக் கொண்டுவாருங்கள், கொண்டுவாருங்கள் என்று. நாங்கள் இப்போது அதை

முடியாது என்று சொல்லியிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல Kerala pattern மாறுமேயானால், அதனால் நமக்குப் பாதகம் ஏற்படுமேயானால் மறுபடியும் மறுபரிசீலனை செய்யவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

**திரு. ச. அழகிரி:** ஒரேயொரு Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order-ஆ? இதில் எப்படி Point of order வரும்?

**திரு. ச. அழகிரி:** Point of clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்போது இரண்டு அரசாணைகளை அறிவித்ததைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாகவே தொழில்கள் வர வேண்டுமென்று நாமே விரும்புகிறோம். இப்போது ஒரு தொழிற்சாலை விரிவாக்கத்தில் இருக்கிறது. அவர்களுக்கு 23-1-2000 இல் நீங்கள் குறிப்பிட்ட அரசாணையின் பிரகாரம் 2 ஆண்டுகளுக்குள் அவர்கள் உற்பத்தியைத் தொடங்கினால் அவர்களுக்கு 7 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரை இந்தச் சலுகை கிடைக்கும் என்று நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால், அதன் பிறகு, 7-2-2000-லே அந்தச் சலுகையை மாற்றி அறிவித்திருக்கிறீர்கள். வெளியில் என்ன சொல்லப்படுகிறது என்றால், வேறொரு சிமெண்ட் ஆலை பலன்பெற வேண்டும் என்பதற்காக இன்னொரு சிமெண்ட் ஆலையை நீங்கள் நசுக்குகிறீர்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டு இந்த அரசின் மீது இருக்கிறது. எனவே, 15 தினங்களுக்குள் இரண்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன? கேரளாவில் அவர்கள் மாற்றிக்கொண்ட பிறகு தமிழக அரசு அதை மாற்றிக்கொள்ளுமா? விரிவாக்கத்திற்குச் சலுகைகள் அளிக்குமா? இதைப்போன்ற, தனிப்பட்ட சிமெண்ட் ஆலைகளை நசுக்குகிற போக்குகளை அரசாங்கம் கைவிடுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் பதிலுரையின்போது விவசாயிகளுக்கு நாங்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவசாயத்தைப் பற்றி இல்லை. இப்போது இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமா?



**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னை நீங்கள் allow பண்ணுங்கள். ஒன்றே ஒன்று–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் உங்களை அப்போது allow பண்ணினேன். இப்போது allow பண்ணவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றி என்றால் பேசுங்கள். இல்லையென்றால் நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை, நான் ஒன்றே ஒன்றை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) நான் இப்போது அனுமதிக்க முடியாது. நீங்கள் நினைக்கிற போதெல்லாம் எழுந்து நிற்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என் அண்ணன்களை எல்லாம் நீங்கள் பேச அனுமதித்தீர்கள். ஆனால், என்னை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உங்களுக்கு அண்ணன்கள் தான். நாங்கள்தான் ஆகாதவர்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரேயொரு வரி. நான் இந்நேரம் பேசியிருப்பேன். இந்நேரம் பேசி முடித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்படி அடிக்கடி எழுந்து நிற்பதை நான் அனுமதிக்க முடியாது. உங்களுக்கு முதலிலே அனுமதி கொடுத்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்நேரம் பேசி முடித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் செய்துள்ள திட்டங்களை முதல்வர் அவர்கள் பட்டியலிட்டுக் காட்டினார்கள். இதே அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது எங்களை முழுமையாக 5 ஆண்டுகள் நீங்கள் ஆளவிடுங்கள்; இப்போதே நீங்கள் கேட்டால் எப்படிக் கொடுக்க முடியும் என்று ஏற்கெனவே கூறியிருப்பது அவைக் குறிப்பிலே இருக்கின்றது. ஆகவே,

நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வருடத்திற்கு ஐம்பதே ஐம்பது ரூபாய் கொடுத்திருந்தால்கூட, இந்த 4 ஆண்டுகளில் 200 ரூபாய்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 4 ஆண்டுகள்தான் முடிந்திருக்கின்றன. 5 ஆண்டுகள் ஆள விடுங்கள். இப்போது ஆளை விடுங்கள். (பலத்த சிரிப்பு).

இன்னும் ஏராளமான குறிப்புகள் வைத்திருக்கின்றேன், உறுப்பினர் செல்லக்குமார் போன்றவர்களுக்கெல்லாம் சில விளக்கங்கள் தருவதற்கு. தொடர்ந்து கூட்டம் நடைபெற இருக்கிற காரணத்தால் பல்வேறு மானியங்களில் அவற்றைப்பற்றிப் பேசலாம் என்ற அந்த அறிவிப்போடு, சில அறிவிப்புக்களை, முக்கியமான அறிவிப்புக்களை இம்மாமன்றத்தின் மூலமாகத் தமிழ் மக்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரேயொரு சின்ன பாயின்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு உருண்டை வாங்குவது பற்றி நான் இன்னும் பேசலாம் என்று நேற்றைக்கு நீங்கள், சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் உங்களைப் பேசலாம் என்று சொல்லவில்லை. நீங்கள் தவறான கருத்தைச் சொன்னால் நான் நடவடிக்கை எடுப்பேன். உங்களை ஒன்றும் பேச நான் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் பேச இருக்கிறார்கள். நீங்கள் பதிலைக் கேளுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்கள் பெயரைச் சொல்லித்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அது தவறான தகவல். நான் அதைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தேவையில்லை, நான் அதை அனுமதிக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகச் சொன்னேன். முதலமைச்சர் பதில் சொல்கிறபோது சொன்னார்கள் என்றால் கேளுங்கள். விதி 110-ல் கேள்வி கேட்கக் கூடாது. முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சத்துணவு பற்றி, அது தனி இலாகா, அந்தத் தனி அமைச்சர் அதுபற்றி நேற்றைக்கே விளக்கம் அளித்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-40

நான் நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியுள்ள நாங்குநேரி திட்டம் ஒரு ஒளிமயமான முன்னேற்றத்தை உருவாக்கவிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். நாங்குநேரியில் ஒரு பூங்கா அமைக்க 3000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தத் திட்டமிட்டு, அதிலே ஏறத்தாழ 2000 ஏக்கருக்கு மேற்பட்ட இடம் நம் கைவசம் வந்திருக்கின்றது. 3000 ஏக்கரும் மொத்தமாக அரசுக்கு வரவிருக்கிறது. அந்த நாங்குநேரியைப் பற்றிய ஒரு தகவலை மாத்திரம் இங்கே நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நிதிநிலை அறிக்கையில், 'நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற் பூங்காவுக்காக — High-tech industrial park — சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை — Detailed Feasibility Report — ஒன்றை இரு பிரபல நிறுவனங்கள் தந்திருக்கின்றன. அங்கு ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் — Export Promotion Zone — உருவாக்க மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கக்கூடிய இந்த மாபெரும் திட்டப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்' என்று 24-3-2000 அன்று குறிப்பிட்டிருந்தேன்.

இதனையொட்டி, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் 31-3-2000 அன்று வெளியிட்டுள்ள ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையில், நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற் பூங்காவை, சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக—Special Economic Zone—அறிவித்துள்ளார். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான மத்திய அரசின் கொள்கையில் இரண்டே இரண்டு இடங்களுக்குத்தான் Special Economic Zone என்ற சிறப்புத் தகுதி வழங்கி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்று, தமிழ்நாட்டில் தென் மாவட்டத்தில் அமைந்துள்ள நாங்குநேரி உயர்

தொழில்நுட்ப தொழிற் பூங்கா (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்று, குஜராத் மாநிலத்தில் போசித்ரா. இது அகில இந்திய அளவில் நமது மாநிலத்திற்கு — குறிப்பாக தென் மாவட்டங்களின் தொழில் முயற்சிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் ஆகும்; பெருமையுமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட பெருமைமிக்க அங்கீகாரத்தைத் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களுக்கு வழங்கியமைக்காக மத்திய அரசை நாம் பாராட்ட வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கு வாழ்த்துரைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் தொழில் முனைவோர்களாலும், பத்திரிகைகளாலும், பொருளாதார நிபுணர்களாலும் பாராட்டி, வரவேற்கப்பட்டுள்ளது மத்திய அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கை.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எனப்படும் வரியற்ற ஏற்றுமதி வர்த்தக மண்டலங்கள் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்திருப்பதை, மத்திய ஐக்கிய முன்னணி அரசில் நிதியமைச்சராக இருந்து, அனைவரும் பாராட்டத்தக்க விதத்திலே பணியாற்றிய திரு. ப. சிதம்பரம் வரவேற்றுள்ளார்.

அதைப்போலவே திரு. வி.ஆர். பஞ்சமுகி என்கிற வளர்ந்து வரும் நாடுகளின் ஆய்வு மற்றும் தகவல் அமைப்பின் தலைமை இயக்குநர் அவர் இதை வரவேற்றிருக்கிறார். ``The new Exim Policy announced by Mr. Murasoli Maran contains the right kind of messages with the right kind of emphasis required for the new millennium" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சீன நாட்டின் சாதனைகளையும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சமீபத்திய பொருளாதார நடவடிக்கைகளையும் பின்னணியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையில் நமது நாங்குநேரி இடம் பெற்றிருப்பது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி வரலாற்றில் நிச்சயமாக ஒரு மைல் கல்லாக அமைந்திடும்.

நாங்குநேரியில் அமையவுள்ள உயர் தொழில்நுட்ப தொழிற் பூங்கா Special Economic Zone என்ற தகுதியைப் பெறுவதால், இந்தத் தொழிற் பூங்காவில் உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும், மூலப் பொருட்களையும் வரியின்றி இறக்குமதி செய்துகொள்ளலாம்; உள்நாட்டுச் சந்தையிலிருந்து அவற்றை



வாங்கும்போதும் வரி கிடையாது; சுங்க வரி கட்டுப்பாடுகள் இங்கு அமையும் தொழில்களுக்குப் பொருந்தாது; வங்கிச் சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் தவிர, பிற விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நடைமுறைச் சிக்கல்களில் இருந்து ஏற்றுமதியாளர்கள் விடுவிக்கப்பட்டு விடுவார்கள். இதனால் நாங்குநேரி, வருங்காலத்தில் ஒரு சிறு சீனாவாக (Mini-China) மாறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற் பூங்காவில் 8,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஏற்படும், வேலைவாய்ப்பும் ஆயிரக்கணக்கானவர்களுக்குக் கிட்டும்.

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம்; தூத்துக்குடி விமான நிலைய மேம்பாடு; சேதுசமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தவும், சுற்றுச்சூழல் விளைவுகளைக் கண்காணிக்கவும் மத்திய அரசு 4 கோடியே 80 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பது; அதிநவீன வசதிகளோடு குளச்சல் துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக உருவாக்க, தமிழக அரசு மலேசிய அரசோடு இணைந்து திட்டமிட்டிருப்பது — ஆகிய இந்தப் பின்னணியில் Special Economic Zone என்ற அந்தஸ்துடன் நாங்குநேரியில் அமையவுள்ள உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா, தென்மாவட்டங்களின் ஈர்ப்பு மையமாக விளங்கிடும் என்பதை நான் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

புதுடெல்லியிலே அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் "இந்திய மொழிகளின் மையம்" (Centre for Indian Languages) தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கும், தமிழ்மொழி ஆராய்ச்சிக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்திருப்பதை அறிந்து இந்த அரசு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது. அப்பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத்தின் தலைவர் பேராசிரியர் நசீர் அகமதுகான் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கும் கோரிக்கையினை ஏற்று, தமிழ்மொழி இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுகளை விரிவுபடுத்தவும், டெல்லியிலே வாழும் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகளின் மையத்தில் தமிழ் இருக்கை (Tamil Chair) ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கென்று தனியே நிதியொதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அத்துடன், ஆண்டுதோறும் 7 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு தென்னை சாகுபடி பரப்பு அதிகரித்துக்கொண்டு வருகிறது. தென்னை உற்பத்தியில் இந்தியாவிலேயே கேரளத்திற்கு அடுத்து தமிழகம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோய்களிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னை சாகுபடியை மேம்படுத்தவும், தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும், 12-3-2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையையொட்டியும் தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் (Tamil Nadu Coconut Development Authority) உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நடத்தும் 210 நியாய விலைக் கடைகள் சிறப்பாக நடைபெற்றுவருவதைக் கருத்தில்கொண்டு அந்த எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்துள்ளேன். அத்துடன், மாவட்டங்களிலே உள்ள பெண்களின் சுய உதவிக் குழுக்கள் 500 அட்டைகளுக்குக் குறையாமல் சேர்த்து, நியாய விலைக் கடைகள் அமைத்து நடத்துவதற்கு முன்வந்தால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுமதி வழங்கவும், ஊராட்சித் தலைவர்கள் 500 அட்டைகளுக்குக் குறையாமல் நியாய விலைக் கடைகளை அமைத்து மகளிரையே நியமனம் செய்து நடத்த முன்வந்தால் ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோலவே நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகளை நடத்த முன்வந்தால் அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

வணிகர்கள் கொடுக்கும் புகார்களை உடனடியாகக் கவனித்து விசாரணை செய்து, பாதுகாப்பும் நியாயமும் வழங்கிட இப்போது நடைமுறையிலே உள்ள காவல் துறை அமைப்பில் காலதாமதம் ஏற்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் உருவாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, வணிகர்கள் தரும் புகார்களை உடனடியாக விசாரித்து நியாயம் வழங்குவதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் (S.P. Office) தனிப் பிரிவு ஒன்றை (Police Special Branch for Traders) அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலே பெரும் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு அவர்களுக்கென்று நல வாரியம் ஒன்று அமைத்துள்ளது. இதில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகளிருக்கு மகப்பேறு நலன், பணி ஓய்வுகாலப் பயன்கள் போன்ற உதவிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களின் கோரிக்கைகளை ஏற்று இவர்களுக்குத் தனித் தனியாக நல வாரியங்களை அமைக்க முடிவு எடுக்கப்பட்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதைப்போலவே முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்கள் மிகுந்த எண்ணிக்கையில் இருப்பதைக் கருத்தில்கொண்டு அந்த இரு பிரிவினருக்கும் என தனித் தனியே நல வாரியம் அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலையில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாகக் குடியிருப்போருக்கு பட்டா வழங்க வேண்டும் என்று முடிவு எடுத்து, முதலில் 20 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு என்றும், பிறகு நிதிநிலை அறிக்கையிலே அதை 10 ஆண்டுகள் என்றும் குறைத்து அறிவிக்கப்பட்டது. இஃதன்னியில் இப்போது அதைப் பற்றிய விளக்கம் ஒன்றைத் தர விரும்புகின்றேன். உதாரணமாக ஒரு சர்வே நம்பரின் மொத்தப் பரப்பளவு 2 ஏக்கர் என்று வைத்துக்கொள்ளலாம். அதில் 30 குடும்பங்கள் வீடு கட்டியும், குடிசை போட்டும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய அனுபவத்திலேயுள்ள மொத்தப் பரப்பளவு 1 ஏக்கர், 25 சென்ட். மீதி 75 சென்ட் இடம் காலியாக உள்ளது. 30 குடும்பங்களில் 15 குடும்பங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலும், 10 குடும்பங்கள் 7 ஆண்டுகளுக்கு மேலும், 5 குடும்பங்கள் 2 ஆண்டுகளுக்கு மேலும் குடியிருந்து வருகிறார்கள். இந்த 2 ஏக்கரும் அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலை இருக்குமானால் பட்டா தர வேண்டும். அங்கு 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 15 குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல் 7 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 10 குடும்பங்களுக்கும், 2 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 5 குடும்பங்களுக்கும்கூட பட்டா வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அதே சர்வே நம்பரில் காலியாகவுள்ள 75 சென்ட் இடத்தையும்கூட அதே ஊரில் வீட்டுமனை இல்லாத தகுதியுள்ள ஏழையெளியோருக்கும் பிரித்து பட்டா வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-50*

நிலவரி பாக்கிக்காகவும், கூட்டுறவுக் கடன் பாக்கிக்காகவும், மாவட்டங்களில் உள்ள வெவ்வேறு மட்டங்களில் அரசு அனுமதியின்றி ஜப்தி செய்து, ஜப்தியின் மூலம் வசூல் செய்வது என்று இதுவரை முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நடைமுறையை மாற்றி, இனி இதுபோன்ற நேர்வுகளில் அரசின் அனுமதி ஆணையின்றி, ஜப்தி நடவடிக்கையிலே யாரும் ஈடுபடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறையை மக்களுக்குத் துரிதகதியில் பணியாற்றும் துறையாக மாற்றுவதற்கு ஏதுவாக மாவட்டங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தையும், விவசாயிகளுக்கு பட்டா வழங்கும் திட்டத்தையும் முனைப்புடன் செயல்படுத்துவோம் என்று நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், கூட்டு பட்டா வாங்கியிருப்பது புள்ளிவிவரங்களில் சேகரிக்கப்பட்டுள்ளது. அதில் பலர் தனி பட்டா வைத்துக்கொள்ள விரும்பியும், சில நிர்வாகக் காரணங்களால் அது இயலாமல் இருக்கிற நிலை என் நேரடி கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால், இந்தக் கூட்டு பட்டாவினை விரும்பாதவர்களுக்குத் தனி பட்டாவாகக் கொடுப்பதற்கு நிர்வாக நடவடிக்கையை முடுக்கிவிடுவதற்காக தீவிரப் பதிவு மாற்றம் மற்றும் உட்பிரிவு முனைப்புத் திட்டம் ஒன்றை இன்னும் ஆறு மாத காலத்திற்குள் செயல்படுத்தி முடித்திட உள்ளோம். இதன்மூலம் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பலனடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு 4-ன்கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள், புதிய படங்களுக்குச் செலுத்தும் வரி 30 விழுக்காட்டில் இருந்து 25 விழுக்காடாகக் குறைகிறது என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இந்த வரிச் சலுகை, இணக்க வரி செலுத்தும் திரையரங்குதாரர்களுக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, கேளிக்கை வரிச் சட்டம் 5(ஏ) மற்றும் 5 (பி)-ன்படி விதிக்கப்படும் இணக்க வரியிலும் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும்.

தற்போது சித்த மற்றும் யுனானி மருந்துகளுக்கு வரி விலக்கு உள்ளது. திரு. குமாரதாஸ் அவர்கள், ஆயுர்வேத மருந்துகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று கோரினார். ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத



மருந்துகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் பேசவில்லை. ஒரே ஒருவர் தான் குரல் கொடுத்தார். திரு. சுப்பராயன். அவர்கள் பேசும்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் பேசியிருக்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தாங்கள் பேரவைத் தலைவர். எப்போதும் பேசலாம். (சிரிப்பு) சுப்பராயன் அவர்கள் பேசும்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ன ஆயிற்று, இந்த ஆண்டு நிதியே ஒதுக்கப்படவில்லையா என்று கேட்டார். எப்படி சுப்பராயனே இந்தப் புத்தகத்தைப் படிக்காமல் இருந்தார் என்று தெரியவில்லை. ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை, புத்தக எண் 27, பக்கம் 99-ல் இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.117.50 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த ஆண்டு இந்தத் தொகையை உயர்த்தித்தர கோரிக்கை வைக்கவேயில்லை. சுப்பராயன் மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவில் ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதை யாரும் கேட்காததால்தான் நிதிநிலை அறிக்கையில் நானும் விட்டுவிட்டேன். ஏனென்றால், திட்டம் நிறைவேற்றினால், கட்டாயம் கேட்பார்கள். (குறுக்கீடு) சுப்பராயன் அவர்கள் மட்டும் ஒரு கோடி ரூபாய் தர வேண்டுமென்று கேட்டார். எனினும் இத்திட்டத்திற்கு இருக்கும் மக்கள் வரவேற்பை அனுசரித்து, கடந்த ஆண்டு தொகுதி ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ரூ.60 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நல்லபல கருத்துக்களையெல்லாம் இந்த மாமன்றத்திலே இந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் எடுத்து வைத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவிலே அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் (6-4-2000) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*48. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*49. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

—0—

222779

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.